உரும்பராய்
இந்துக் கல்லூரி

URUMPIRAI
HINDU COLLEGE

# வித்தியா

# VIDHYA

1979

University of Jaffna
373
URU
250130(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

அரும்பய னல்கச் சைவம்
ஆர்தமிழ் கலைக ளோங்கப்
பெரும்பணி புரிந்து வந்த
பீடுகொள் கல்விக் கோயில்
உரும்பராய் இந்து சொந்த
வுயர்மர வொளிர நாளும்
விரும்பியே கண்ட மேன்மை
வித்தியா விளங்கி வாழ்க.

— கவிஞர் வி. கந்தவனம்.

## சஞ்சிகைக் குழு

பத்திராதிபர்:- திரு சிவ. மகாலிங்கம்

சஞ்சிகைக் குழு:-

1. திரு வீ. ஆறுமுகம்
2. திரு. சி. தாமோதரம்பிள்ளை
3. திரு. V. சின்னத்தம்பி
4. திரு K. கதிரவேலு
5. திரு பொன். சுந்தரலிங்கம்
6. திரு. K. ஸ்ரீதரன்
7. திருமதி T. ராஜானந்தன்
8. திருமதி B. கந்தையா
9. திருமதி M. தவரட்ணம்
10. திருமதி P. பஞ்சலிங்கம்

Please address all Correspondence relating to 'Vidhya'
*To*


**Siva Mahalingam**
'Editor'
'Vidhya'
Urumpirai Hindu College
Urumpirai.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

373
URU
AR
2001

# வித்தியா

## உரும்பராய் இந்துக் கல்லூரிச் சஞ்சிகை

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

★

1979

★

ARCHIVES

250130

250130

University of Jaffna
250130
Library

# VIDHYA

## The Magazine of Urumpirai Hindu College

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | இறை வணக்கம் ... | 1 |
| 2. | வாழ்த்து ... | 2 |
| 3, | கல்லூரிக் கீதம் ... | 3 |
| 4. | வாழ்த்துச் செய்தி — கல்லூரி அதிபர் அவர்கள் ... | 4 |
| 5. | இதயம் பேசுகிறது ... | 5 |
| 6. | பரிசு நாள் அறிக்கை ... | 7 |
| 7. | நெய்தல் திணையே திருவாசகம் — பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை | 15 |
| 8. | நன்றிக்கடன் — திரு. ச. விநாயகமூர்த்தி ... | 18 |
| 9. | நவமணிகளில் நான் கண்ட தவமணி | 20 |
| 10. | நான் வளர்க்கும் செல்லப் பிராணி ... | 22 |
| 11. | உள்ளம் ... | 23 |
| 12, | எனது பஸ் வண்டிப் பிரயாணத்தின்போது ஏற்பட்ட மறக்கமுடியாத சம்பவம் | 24 |
| 13 | உண்மையின் உயர்வு ... | 25 |
| 14 | போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து ... | 26 |
| 15 | பேராசையின் விளைவு ... | 27 |
| 16 | நவீன உலகத்துப் பெண்கள் ... | 29 |
| 17. | பனை ... | 31 |
| 18. | பட்சணப் பிசாசுகள் ... | 32 |
| 19. | நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்...... ... | 33 |
| 20. | குறளும் வாழ்வும் ... | 35 |
| 21. | உரும்பராயில் இருந்து சிகிரியா வரை ... | 38 |
| 22. | நான் சென்று மீண்ட சுற்றுலாவில் பெற்றுக்கொண்ட சுவையான அனுபவங்கள் | 41 |
| 23 | இசைக்குயில் திரு ஐ. தருமலிங்கம் அவர்கள் ... | 46 |
| 24 | The Free Text Books ... | 47 |
| 25. | My Pet ... | 47 |
| 26. | My Self ... | 48 |
| 27. | My Visit to the Zoo ... | 48 |
| 28. | My Best Friend ... | 49 |
| 29. | My Birthday Party ... | 50 |
| 30. | Our School Library ... | 50 |
| 31. | Our Educational Tour ... | 51 |
| 32. | A Picnic at Peradeniya Gardens ... | 52 |
| 33. | My Country ... | 54 |
| 34. | An Excursion ... | 55 |
| 35. | A Contented Life of Farmer ... | 57 |
| 36. | From The Editor's Pen ... | 59 |
| 37. | 1979 ஏப்பிரல் க. பொ. த. (உயர்தரம்) சித்தியடைந்தோர்க்கு வாழ்த்துக்கள் | 61 |
| 38. | 1979 ஆகஸ்ட் க. பொ. த. (உயர்தரம்) சித்தியடைந்தோர்க்கு வாழ்த்துக்கள் | 62 |
| 39. | விளையாட்டறிக்கை ... | 63 |
| 40. | மாணவ முதல்வர்கள் மன்ற அறிக்கை 1979 ... | 65 |
| 41. | விஞ்ஞான மன்றம் 1979 — 1980 ... | 66 |
| 42 | வழிகாட்டிகளின் அறிக்கை 1979 ... | 67 |
| 43. | சைவ மாமன்ற அறிக்கை ... | 68 |
| 44. | உயர்தர மாணவர் மன்ற அறிக்கை ... | 70 |
| 45. | வள்ளுவர் மன்றம் இரண்டாவது அறிக்கை ... | 72 |
| 46. | சாரணர் அறிக்கை ... | 73 |
| 47. | விழிமின்! எழுமின்!! இயன்றதைச் செய்ய முனைமின்!!! ... | 74 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை வணக்கம்

## தேவாரம்

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போமல்லோம்
மாதேவர்க் கேகாந்தர் அல்லாராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே.

— திருநாவுக்கரசர் —

## திருவாசகம்

அன்பினால் அடியேன் ஆவியோடு ஆக்கை
ஆனந்தம் ஆய்க் கசிந்து உருக
என்பரம் அல்லா இன் அருள் தந்தாய்
யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறு
முன்பும் ஆய்ப் பின்பும் முழுதும் ஆய்ப் பரந்த
முத்தனே முடிவு இலா முதலே
தென் பெருந்துறையாய் சிவபெருமானே
சீர் உடைச் சிவபுரத்து அரசே.

— மாணிக்கவாசகர் —

## திருமந்திரம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதியில்லை நும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர் நினைந்து உய்மினே.

— திருமூலர் —

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து

உலக திலகமா மொருபெரு மீழத்துச்
சிரமென மிளிரும் யாழ்ப்பா ணத்து
கல்வி செல்வங் கமத்தொழி லோங்கிய
உரும்பராய் நகரில் உயர்சைவ நெறிவழி
கல்வி கற்கும் கவின்பண் பாட்டின்
அடிப்படை கொண்டு ஆவிர்ப் பவித்த
இந்துக் கல்லூரி இசைந்த மாணவர்
சிந்தனை வடிவாய்த் தேசிகர் ஆய்வுகள்
முந்தவே செறிந்து முழுமதி யென்ன
வந்திடு 'வித்தியா' மலரே வருக
ஆங்கிலந் தமிழே ஆகிய மொழிவளர்
கலைகள் விஞ்ஞானம் கணிதம் வரலாறு!
சமய சாத்திரங்கள் தக்க விதமாய்க்
கட்டுரை தாங்கிக் கவிகளும் அணிந்து
புனைவனை புனைந்து புதுவழி காட்டி
எனைவரும் மதிக்க ஏத்து கலைவாணியே!
ஆண்டு தோறும் அறிவெனும் மதுக்கொண்
டண்டு சுவைக்க எழில்கொள் நங்காய்!
தேகப் பயிற்சியும் திகழ்கிழற் படங்களும்
தாக முற்ற சாரணர் குழாமும்
கொண்டு இலங்கும் குமுத நாயகமே!
'வித்தியா' தேவி உனைவாழ்த் துவமே
மாவலி கங்கை மணலினும் பலவே
நாவல வாழ்த்துகள் நண்ணிட
வாழ்க நீடுழி! வாழிய நெடிதே!!

வித்துவான் சைவப் புலவர் பண்டிதர், இ. நவரத்தினக் குருக்கள்
இளைப்பாறிய ஆசிரியர் — இந்துக்கல்லூரி உரும்பராய்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் கீதம்

மலர்கலை உரும்பராய் இந்துக் கல்லூரி
வான் புகழ் ஓங்கியே வாழ்க.

மெய்ஞ்ஞான மன்றில் விளைஞானத்திருவை
விஞ்ஞானம் நல்கிட வாழ்க.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
உண்மையை மாணவர்க் குணத்து.

மெய்மகா வாக்கிய மகா
மெய்ப்பொருள் காணுவ தறிவு
விளங்கநிரந்தரம் வாழ்க.

மணிகொடி உரும்பராய் மாநகர் எடுத்தே
வான்புகழ் ஓங்கியே வாழ்க.

வாழ்க! வாழ்க! வாழ்க!
இந்துக் கல்லூரி வாழ்க.
எங்கள் கல்லூரி வாழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அதிபர் திரு. இ. சிவானந்தன் அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

"வித்தியா" தொடர்ந்தும் இவ்வாண்டு வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். நல்ல பல விடயங்களை உள்ளடக்கி வெளிவரும் இக் கல்லூரிச் சஞ்சிகையான 'வித்தியா' மாணவர் மத்தியில் நிலைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. பாடசாலைகளின் வளர்ச்சியில் 'வித்தியா' போன்ற கல்லூரிச் சஞ்சிகைகள் வகிக்கும் பங்கு அளப்பரியது. அதை நல்ல முறையில் பயன்படுத்திப் பயன்பெற வேண்டியது கல்லூரிகளின் பொறுப்பாகும்.

ஒரு கல்லூரியின் வளர்ச்சியில் பங்குகொள்ள வேண்டிய சகலரையும் ஒன்றிணைத்து ஒரே நோக்குடன் இயங்கவைக்கும் சக்தி இத்தகைய சஞ்சிகைகளுக்குண்டு. இந்நோக்கம் நிறைவேற 'வித்தியா' நல்ல முறையில் பயன்பட வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

பிரசுரச் செலவுகள் அதிகரித்துள்ள இக்கால கட்டத்தில் 'வித்தியா' தொடர்ந்தும் வெளிவருவது வரவேற்கத்தக்கது இம் முயற்சியில் சோர்வின்றி உழைத்துவரும் அனைவரும் பாராட்டிற்குரியவர்கள்.

'வித்தியா' நல்ல முறையில் வெளிவந்து நற்பணியாற்ற எனது மனமுவந்த வாழ்த்துக்கள்.

யா/உரும்பராய் இந்துக்கல்லூரி,
உரும்பராய்.
05 - 12 - 1979

---


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது அதிபர்



திரு. இ. சிவானந்தன் B. A. (Cey.) Dip-in-Ed.
S. L. E. S.

## எமது உப-அதிபர்



திரு. செ. சிவபாலன் B. Sc. (Spl.) (Cey.), Dip-in-Ed.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திராதிபர்



திரு. சிவ. மகாலிங்கம்

மாணவர் பத்திராதிபர்கள்



செல்வன் அ. யோகராசா



செல்வன் த. நரேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் பேசுகிறது

சிவ. மகாலிங்கம்

உரும்பராய் இந்துக் கல்லூரியின் 1979-ம் ஆண்டுச் சஞ்சிகையை வெளியிடுவதில் நாம் மிகவும் பெருமைப் படுகிறோம். "வித்தியா" சஞ்சிகை கல்லூரியின் வளர்ச்சிகளையும், செயற்பாடுகளையும், மாணவர்கள் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் ஆகிய அனைவருக்கும் வெளிப்படுத்தும் சாதனமாக அமைந்துள்ளது.

தனி மனிதனது சிறப்பிற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் கல்வியே அருந்துணையாகும். கல்வியின் முழுப் பயன் ஒரு முழு மனிதனை உருவாக்குவது தான் எனச் சுவாமி விவேகானந்தர் கூறுகிறார். மனிதன் வெறும் தசைகள், எலும்புகள், இரத்தம் ஆகியவற்றின் சேர்க்கையால் உருவாக்கப்பட்ட உடம்பை மட்டும் கொண்டு இராமல் நல்ல அறிவாற்றலையும், சிந்தனையையும், துல்லிய உணர்வுகளையும் கொண்டவனாகவும் திகழ்கிறான். ஒரு மனிதனுடைய ஆரோக்கியமான சிந்தனைகள் அவனுடைய வாழ்வை வளம்படுத்துகிறது. இதனைத்தான் "நல்லவை எண்ணல் வேண்டும்." என மகாகவி பாரதியும் கூறுகிறான். மாணவர்களுடைய உடம்பை வளர்ப்பதில் எப்படிப் பெற்றோர்கள் செயற்படுகிறார்களோ அதேபோல அவர்களுடைய அறிவை வளர்ப்பதிலும் சிந்தனையை நெறிப்படுத்துவதிலும் ஆசிரியர்கள் செயற்படுகிறார்கள் ஆன்மா பக்குவப் படுவதற்கு எப்படி ஆலயங்கள் உதவியாக இருக்கின்றனவோ அதே போல மாணவர்கள் அறிவைப் பெறுவதற்கு அறிவாலயமாகிய பாடசாலை உறுதுணையாக இருக்கிறது. ஆலயங்களை எவ்வளவு புனிதமாக நம்மவர்கள் பாதுகாக்கின்றார்களோ அதேபோல நமது அறிவாலயங்களான கல்லூரிகளையும் நாம் பாதுகாக்க வேண்டும். உரும்பராய் வாழ் மக்கள் அனைவரினதும் குடும்பச் சொத்து இந்த இந்துக் கல்லூரி என்பதை நினைவில் கொண்டு இதன் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் இக்கிராம மக்கள் அனைவரும் கண்ணுங் கருத்துமாக இருந்து செயற்பட வேண்டுமென "வித்தியா" ஊடாக உங்களை வேண்டுகின்றோம்.

இன்று மனித மனங்கள் அனைத்தும் அமைதியிழந்த நிலையில் அல்லற் படுகின்றன. ஒரு நாளைக்குப் பன்னிரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் பாடுபட்டு உழைத்தாலும் தன் குடும்பத்தைச் சீராகக் கொண்டு நடத்த முடியாமல் திண்டாடும் குடும்பத் தலைவர்களை நாம் அன்றடம் காண்கின்றோம். வாழ்க்கைச் செலவுகள் விலைவாசிகள் வானளாவிற்கு உயர்ந்து விட்டன. உலகில் வல்லரசுகளிடையே ஏற்பட்டு வரும் போர் வெறி ஒரு மூன்றும் உலக மகா யுத்தத்தையே தோற்றுவித்து விடுமோ என மக்களை நினைக்கச் செய்து வருகின்றது. இந்த உலகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் நீதி, நியாயம், தர்மம், நேர்மை என்ற அரும் பண்புகள் எல்லாம் பாடை கட்டப்பட்டு படுகுழியில் புதைக்கப்பட்டு விட்டதோ எனச் சிந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

"மனிதன் வெறும் இயந்திரமாக மாறி வருகிறான் ஆண்டாண்டு காலமாக மனித வாழ்வை நெறிப்படுத்திச், சீராக்கி வந்த சமயம் காட்டும் வாழ்க்கை நெறிகளை உதாசீனம் செய்கிறான். சமய நெறியில் வாழ்கின்ற மனிதன் புனிதன் ஆகிறான். ஆனல் சமய வாழ்க்கை என்பது வெளி வேஷமாக இருந்து விடக் கூடாது, உண்மையான அன்பு நெறியில், நீதிநெறியில் நின்று வாழும் வாழ்க்கையாக இருக்க வேண்டும். நீதியை முன்னிலைப்படுத்தி வாழ்பவனுடைய வாழ்க்கை சீரிய வாழ்க்கையாக இருக்கும்" என்பது ஞானிகள் வாக்கு. "நாம் நீதியான வாழ்க்கை நடாத்தினல் சமயியாக வாழ்கிறோம் என்பது மூதறிஞர் பண்டிதமணியின் கூற்றாகும்."

நாவலர் பெருமான் நீதியைப் போற்றி வாழ்ந்தவர் அவருடைய நூற்றாண்டு விழா ஈழம் முழுவதும் சிறப்பாக யாழ்ப்பாணத்திலும் இந்த ஆண்டு கொண்டாடப்பட்டது. விழாக் கொண்டாடினல் மட்டும் போதுமா? நாவலர் காட்டிய நெறியில் வாழ்ந்த முறையில் நாம் வாழ வேண்டாமா? நாவலர் பெருமானின் சிந்தனை கூர்ப்பு அடைந்து பல சைவப் பெரியார்களால் செயல் வடிவம் கொடுக்கப்பட்டு உருவாக்கப்பட்ட இந்துக் கல்லூரிகளில் ஒன்றே நமது கல்லூரியும் ஆகும். சமய நெறியில் நின்று நமது மாணவர்கள் கல்வி கற்க வேண்டும் என நம் மூதாதையரால் விரும்பி உருவாக்கப்பெற்ற இந்தக் கல்லூரியை நாம் போற்றி வணங்குவதுடன் கண்ணும் கருத்துமாக பாதுகாத்தும் வருவோமாக.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுநாள் அறிக்கை — 01-06-79

மதிப்பிற்குரிய வடமாநிலக் கல்வி அதிபதி திரு. தி. மாணிக்க வாசகர் அவர்களே, திருமதி மாணிக்கவாசகர் அவர்களே, வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. வி. தங்கராசா அவர்களே, பெற்றோர்களே, பழைய மாணவர்களே, கல்லூரி அபிமானிகளே, ஆசிரியர்களே, மாணவ மாணவியரே, உங்கள் அனைவரையும் எமது கல்லூரியின் வருடாந்தப் பரிசு நாள் விழாவிற்கு வரவேற்று இப்பரிசுநாள் அறிக்கையினை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று எமது பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் வடமாநிலக் கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் அவர்களையும், திருமதி மாணிக்கவாசகர் அவர்களையும் நான் உங்களுக்குப் புதிதாக அறிமுகம் செய்து வைக்க வேண்டிய அவசியம் இல்லை. கல்வித் துறையில் நீண்ட கால அனுபவமுடைய அவர் இந்நாட்டின் கல்வித் துறைக்கும் குறிப்பாகத் தமிழ் மக்களின் கல்விக்கும் ஆற்றிய தொண்டு அளப்பரியது. அத்தகைய ஒருவர் எமது பரிசுநாள் விழாவிற்குப் பிரதம விருந்தினராக வருகை தந்திருப்பது சாலப்பொருந்துமென நினைக்கிறேன். திருமதி மாணிக்கவாசகர் அவர்களே, ஒருவரின் முன்னேற்றத்திற்கு அவரது வாழ்க்கைத் துணைவியரின் பங்கு மிக முக்கியமானது என்பதை நீங்கள் நிரூபித்து விட்டீர்கள். அந்த வகையில் எமது பிரதம விருந்தினர் பாக்கியசாலி என்றே கூறவேண்டும்.

எமது அழைப்பை ஏற்று இப்பரிசுநாள் விழாவிற்குப் பிரதம விருந்தினராக நீவிர் வருகை தந்தமையையிட்டு நாங்கள் உண்மையில் மகிழ்ச்சி அடைகிறோம்.

இன்று நான் உங்கள் முன்சமர்ப்பிக்கும் இப்பரிசு நாள் அறிக்கை கடந்தவருட பரிசு நாளிலிருந்து ஏறத்தாழ ஒருவருட காலப் பகுதியை உள்ளடக்குகின்றது. இக்காலப் பகுதியிலே எமது கல்லூரி பல துறைகளிலும் வளர்ச்சி அடைந்துள்ளது என்பதை ஆரம்பத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

**கல்வியின் நோக்கம்:**

இன்று மாணவரிடையேயும் பெற்றோர்களிடையேயும் பொதுப் படையாகக் காணப்படும் மனவிரக்தியை நோக்குமிடத்து கல்வியின் நோக்கங்களை எய்துவதில் தவறி விட்டோமா என்ற சந்தேக நிலைக்கு நாம் தள்ளப்படுகிறோம். தமது பிள்ளைகள் பரீட்சைகளில் சித்தியெய்தித் தொழில் வாய்ப்பினைப் பெற்றாற்போதும் என்பதே பெரும்பாலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர்களின் நோக்கமாக உள்ளது. கல்வியின் தலையாய நோக்கம் பற்றி அவர்கள் சிந்திக்க விரும்புவதில்லை. நாட்டின் அரும் சொத்தாக விளங்கக்கூடிய நற்பிரசைகளை உருவாக்குவது கல்வியின் தலையாய நோக்கமாக இருக்கும்போது நாம் எதற்காக அதை ஏற்றுக் கொள்ளத் தயங்க வேண்டும் ~~கொர்லிங்ரன்~~ என்ற அறிஞர் கல்வி பற்றிக் குறிப்பிடுகையில், Education doesn't mean teaching people to know what they don't know, it means teaching people to behave as they don't behave.

என்று கூறியுள்ளார்.

அதாவது கல்வி என்பதன் பொருள் மக்களுக்குத் தெரியாத விடயங்களைத் தெரியச் செய்யும் பொருட்டுக் கற்பித்தல் அல்ல. மக்கள் கடைப்பிடிக்கத் தவறும் ஒழுக்கங்களையும் பழக்க வழக்கங்களையும் கடைப்பிடிக்கச் செய்வதே கல்வி என்பதன் பொருளாகும். இந்நோக்க அடிப்படையிலேயே பாடசாலைகள் இன்று முழுமையான கல்வியை மாணவர்களுக்கு வழங்க முற்படுகின்றன. இதை நமது பெற்றோர்களும் மாணவர்களும் மனதிற்கொண்டு தங்கள் மனவிரக்தியைப் போக்க முயலவேண்டும்.

மாணவர் எண்ணிக்கை :

6ஆம் வகுப்புத் தொடக்கம் 12ஆம் வகுப்புவரை கல்வி போதிக்கப்படும் இக்கல்லூரியில் இன்று 807 பிள்ளைகள் கல்வி பயிலுகின்றார்கள். இவர்களில் 440 ஆண்களும், 367 பெண்களும் அடங்குவர். இவ்வாண்டில் 169 மாணவர்களைப் புதிதாகச் சேர்த்துள்ளோம், 163 மாணவர்கள் தமது பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்டு கல்லூரியை விட்டு விலகியுள்ளனர். இவர்களிற் பெருந்தொகையானோர் க. பொ. த. சாதாரண வகுப்பு மாணவர்களாகும். க. பொ. த. உயர்தர வகுப்புக்களில் இன்று 167 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இவர்களில் 150 விஞ்ஞானத்துறை மாணவர்களும் 17 கலைத்துறை மாணவர்களும் அடங்குவர், க. பொ. த. உயர்தர மாணவரது எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவது வரவேற்கத்தக்க ஒரு அம்சமாகும். எனினும் போட்டி அடிப்படையில் சில கல்லூரிகள் மாணவர்களைத் தெரிவு செய்யும் வாய்ப்பு இன்றும் இருப்பதால் திறமைமிக்க பல மாணவர்களை எமது கல்லூரி இழக்கவேண்டி நேரிடுகின்றது. இக்கல்லூரியிலிருந்து பல மாணவர்களைப் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பமுடியாமைக்கு இதுவும் ஒரு காரணமாகும். இந்நிலை மாற வேண்டின் சகல வசதிகளுடன் இயங்கிவரும் இக்கல்லூரியில் நம்பிக்கை வைத்துத் தங்கள் பிள்ளைகளை இங்கு கல்வி பயிற்றுவிக்கப் பெற்றோர் முன்வரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் விபரம் :

இன்று 38 ஆசிரியர்கள் கடமையாற்றுகிறார்கள், இவர்களுள் 15 பட்டதாரிகளும் 21 பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் அடங்குவர். சென்ற ஆண்டின் நடுப்பகுதியில் திரு S. செல்லப்பா, திரு. N. P. இராசையா, திருமதி P. கார்த்திகேசு, திரு. C. கணேசலிங்கம், திருமதி P. காசுபதி ஆகியோர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். இவர்கள் இக்கல்லூரிக்கு ஆற்றிய சேவைகளுக்கு இச்சந்தர்ப்பத்தில், நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இக்காலப் பகுதியில் திரு. A. தேவேந்திரா, திருமதி S. கந்தசாமி, செல்வி M. அழகரத்தினம், திரு. N. தவநீதராசா, திருமதி S. பேராயிரவர் ஆகியோர் இடமாற்றம் பெற்று இங்கு வந்துள்ளனர் இவர்கள் அனைவரையும் மனமார வரவேற்கின்றேன். இவர்கள் கல்லூரியின் நலனை மனதிற் கொண்டு பணியாற்றுவார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு.

இக்கல்லூரியிலிருந்து இவ்வருடம் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகியவர்களுள் செல்வன் S. செல்வரத்தினம், செல்வன் K. விக்கினேஸ்வரன், செல்வன் P. இரவிமன்னன் ஆகிய மூவரும் இங்கு பதில் ஆசிரியர்களாக கடமையாற்றி வருகிறார்கள். இவர்களுக்கு எமது நன்றி.

கடந்த 22 வருடங்களாக இக்கல்லூரியின் விளையாட்டுத்துறை ஆசிரியராகக் கடமையாற்றி அமரராகிவிட்ட திரு.ச. இரத்தினம் அவர்களின் மறைவு எமது கல்லூரிக்குப் பேரிழப்பாகும். அவர் இக்கல்லூரிக்கு ஈட்டிக்கொடுத்த சாதனைகள் பல. அவரின் தன்னலமற்ற சேவைக்கு இக்கல்லூரியின், சார்பில் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எமது ஆசிரியர்கள் ஆற்றலும் சேவை மனப்பான்மையும் கொண்டவர்கள். இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு அவர்கள் ஆற்றும் பணி அளப்பரியது. ஆசிரியர்களிடையே நட்புறவையும், ஒற்றுமையையும் வளர்க்கும் பணியில் ஆசிரியர் கழகம் செயற்பட்டு வருவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆசிரியர் பணியில்லாத ஊழியர்கள் இங்கு கடமையாற்றி வருகின்றார்கள். இக்கல்லூரியின் நிர்வாகத்தைத் திறம்பட நடாத்துவதற்குத் தங்களால் இயன்ற உதவியையும், ஒத்துழைப்பையும் இவர்கள் வழங்கி வருகிறார்கள். ஆய்வுகூட உதவியாளர் திரு V. பாலசுப்பிரமணியம் இக்கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று வந்துள்ளார்.

கட்டட வசதிகள் :

மாணவர் தொகைக்கு ஏற்ப போதிய இடவசதியும் கட்டட வசதியும் இல்லாதிருப்பது இக்கல்லூரியின் நெடுநாட் பிரச்சினையாக இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறது. அரசாங்கம் கொடுத்துதவிய பணத்தில் 8 வகுப்பறைகள் கொண்ட மேல்மாடிக் கட்டடம் ஒன்றினை இக்காலப் பகுதியில் பூர்த்தி செய்துள்ளோம். அத்துடன் 5 வகுப்பறைகள் கொண்ட தற்காலிக கட்டடம் ஒன்றினையும் திருத்தி அமைத்துள்ளோம். இவற்றிற்குத் தேவை யான பணத்தினைப் பெற்றுத் தந்த கோப்பாய்த் தொகுதித் தேசிய பேரவை உறுப்பினர் திரு. சி. கதிரவேற்பிள்ளை அவர்களுக்கும், கல்வித் திணைக் களத்தினர்க்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறக் கடமைப்பட் டுள்ளேன். சென்ற வருட அறிக்கையிற் குறிப்பிட்டதற்கமைய திறந்த வெளியரங்கினையும், மேடையையும் புதுப்பித்து நல்ல முறையில் அமைத் துள்ளோம். இன்றைய விழா இத்திறந்த வெளியரங்கில் நடைபெறு வதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். மாணவர்களின் கட்டட வசதிப் பிரச்சினைகளை இவை ஓரளவிற் குறைத்துள்ளன. எனினும் வளர்ந்து வரும் இத்தகைய கல்விக்கூடத்திற்கு கட்டட வசதிகளையும், இடவசதி களையும், ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கும் உண்டு.

பரீட்சைப் பெறுபேறுகள் :

பரீட்சைப் பெறுபேறுகளைப் பொறுத்தமட்டில் இக்காலப் பகுதி யில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய 41 விஞ்ஞான மாணவர்களில் 14 மாணவர்கள் பல்கலைக் கழகத் தெரிவிற்குத் தகுதி பெற்றுப் புதிய சாதனையை இங்கு ஏற்படுத்தியுள்ளார்கள். இவர்களுக்கு எமது பாராட் டுக்கள் இவர்களில் பொறியியல் துறைக்கு இருவரும் கணிதத் துறைக்கு இருவரும், உயிரியல் விஞ்ஞானத் துறைக்கு ஒருவரும் பல்கலைக் கழகத் துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மற்றுமொருவருக்குச் சென்ற ஆண்டிலேயே பல்கலைக் கழக அனுமதி கிடைத்து விட்டது. நல்ல பெறு பேறுகள் கிடைத்ததும் பல்கலைக் கழகத்திற்குச் சென்று தமது உயர் கல்வியை மேற்கொள்ள முடியவில்லை என்று மாணவர்களும், பெற்றோர் களும் மனச்சோர்வுற்றுள்ளனர். இதற்குப் பரிகாரம் தேடவேண்டிய பாரிய பொறுப்பு எமது கல்விமான்களுக்குண்டு.

சென்ற ஆண்டில் இக்கல்லூரியிலிருந்து 223 மாணவர்கள் க. பொ. த. சாதாரண பரீட்சைக்குத் தோற்றினார்கள். இவர்களில் 90 மாணவர்கள் 6 பாடங்களிலும் அதற்கு மேலும் சித்தியடைந்துள்ளனர். 28 மாணவர்கள் 5 பாடங்களில் சித்தியடைந்துள்ளனர். க. பொ. த. உயர்தர வகுப்பிற் சேர்ந்து மேற்படிப்பைத் தொடர்வதற்கு 41 மாண வர்கள் விஞ்ஞானத்துறைக்கும், 20 மாணவர்கள் கலைத்துறைக்கும் தகுதி பெற்றுள்ளனர். இவற்றைத் தவிர அகில இலங்கை ரீதியிலும், பிராந்திய ரீதியிலும் நடாத்தப்படும் சமயப் பரீட்சைகளிலும், சங்கீதப் பரீட்சைகளிலும் எமது மாணவர்கள் சித்தியடைந்ததுடன் பரிசில்களை யும் பெற்றுள்ளனர்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் இயக்கங்கள் :

வகுப்பறைக்குப் புறம்பான கல்வியை மாணவர்களுக்கு வழங்கும் பொருட்டு மாணவர் இயக்கங்கள் பலவற்றை நாம் இங்கு ஊக்குவித்து வருகிறோம். இவ்வியககம் சமயப்பற்றையும், மொழிப்பற்றையும் மாண வர்களுக்கு ஊட்டுவதுடன் பாடநூல்களுக்குப் புறம்பான கல்வியையும் வழங்கிவருகின்றன.

மாணவர்களிடையே ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டி கல்லூரி நிருவாகத்துக்கு ஒத்தாசையாக இருந்துவரும் மாணவர் முதல்வர் முறைக்குப் புத்துயிரூட்டி நல்ல முறையில் இயங்கச் செய்துள்ளோம். மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையில் நல்லுறவை வளர்ப்பதில் இவர்கள் ஈடுபாடுள்ளவர்கள்.

க. பொ. த. உயர்தர மாணவர் மன்றம் இக் கல்லூரியில் முழு நாட் கலைவிழா ஒன்றினை சென்ற தவணை வெகு சிறப்பாக நடாத்தி இக்கல்லூரி வரலாற்றிலே ஒரு புது அத்தியாயத்தை ஆரம்பித்து வைத் துள்ளது. மாணவர்கள் தமது கலை, கலாச்சாரம், பண்பாடு முதலிய வற்றை விளங்கிக் கொள்வதற்கும் இத்தகைய விழாக்கள் உதவும் என் பதில் சந்தேகமில்லை. இம்மன்றப் இராப்போசன விருந்தொன்றையும் இவ்வருடம் மிகச் சிறப்பாக நடாத்தியுள்ளது. இக்கல்லூரித் திறந்த வெளியரங்கினைத் திருத்தி அமைப்பதற்கு இம்மன்றத்தினர் சிரமதானப் பணிகளைச் செய்துள்ளனர். இது வரவேற்கப்படவேண்டிய ஒரு முயற்சி யாகும். இம் மன்றத்தினர் கலைவிழாவுக்கெனத் திரட்டிய நிதியில் ஒரு பகுதியினைக் கல்லூரி ஆய்வு கூடத்திற்கு வழங்கியுள்ளார்கள். மாணவர் களின் கல்லூரிப் பற்றுக்கு இது நல்லதொரு உதாரணமாகும். இம் மன றத்திற்குப் பொறுப்பாக இருந்து இதனை நல்ல முறையில் இயங்கச் செய்துள்ள பெருமை ஆசிரியர் திரு அ. பூரணச்சந்திரன் அவர்களையே சாரும்.

மாணவர்களிடையே சமயப்பற்றை வளர்க்கும் அரும்பணியை சைவ மாமன்றம் ஆற்றிவருகின்றது. வெள்ளிக்கிழமை தோறும் பூசை களையும், கூட்டுப் பிரார்த்தனைகளையும், சமயப் பிரசங்கங்களையும் இம் மன்றம் ஒழுங்கு செய்து வருகின்றது. நவராத்திரி பூசை வெகு விமரி சையாக இங்கு கொண்டாடப்பட்டது. இவை தவிர சமயப் பரீட்சைகளை யும் மாணவர்களிடை இம்மன்றம் ஊக்குவித்து வருகின்றது. சமயத்தில் தனிப்பற்றுடைய ஆசிரியர் திரு. வீ. ஆறுமுகம் அவர்களின் கண்கா ணிப்பில் இம்மன்றம் இயங்குகின்றது.

கிறீஸ்தவ மாணவர் சங்கம் கிறீஸ்தவ பிள்ளைகளிடையே சமயப் பற்றை வளர்ப்பதில் அக்கறை கொண்டுள்ளது. இச் சங்கத்துக்கு ஆசி ரியர் திரு. வ. சுவாம்பிள்ளை அவர்கள் பொறுப்பாக உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீப காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வள்ளுவர் மன்றம் மாணவர்களிடையே மொழிப்பற்றையும் மொழி அறிவையும் வளர்த்து வருகின்றது. ஆசிரியர் திரு. சி. தாமோதரம்பிள்ளை அவர்கள் இம்மன்றத்தின் வளர்ச்சியில் அதிகளவு அக்கறை காட்டி வருகின்றார்.

சென்ற ஆண்டில் புத்துயிர் அளிக்கப்பட்ட விஞ்ஞான மன்றம் ஆசிரியர் திரு. சி. சிவானந்தன் அவர்களின் பொறுப்பில் இயங்கி வருகின்றது. மாணவர்களிடையே விஞ்ஞான அறிவை வளர்க்கும் பணியில் இம்மன்றம் ஈடுபட்டுள்ளது.

இவற்றை விட சாரணர் இயக்கமும், வழிகாட்டிகள் இயக்கமும் எமது மாணவ மாணவியர்களுக்குத் தனிவகைப் பயிற்சிகளை அளித்து வருகின்றன. இவ்வியக்கங்கள் மாணவ மாணவியர்களிடையே பிரபல்யம் அடையும் என்பதில் சந்தேகமில்லை. சாரணர் இயக்கத்திற்கு ஆசிரியர் திரு. க. சிறீதரனும் வழிகாட்டிகள் இயக்கத்திற்கு திருமதி த. இராசானந்தனும் பொறுப்பாகவுள்ளனர்.

மாணவர்களிடையே மறைந்திருக்கும் தனித்துவ ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து வளர்ப்பதற்கு இம் மன்றங்கள் பெரிதும் உதவி வருகின்றன. அத்துடன் வகுப்பறைக்குப் புறம்பான கல்வியை இம்மன்றங்களின் ஊடாகவும் நாம் வழங்கி வருகிறோம்.

விளையாட்டுத்துறை :

வழமைபோல இவ்வாண்டிலும் விளையாட்டுத்துறையில் நாம் குறிப்பிடத்தக்க சாதனைகளைப் புரிந்துள்ளோம். யாழ் மாவட்டக் கல்லூரிகளுக்கு இடையிலான உடற்பயிற்சிக் குழுப் போட்டியில் எமது மாணவர் குழு இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடாத்திய உதை பந்தாட்டப் போட்டிகளில் எமது இரண்டாவது தெரிவுக் கோஷ்டியினரும் மூன்றாவது தெரிவுக் கோஷ்டியினரும் முறையே கால் இறுதி ஆட்டம் வரையும் அரை இறுதி ஆட்டம் வரையும் திறமையாக விளையாடி பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளனர். மாணவிகளின் விளையாட்டு வசதிகள் இங்கு புறக்கணிக்கப்பட்டுள்ளன என்ற பெருங்குறையினை நிவர்த்தி செய்யும் பொருட்டு வலைப்பந்து, எறிபந்து முதலிய விளையாட்டுக்களை மாணவிகளுக்கென நாம் ஆரம்பித்துள்ளோம். இத் துறையில் எமக்கு உதவிவரும் செல்வி வாமினி திலகருக்கு நன்றி கூறக கடமைப் பட்டுள்ளேன். இவற்றை விட பூம்பந்து (பாட்மின்ரன்) கரப்பந்து (வொலிபோல்) ரேபிள் டெனிஸ் (table tenish) முதலிய விளையாட்டுக்களையும் மாணவர்களுக்கு அறிமுகம் செய்ய உத்தேசித்துள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர் ஆசிரியர் சங்கம் :

இக் கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை காட்டி வரும் எமது பெற்றோர் ஆசிரியர் சங்கம் கல்லூரிக்கும் பெற்றோருக்குமிடையே, நல்லுறவை வளர்த்து வருகின்றது. இச் சங்கம் 8 வகுப்பறைகளைக் கொண்ட வேல்மாடிக் கட்டிட வேலைகளை பொறுப்பேற்று பூர்த்தி செய்ததுடன் 5 வகுப்பறைகளைக் கொண்ட தற்காலிகக் கட்டடம் ஒன்றையும் திருத்தி அமைத்துள்ளது. கல்லூரித் திறந்த வெளி யரங்கு வேலைகளையும் பொறுப்பேற்றுச் செய்து முடித்துள்ளது. இச் சங்கத்துக்கு உங்களால் இயன்ற ஒத்துழைப்பையும் நிதி உதவியையும் அளிக்குமாறு பெற்றோர்களையும், கல்லூரி அபிமானிகளையும் கேட்டுக்கொள்கின்றேன்.

பழைய மாணவர் சங்கம் :

தமது கல்லூரி என்று உரிமைபாராட்டுவதில் பெருமைப்படும் இச் சங்க உறுப்பினர்கள் இக் கல்லூரியின் நலனை மனதிற் கொண்டு தம்மாலியன்ற உதவிகளையும், ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றார்கள்.

இவற்றைத் தவிர கல்லூரியின் வளர்ச்சியில் தனிப்பற்று வைத்திருக்கும் பெரியோர் பலர் தொடர்ந்தும் தமது ஆதரவை வழங்கி வருகிறார்கள்.

புதிதாக நிறுவப்படவுள்ள பாடசாலை அபிவிருத்திச் சபை பெற்றோர், ஆசிரியர், பழைய மாணவர், கல்லூரி அபிமானிகள், மாணவர் பிரதிநிதிகள் ஆகிய சகலரையும் உள்ளடக்குவதால் கல்லூரியின் வளர்ச்சிக்கு இது சாதகமாக அமையுமென நினைக்கின்றேன்.

கல்லூரிச் சஞ்சிகை:

கடந்த பரிசளிப்பு விழாவில் குறிப்பிட்டதற்கமைய எமது கல்லூரிச் சஞ்சிகையான வித்தியாவை 18 ஆண்டுகால இடைவேளைக்குப்பின் மீண்டும் வெளியிட்டுள்ளோம். எமது பிரதம விருந்தினர் இச் சஞ்சிகைக்கு வழங்கிய ஆசிச் செய்தியில் குறிப்பிட்டுள்ளவாறு அறிவுச் சுடர்களை இனங்காணுவதற்கு ஒரு கருவியாக வித்தியா அமையுமென்பதில் எமக்குப் பூரண நம்பிக்கை உண்டு. வித்தியாவைத் தொடர்ந்தும் ஆண்டுதோறும் வெளியிட உத்தேசித்துள்ளோம். இவ்வறிக்கையினை நிறைவு செய்யுமுன் இக் கல்லூரியின் நலனை மனதிற்கொண்டு சில விடயங்களை இங்கு குறிப்பிடுதல் பொருத்தமாகுமென நினைக்கிறேன்.

எந்த ஒரு கல்லூரியின் வளர்ச்சியிலும் பெற்றோரும் பழைய மாணவரும் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். இது உங்கள் கல்லூரி, உங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் குழந்தைகளின் கல்லூரி, உங்கள் வருங்கால சந்ததியினரின் கல்லூரி, இதனைப் பேணிக்காத்து வளர்க்க வேண்டியது உங்கள் கடமை உங்கள் உதவியையும் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றோம்.

உங்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பி வைப்பதுடன் கடமை முடிந்து விட்டதெனக் கருதாது அவர்களது கல்வியில் அக்கறை செலுத்துவீர்களானல் வருங்காலம் பிரகாசமானதாக அமையும். கல்லூரியுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி உங்கள் குழந்தைகளின் கல்வியை ஊக்குவியுங்கள் குறை நிறைகளிருப்பின் அவற்றை எமக்கு நேரடியாக நல்ல நோக்குடன் எடுத்துக் கூறுங்கள். அது கல்லூரியின் வளர்ச்சிக்கும், உங்கள் குழந்தைகளின் கல்விக்கும் பெரிதும் உதவும்.

முடிவுரை :

எமது அழைப்பை ஏற்று பிரதம விருந்தினராக இங்கு வருகை தந்திருக்கும் வடமாநிலக் கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் அவர்கட்கும், திருமதி மாணிக்கவாசகர் அவர்கட்கும் எமது மனமார்ந்த நன்றியை முதற்கண் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எமது கல்லூரியின் நிருவாகத்தை நல்ல முறையில் நடாத்துவதற்கு உறுதுணையாக இருந்து வரும் உப அதிபர் அவர்களுக்கும், ஏனைய ஆசிரியர்களுக்கும் ஆசிரியர்களல்லாத ஊழியர் அனைவருக்கும் இச் சந்தர்ப்பத்தில் நன்றி கூறிக்கொள்ள விரும்புகிறேன். விஷேட பொறுப்புக்களை முன் வந்து ஏற்று அவற்றை மன விருப்புடன் செய்துவரும் ஆசிரியர்களுக்கு தனி வேருக நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன். எமக்கு வேண்டிய உதவிகளைச் செய்து எம்மைச் சரியான பாதையில் வழி நடாத்தி வரும் வடமாநிலக் கல்வியதிபதி அவர்களுக்கும், கல்வி அதிகாரிகளுக்கும் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எமது நன்றி. எமது அழைப்பை ஏற்று இங்கு வருகைதந்து விழாவைச் சிறப்பித்த பெற்ருேர்களுக்கும் பழைய மாணவர்களுக்கும் கல்லூரி அபிமானிகளுக்கும் எமது நன்றி.

வணக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசளிப்பு விழா



திருமதி தி. மாணிக்கவாசகர் பரிசுகளை வழங்குகிறார்

## கலைவிழா



கலைவிழாவில் நடைபெற்ற வில் முறித்த விதுரன் நாடகத்தில் ஒரு காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவ முதல்வர்கள் குழு



ஆசிரிய ஆலோசகர் — திரு அ. பூரணச்சந்திரன்

வருடாந்த இராப் போசன விருந்து



உயர்தர மாணவர் மன்றத் தலைவர் செல்வன் சு. சிவகுமாரன் தலைமையுரை நிகழ்த்துகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெய்தல் திணையே திருவாசகம்

(இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை)

'வாசியருளியவை வாழ்விக்கும்' என்பது திருவருட்பயனில் வருவதொருதொடர். 'வா' சிவசத்தி, சி - சிவம், ய - ஆன்மா. சிவசத்தி சிவத்தை உபகரித்து ஆன்மாவை நல்வாழ்வு வாழச் செய்யும் என்பது பொருள்.

'வாசி' என்பதற்கு சத்தி சிவம் என்ற பொருளேயன்றி மற்றும் ஒரு பொருள் உண்டு. அப்பொருள் குதிரை.

ஒருநாள் மணிவாசகர் பிரதம மந்திரியாயிருந்தபோது, வாசியலேறி வாசிவாங்குதற்குப் புறப்பட்டார், அவர் ஏறிய வாசியாகிய குதிரை சென்ற வழிமாறி ஒரு தெய்வ வழிசென்றது. அது தன் போக்கிற் போய்த் திருப்பெருந்துறை என்ற தலத்தில் ஒரு குருந்தமரத்தடியில் நின்றது. அங்கே 999 சீடர்கள் சூழ ஒருவர் அவர்கள் மத்தியில் குருமூர்த்தியாய் வீற்றிருந்தார். அவரை, வாசியிலேறி வாசிவாங்கச் சென்ற மாணிக்கவாசகர் கண்டார், கண்ட அக்கணமே காந்தத்தை எதிர்ப்பட்ட இரும்புபோலாயினர். பிரதம மந்திரி என்ற எண்ணம் மறைந்தது, 999 அடியார்களுடன் சேர்ந்து ஆயிரமாம் அடியார் ஆயினர். குருமூர்த்தியின் தாடலைப்பட்டார்.

'போற்றியென் வாழ்முதலாகிய பொருளே' என்று திருப்பள்ளி எழுச்சி தொடங்குகின்றேம், அதில் 'முதல்' என்று ஒரு வார்த்தை வருகின்றது. 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்று முதற்குறளிலும முதல் என்ற வார்த்தை வருகின்றது. இரண்டிடத்தும் முதல் என்பதன் பொருள் கடவுள்.

'தம்முதல் குருவுமாய் தவத்தினில் உணர்த்தவருவார் என்கின்றது சிவஞானபோதத்து எட்டாஞ் சூத்திரம். முதலாகிய கடவுள், தவம் உள்ளவர்களுக்குக் குருவால் வெளிப்படுவார் என்பது அச்சூத்திரத்தின் பொருள்.

மாணிக்கவாசகரின் தவ விசேடத்தாலே முதல்வராகிய கடவுள். அவருக்கு அருள் செய்தற்கு அங்கே அந்தக் குருந்தமரநீழலில் எழுந்தருளியிருந்தார். மாணிக்கவாசகருக்கு வாசியிலேறிச் சென்றது நல்ல வாசியாய்ப் போனது. வா, சி அருளி அவரை வாழ்வித்து விட்டது. குருமூர்த்தி ஞானோபதேசஞ் செய்தருளுவாராயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காலத்திலே திருக்கைலாசத்திலே நந்திகணத்தவர் ஆயிரவருக்குச் சிவஞானபோத உபதேசம் ஒன்று இவ்வாறு நடந்ததுண்டு. சிவஞான போதத்தில் ஏழாஞ்சூத்திரத்தில் ஒரு தொடர், 'யாவையும் சூனியம் சத்தெதிர்' என்பது. சத்தாகிய கடவுளை எதிர்ப்பட்டவழி காணப்பட்ட இந்த உலகபந்தமெல்லாம் இல்லையாய்விடும் என்பது அத்தொடரின் பொருள்.

ஆயிரவரும் கண்மூடி மௌனிகளாய்ச் சித்திரப்பாவைகள் போன்று, கைலாசபதி எதிரில் சும்மா இருந்தார்கள். சும்மா இருக்குந்திறம் அரிது. அவர்கள் சும்மா இருந்தார்கள்.

அவ்வாறாகிய சமயத்தில் தேவேந்திரன் இந்திரச் செல்வங்கள் தொடர, ஐராவத யானையில் அமர்ந்து, கைலாசதரிசனத்துக்கு வந்தான். வெகுவைபவத்தோடு வந்த இந்திரனை யாரும் கவனிக்கவில்லை. ஆயிரவருள் ஒருவர் மாத்திரம் சிறிதே பார்த்துவிட்டார். அந்த இந்திரச் செல்வத்தில் சிறிது இரசனையும் அவருக்கு உண்டாகிவிட்டது. அவர் பெயர் குடமுழநந்தீசர். சுவாமிக்குக் குடமுழாவாத்தியம் வாசிப்பவர் அவர்.

அக்கணமே கைலாசத்தில் நடந்த சிவஞானபோத வகுப்பிலிருந்து விலகவேண்டியவரானர் அந்தக் குடமுழநந்தீசர். அவரே பூமியில் மாணிக்கவாசகராய், அவதரித்தார்.

'குடமுழநந்தீசனை வாசகனுகக் கொண்டாய்' என்பது அப்பர் தேவாரம். வாசகன் என்பது மாணிக்கவாசகரை பூமிக்கு வந்ததும் மாணிக்கவாசகர் பாண்டியனுக்குப் பிரதம மந்திரியானர். இச்சித்த இந்திரச் செல்வம் அவரை வந்தடைந்தது.

இந்திரச் செல்வம்போல இயைந்துள செல்வமெய்தி
மந்திரத் தலைமைபூண்ட வண்புகழ் வாதவூரர்
தந்திரத் தொகுதி சூழத் தாரகாகணங்களோடும்
அந்தரத் திழிந்து மண்மேல் அமர்ந்த வெண்மதியமொத்தார்.

என்கின்றது வாதவூரடிகள் புராணம். வாதவூரர் என்பது மாணிக்கவாசகரின் பிள்ளைத் திருநாமம்.

* * *

குருமூர்த்தியைக் கண்டதும் இந்திரச் செல்வத்தில் உண்டானபற்றுச் சூனியமாய் இல்லையாயினது. சிவஞானபோத உபதேசம், முன்விட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்திலிருந்து நடந்தது. சத்தாகிய குருமூர்த்தியின் எதிரில் மலச் சேட்டைகளற்றுச் சும்மா இருந்தார். மணிவாசகனர்.

'எனை நானென்பதறியேன்
பகல் இரவாவதும் அறியேன்'

என்பது மணிவாசகம். கிட்டை கைகூடியது. குருவும் சீடர்களும் மறைந்தார்கள். ஒருநாள் விழித்தார். யாரையுங்கண்டதில்லை நிகழ்ந்தது கனவோ என்று ஏங்கினர், அழுதார் — விழுந்தார் — புரண்டார், புலம்பினர்.

விடையவனே மீண்டும் கைவிட்டுவிட்டாயோ என்று கதறினர். அவர் ஏங்கிப் புலம்பி இரங்கிய இரங்குதல்களே திருவாசகம்.

* * *

சங்கத்துப் புலவர்கள் தமிழ்மொழியின் உயிர்நிலையான அன்பை எழுவகைத் திணைகளாக்கி ஆராய்ந்திருக்கின்றனர்கள். ஏழு திணையில் ஒரு திணை நெய்தல் திணை.

நெய்தல் திணை என்பதற்கு இரங்குதலாகிய அன்பொழுக்கம் என்பது பொருள்.

ஆன்மாவாகிய நாயகி தன்பாலுள்ள புன்மையாகிய புலவுபோதற்கு இரங்கி இரங்கி, உருகி உருகி, அழுது, தன்னைச் சுத்தஞ் செய்து கொள்ளுகின்றள்.

ஆன்மநாயகன் அருவருத்துத் தன்னைக்கைவிடாமல் அவன் தீண்டத் தக்கவாறு தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்ளுகின்றள் ஆன்ம நாயகி.

மாணிக்கவாசகராகிய ஆன்மநாயகி, தம்மைப் பக்குவப்படுத்துதற்கு இரங்கிய இரங்குதலாகிய நெய்தல் திணையே திருவாசகம்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிக் கடன்

**திரு. ச. வினாயகமூர்த்தி**
(ஆங்கிலப் போதனாசிரியர் யாழ் வளாகம்)

நாவலர் பெருமானது இவ்வுலக வாழ்வு நிறைவெய்தி நூறாண்டுகளின் பின், அவராற்றிய அரும்பணிகளின் பெரும்பயனை அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலையில், அவரைப்பற்றி, அவராற்றிய பெரும்பணிகளைப் பற்றி நினைவு கூர்தல் இன்றியமையாதது. அவ்வாறு நினைவு கூர்தலினால் நாம் குறிப்பாக இந்நாட்டுச் சைவ நன்மக்கள் — நம் வாழ்வை இயன்றவரை செம்மையாக அமைக்க முயலும் பெரும்பயனைப் பெறுவதோடு நாவலர் பெருமானுக்கு நாம் செலுத்தவேண்டிய நன்றிக்கடனையும் ஓரளவுக்கேனும் செலுத்தியவர்களாவோம்.

அளவைக்கேற்றவாறே அளவுவரும். ஓர் அளவையினாலே அளந்துவிட்டு இன்னோரளவைக்குரிய அளவை எதிர்பார்த்தல் பேதைமை. நாவலர் பெருமான் ஆற்றிய பெரும்பணிகளை அவர் வாழ்ந்த காலச் சூழ்நிலையின் பின்னணியிலே வைத்து எண்ணிப்பார்க்க வேண்டும். பதினாலாம் நூற்றாண்டு தொட்டு அந்நியர்களால் பொதுவாக இந்த நாட்டு வழிபாட்டுத்தலங்கள் மரபுகள் வழக்கங்கள் எல்லாமே பெரும்பாதிப்புக்குள்ளாயின. மதம் பரப்புவதைப் பொறுத்தவரை அந்நியர்கள் கையாண்டமுறைகள் வேறுபட்டாலும் அவர்களுடைய நோக்கம் ஒன்றாகவே இருந்தது நாவலர் பெருமான் வாழ்ந்த காலம் ஆங்கிலேயராட்சி நிலவியகாலம். ஆட்சியாளரின் மதமாகிய கிறித்தவமதம் அரசின் ஆதரவு பெற்றுப் பரவியகாலம். இந்த நாட்டுச் சைவமக்களை, கல்வி காட்டி, உத்தியோகம் காட்டி, மருட்டித் தம்மதத்தைத் தழுவச் செய்தனர் அந்நியர், இந்நிலையில் நாவலர் பெருமான், தம்மொழி பயின்று, சமய நூல்களையுங் கற்று ஆங்கிலத்தையுங் கற்று ஆசிரியத் தொழிலும் பெற்றார். கிறித்தவமத விவிலிய நூலையே அழகுறத் தமிழில் மொழி பெயர்க்கக்கூடிய அளவுக்கு — அம்மொழிபெயர்ப்பு தமிழ் நாட்டிலே செய்யப்பட்ட மொழிபெயர்ப்பினும் மிகச் சிறந்ததென்று கொண்டாடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவருடைய ஆங்கிலப்புலமை சிறப்புற்றிருந்தது. எனவே கிறித்தவத்தைத் தழுவாமலே, பார்சிவல் பாதிரியாரிடம் அவர் பாடசாலையிற் கற்பிக்குங்காலை விதித்திருந்த நிபந்தனைக்கேற்பச் சிவசின்னங்களைத் தரித்தவாறே, உத்தியோகம் பார்த்து அவர் செல்வச் சீமானாக வாழ்ந்திருக்கலாம். தமது குடும்பத்தினரின் விருப்பத்தையும் தவறாது நிறைவேற்றியிருக்கலாம். ஆனால் அவர் அவ்வாறு வாழ விரும்பினாரில்லை.

"நான் இங்கிலிஷிலே அற்பவிருத்தியாயினும் பெற்றிருந்தும், என்னோடு இங்கிலிஷ் கற்றவர்களுள்ளும் அநேகர் தங்கள் தங்கள் சக்திக்கேற்ற உத்தியோகம் பெற்று வாழ்ந்திருக்கக் கண்டும், நானும் என் சக்திக்கேற்ற உத்தியோகத்தின் பொருட்டு முயற்சி செய்யின், அது தப்பாது சித்திக்கும் என்றறிந்தும், அஃதில்லாமையால் விளையும் அவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பைப் பார்த்தும் உத்தியோகத்தை விரும்பவில்லை. கன்னியை நாயகனிடத்து ஒரு துட்டாயினும் வாங்காது, வீடு விளைநிலம் தோட்டம், ஆபரணம் முதலியவற்ருேடு விவாகஞ் செய்து கொடுக்கும் வழக்கமே யுடையது என் சென்ம தேசமாகவும், நான் இல்வாழ்க்கையிற் புகவில்லை. இவைகளெல்லாவற்றிற்குங் காரணம் சைவசமயத்தையும் அதன வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையேயாம்''

என்பது அவர் வாக்கு.

அன்றைய கிறித்தவப் பாதிரிமார்கள் அரசின் ஆதரவுடன், பணத்தின் பலத்துடன் தாபனரீதியாகத் தம்மதத்தைப் பரப்பும் வகையில் செய்த தந்திரங்களை அனுபவரீதியில் கண்டார் நாவலர் பெருமான். தொன்மையும் சிறப்பும் வாய்ந்த சிவநெறி அவர்களால் இகழப்பட்டமை கண்டு மனம் நைந்தார். மறுபுறம் சைவர்களாற் சைவம் சீர்குலைவதைக் கண்டு கவன்ருர். ஆலயங்களில் ஆகமங்கூறும் கிரியைகள் முறைப்படி நிகழாமை, தேவதாசிகள் நடனம், மிருகபலி, ஒழுக்கக்குறைவு போன்றவற்றைக் கண்டு கவன்ற அவர் உள்ளக்குமுறலைப் பல பிரசுரங்களிற் காணலாம். இவ்வகையில் சிந்திக்கும்போதுதான், உண்மைக் கிறித்தவத்தையோ, கிறித்தவரையோ அவர் அவமதித்தாரில்லை என்ற கருத்தும், உண்மைக் கிறித்தவர் — பார்சிவல் பாதிரியார் போன்றோர் அவரை மிக மிக மதித்தார்கள் என்ற கருத்தும் புலனுகின்றன.

"பூர்வகாலத்திலே சைவசமய விருத்தியின் பொருட்டு முயன்ற பெரியோர்களுக்குச் சைவசமயிகளாலே நன்கு மதிப்பும், பரசமயிகளாலே இடையூறும் செய்யப்பட்டன. தற்காலத்திலே சைவசமயவிருத்திப் பொருட்டுமுயலும் சிறியேனுக்குச் சைவசமயிகளாலேயே அவமதிப்பும் இடையூறும் செய்யப்படுகின்றன. பரசமயிகளோ எனக்கு இடையூறு செய்யவும் இல்லை என்னை அவமதிக்கவும் இல்லை" என்ற அவருடைய வாக்கை நாம் நன்ருகச் சிந்தித்து வெட்கப்படவேண்டும். கலங்கவேண்டும். பிராயச்சித்தம் செய்யவேண்டும்.

சைவங்காக்கும் பணியே திருவருட்பணி — சைவர்களுக்குக், காலத்தினுற் செய்யும் உதவி எனக்கண்டு, தாமே ஒரு தாபனமாக இயங்கினுர் நாவலர் பெருமான். சைவப்பிரசங்கமரபென்றும், சைவப்பிரகாச வித்தியாசாலைகள் என்றும், அச்சகங்கள் என்றும், ஆலயப் புனருத்தாரணங்கள் என்றும், புராணபடனமென்றும், திருமுறைகளோதும் தனிமரபென்றும் அவருடைய பணிகள் பன்முகப்பட்டு மலர்ந்தன. சமயப் பணியே நாவலர் பெருமானது உயிர்மூச்சு. ஏனைய பணிகள் அதற்குக் கருவிகளாக அமைந்தவை.

"வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்'' என்பது மணிவாசகம்; நாமும் நாம் வாழ — வாழ்வாங்கு வாழ — நாவலர் பெருமானை வாழ்த்துவோம். நன்றியுள்ளவர்களாக வாழ்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவமணிகளில் நான் கண்ட தவமணி



ஆலயத்துக்கு அழகைத் தருபவை அகழி விளக்குகள். வித்தியாலத்துக்கு வெளிச்சத்தைக் கொடுப்பவை ஆசிரிய தீபங்களே. இந்த வகையில் உரும்பராய் இந்துக் கல்லூரியில் நீண்ட நாட் பணியாற்றிய தூண்டாமணி விளக்கு திருமதி தவமணி இரத்தினசிங்கமவர்களின் உத்தியோக ஒய்வு எமக்கும், எம்மினத்துக்கும், இந்துக் கல்லூரி மாணவர்களுக்கும் இன்றியமையாத ஓர் இழப்பாகும்.

“காலேயே எழுந்து தெய்வக் கடனெலா மினிதேயாற்றிச்
சாலேயே நினைவ தாகச் சத்திய வதனத்தாளும்
மாலேயின் வானத் தன்ன மணியொளி மேனிகாலப்
பாலேயே சிந்தும் மழலேப் பாலகர் ஆலயத்தே”

வாயிலில் வந்து வணங்கிய சிரத்தோடும், இணங்கிய முகத்தோடும், கடமையிற் கருத்தாளாகிக் காரியாலயத்தே கையெழுத்திட்டபின் சாலேயையும், சூழலேயும் சற்றுநோக்கி, உள்ளம் நிறைந்த உவகையளாய், உடனுசிரியர்களுடன் உரையாடி மகிழும்போது ஒரு மணிச் சத்தம். அடுத்த மணிச்சத்தத்தில் ஆராதனே மண்டப அமைதி. பின் வழமைக்கும் மேலான வகுப்பு வேலேகள். இடை நேரங்களில் இன்னும் இரவல் வேலேகள். இவையெல்லாவற்றையும் அன்று தொட்டின்று வரை, சிரித்த முகத்தோடு செய்துதவிய இச்செங்கமலத் திருமகள் உத்தியோக ஒய்வு பெற்ற தைத் திங்கள் 29-ம் நாள் (29-01-1980) பாடசாலேச் சரித்திரத்தில் ஓர் பதமையற்ற நாளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாணவர்க்குத் தாயாகி மற்றவர்க்கோர் மருந்தாகும்
கானின்ற தேன் மொழியாள் கை"

"கற்கண்டை ஆங்கிலத்தில் கரைத்தளித்த கமலத்தாள்
சொற்கொண்டு நாம் வாழத்துணை"

இன்னோரன்ன இலட்சிய இலட்சணங்கள் நிறைந்த ஆசிரியையின் அறிவியல், அழகியலை மேலும் ஆராய்ந்தால் அன்னாள் "வானம் பொய்த்தாலும் மானம் பொய்க்காத ஒரு **வைடூரியம்**"; "குலத்தழகில் மிக்கு நிற்கும் குவளை மலர் **நீலம்**; ஆணிப்பொன் இனம் நாண அழகொழிக்கும் **மாணிக்கம்**; கல்விக் கடலிற் கண்டெடுத்த நல் **முத்து**; ஒழுக்கநெறிக் கிறுதிகண்ட ஒரு **வைரம்**; இதயத்தின் ஈரமதால் என்றுமே **மரகதம்**; அந்திவான் சிந்தும் அழகினிலே தனிப் **பவளம்**; தன் தலைவன் வசமாகும் தனித்துவத்தால் **புருடராகம்**; கோவேந்தர் மனங் களிக்கும் ஒரு **கோமேதகம்**,

"மனம் வருந்தப் பேசார் மற்றவரை நோகார்
இனம் துதிக்கும் இவர்"

இத்தன்மைத் தான இவரின் பாடசாலைச் சேவையைப் பாராட்டுவதோடு திருப்தியடைவது பாடசாலைப் பாரம் பரியமாகும். எங்கும் ஓய்வு பெறுவோருக்கு ஒரு விழா. இங்கும் அந்த விழா. விழாக்களெல்லாம் வேதனையைத் தீர்க்கா நித்திய லட்சுமியாக நின்றொளித்த இப்பெருமகளின் ஓய்வு கல்லூரிக்கோர் தேய்வு. அங்கிங்கெனாதபடி இங்கேயே வைத்து நம்பிவந்த சிறார்களுக்கு நல்லுபதேசஞ் செய்த இவ்வாசிரியை நாளுள்ளவரை, நாடுள்ளவரை, நாமுள்ளவரை மறக்கவே முடியாது. இவை ஓய்வுறுவோர்க்குரைக்கும் உபசார உரைப்போலிகளல்ல, என் இதயத்தாலளந்தெடுத்த இங்கித உரைகளாகும். எம் உடலுருவம் இந்த ஊரை விட்டு நீங்கலாம். ஆனால் உள்ளமோ இவ்வுத்தமியை விட்டு ஒருபோதுமே நீங்காது. உறுதி, ஓய்வுப் பருவத்திலும் ஒரு நூற்றாண்டு வாழ இறைவனை வேண்டி நிறைவு.

"நாளும் பொழுதும் நட்புடனே பழகி
ஆளும் வகையறிந்த அணங்கு"

"இதயத்தின் ஊற்றாகி எழுத்தாக நிற்குமிவை
உதயத்தின் போது வந்த ஒன்று"

சுபம்.

**திருமதி இ. சிவலிங்கம்**
**ஆசிரியை**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாணவர் பகுதி**

# நான் வளர்க்கும் செல்லப் பிராணி

நான் ஒரு நாள் எனது அக்கா வீட்டிற்குச் சென்றேன் அங்கே
ஒரு பூனையைக் கண்டேன். நான் அதன் மேல் ஆசை கொண்டேன்.
அதை எனக்குத் தருமாறு அக்காவிடம் கேட்டேன். அக்கா அதை
மனப்பூர்வமாகத் தந்தார். நான் அக்காவுக்கு நன்றி சொல்லிவிட்டுப் பூனை
யுடன் வீட்டை அடைந்தேன். பூனையினுடைய வெண்மையான நிறத்
தையும், அதன் சிவந்த கண்களையும், கால்களில் மெத்தை போன்று
இருக்கும் அதன் பாதத்தையும், சிவந்த வாயையும் கண்டு இரசித்து
மகிழ்ந்தேன். அம்மாவிடன் பூனையைக் காட்டி இதற்கு என்ன பெயர்
வைக்கலாம் என்று கேட்டேன். இதற்குத்துளசி என்று பெயர் வை
என்றூர் அம்மா. அம்மாவின் விருப்பப்படி அதற்குத்துளசி என்று
பெயர் வைத்தேன். நான் வளர்க்கும் செல்லப் பிராணியாகக் கொண்டு
அதற்குப் பாலுஞ் சோறும் ஊட்டி வளர்த்தேன் அது என்னிடம்
பாசம் வைத்தது.

நான் பாடசாலைக்குச் செல்லும் பொழுது அது என்னோடு வரும்.
நான் அதை அன்புடன் தடவிவிட்டால் அது வீட்டுக்குப் போய்விடும்.
பாடசாலையைவிட்டு வீட்டுக்கு வரும்போது எனது காலைச் சுற்றிச் சுற்றி
மியா, மியா என்று கத்தும் நான் துளசி என்று செல்லமாகச் சொல்
லித் தடவி விட்டால் அது போய்விடும். நான் கதிரையில் இருக்கும்
போது அது எனது மடியில் வந்து இருந்து விடும். நான் நித்திரை
செய்யும்போது அதுவும் என்னுடனேயே நித்திரை செய்யும். அம்மா
நான் பூனையோடு சேர்ந்திருப்பதைக் கண்டு பேசுவார். நான் அதைப்
பொருட்படுத்துவதில்லை. அதன் மீது பாசத்தை வளர்த்தேன். ஒரு
நாள் அடுப்பங்கரையில் பால் இருந்தது. அதைக் கண்ட எனது அன்
புப்பூனை அதைக் குடித்து விட்டது. இதைக் கண்ட எனது தாயார்
இது கள்ளப் பூனை என்று சொல்லி அடித்துவிட்டார். அது என்
னைச் சுற்றிச் சுற்றி நெடு நேரங்கத்தியது. நான் விஷயத்தை அம்மா
விடம் கேட்டறிந்தேன் நான் அம்மாவை நீங்கள் பாலை மூடி வைத்தால்
அது ஏன் குடிக்கும். பால் தெரிந்தபடியால் தானே அது குடித்தது
அதற்குப் புத்தி இருக்காது என்று பேசினேன்.

அந்த நாள் முழுவதும் நானும் துளசியும் உணவுட்கொள்ளாமல்
உபவாசம் இருந்தோம். அதுமுதல் எனது துளசியை ஒருவரும் அடிப்
பது கிடையாது. ஒரு நாள் அக்கா எனது வீட்டிற்கு வந்தார். பூனை
யைப் பார்த்து நீ நல்ல பிள்ளை எவ்வளவு ஆசையோடு வளர்க்கிறுய்
என்று சொல்லி என்னைப் போற்றினர். நான் மகிழ்ந்தேன். ஒரு நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது அன்புத் துளசி ஆறு குட்டிகள் ஈன்றாள். அதன் பின் அவள் ஆறு குட்டிகளுக்குத் தாயாய் வீட்டில் ஒரு மூலையில் இருந்தாள். இதைக் கண்ட எனது பகைவன் அதை அடித்து விட்டான். அது வீட்டிற்கு வந்து ஒருமுறை கத்திவிட்டு இறந்தது.

பின்னர் தாய்ப்பால் இல்லாமல் குட்டிகளும் ஒவ்வொன்றாக இறந்தன. எனது அன்புத் துளசியும் குட்டிகளும் இறந்ததை நினைத்து நினைத்து அழுதேன். அம்மா அதைக் கண்டு அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும் என்னும் பழமொழியைச் சொன்னார். அம்மா ஆறுதல் கூறியமையால் கவலை ஓரளவு மறைந்தது, எனினும் அதை நினைக்க அழுகை வருகிறது.

சி. விஜயகுமார்
6 C

---

## உள்ளம்

உள்ளம் ஒரு கோயில், அங்கே உண்மையே தெய்வம் என்பது பெரியோர் வாக்கு. உள்ளம் ஒரு தூய்மையான இடம் அங்கே பொய், வஞ்சகம், பொறாமை, களவு போன்ற தீய குணங்கள் வைத்திருக்காமல் உண்மை, அன்பு, பிறரை நேசித்தல், ஏழைகளுக்கு இரங்குதல் போன்ற நல்ல குணங்களை எமது உள்ளத்திலே வைத்திருத்தல் வேண்டும் எமது உள்ளத்தை கட்டுப்பாடின்றி அலையவிடக் கூடாது. எமது உள்ளத்தை ஒரு வழிப் படுத்தி நல்ல வழிக்குக் கொண்டு வர வேண்டும்.

ஒரு மனிதன் சுகமாக வாழ்வானாயின் அது அவனுடைய உடல் நலத்தைக் குறிக்காது; உள நலத்தைக் குறிக்கும். எமது உள்ளம் ஒரு வழிப்பட்டுவிட்டால் எமது உடலில் நோயிருந்தாலும் அந்நோய் எமக்கு நோயாகத் தென்பட மாட்டாது.

அத்தோடு நாம் ஒவ்வொருவரும் நமது வாழ்க்கையில் ஒவ்வொரு இலட்சியத்தைக் கொண்டவராக இருக்க வேண்டும். மகாத்மா காந்தி இந்தியாவுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பேன் என்ற இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவிற்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்தார். இன்றைய சிறுவர்களே நாளைய சமுதாயிகள் என்ற எண்ணத்தை நமது மனதில் ஏற்படுத்தி நமது நாட்டிற்குப் பெருமையைத் தேடிக்கொடுப்போமாக.

வி. உமா
6 C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பஸ் வண்டிப் பிரயாணத்தின்போது ஏற்பட்ட மறக்கமுடியாத சம்பவம்

நான் எனது அப்பாவுடன் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு பஸ் வண்டியில் பிரயாணம் செய்தேன். நான் இருந்த ஆசனத்துக்கு முதல் ஆசனத்தில் ஒரு பெண்மணி இருந்தார். அவர் வெளிநாட்டி லிருந்து வந்தவர் போல் எனக்குக் காட்சி அளித்தார். பஸ் வண்டி ஓரிடத்தில் நின்றது. எல்லோரும் இறங்கி ஒரு கடைக்குச் சென்றோம். அப்போது அந்தப் பெண் தனது நண்பர்களுடன் பேசிக் கொண்டு நின்றார். நாங்கள் எல்லோரும் கடையிலிருந்து திரும்பும்போது அந்தப் பெண்ணைக் காணவில்லை. நான் அப்பொழுது அவர் தனது நண்பர்க ளுடன் சென்று விட்டார் என நினைத்தேன். பின் பஸ் வண்டியில் ஏறி அமர்ந்தேன். அவர் இருந்த இடத்தில் ஒரு பணப்பை இருப்ப தைக் கண்டேன். திருடர்கள் திருடாத வண்ணம் நான் அதை எடுத்து வைத்திருந்தேன். பின் பஸ் வண்டி கொழும்பை அடைந்தது, எல் லோரும் பஸ்சிலிருந்து இறங்கினோம்.

நான் அப்பாவிடம் என்னை பொலிஸ் நிலையத்துக்குக் கூட்டிக் கொண்டு செல்லுமாறு கேட்டேன். அப்பாவும் என்னைப் பொலிஸ் நிலை யத்துக்குக் கூட்டிச் சென்றார். நான் அந்தப் பணப்பையை பொலி சாரிடம் கொடுத்து விட்டு வீரகேசரியில் பிரசுரிக்கும்படி கேட்டேன். அவர்கள் அதற்குச் சம்மதித்தார்கள். நான் அப்பாவுடன் வீடு சென் றேன். நான் வீடு சென்றதும் நடந்த கதையை அம்மாவிடம் கூறி னேன். பின் அதைப் பொலிசில் கொடுத்ததையும் கூறினேன். மறு நாள் பத்திரிகை எனது வீட்டுக்கு வந்தது நான் அந்தப் பத்திரிகை யைப் படித்தேன், அதிலே நான் கொடுத்த தகவல் இருப்பதைக் கண்டேன்.

அன்றைய பொழுது கழிந்தது மறுநாள் எனக்கு ஒரு கடிதம் வந்தது. நான் கடிதத்தை ஆவலுடன் பிரித்துப் படித்தேன். எனக்கு ஒரு பரிசு அனுப்பியிருந்ததாகவும். அதனைத் தபாற் கந்தோரில் சென்று பெற்றுக் கொள்ளுமாறும் எழுதப்பட்டிருந்தது. நான் தபாற் கந்தோ ருக்குச் சென்று கடிதத்தைக் காட்டி அதனைப் பெற்றுக்கொண்டேன். அந்தப் பரிசு மிகவும் விலையுயர்ந்த ஒரு சங்கிலி ஆகும். எனக்கு அதைப் பெற்றதில் மிக்க மகிழ்ச்சி. நான் வீடு சென்றதும் அதை அம்மாவிடம் கொடுத்தேன். எனக்கு அந்தப் பையை எடுத்துக் கொடுத் ததில் மிக்க மகிழ்ச்சி.

சி. சுதா
6 C

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையின் உயர்வு

வட இந்தியாவில் வேலன் என்னும் பெயருடைய ஏழை வசித்து வந்தான். அவன் ஏழையாக இருந்தாலும் புத்திக் கூர்மை உள்ளவன். சில நல்ல மனம் படைத்த உத்தமர்கள் அவன் செய்யும் காரியத்தை எல்லாம் புகழ்ந்து வந்தனர். சில கல் மனம் படைத்த கயவர்கள் பொறாமையால் திட்டி ஏசுவர். அவன் யாரிடமும் வேலை கேட்டால் போடா மடையா உனக்கும் ஒரு வேலையாடா என்று கூறி விரட்டி விடுவார்கள்.

ஒரு நாள் அவனுக்குப் பசி எழும்பத் தொடங்கியது. ஒரு உத்தமர் வீட்டுக்குச் சென்று ஐயா உங்கள் முற்றத்தில் உள்ள சருகுகளை கூட்டித் துப்பரவு செய்கிறேன் எனக்கு ஒரு பிடி சோறு போடுங்கள் என்றான். உத்தமரும் சரி, கூட்டித் துப்பரவு செய் முதலில் உணவை உண் என்றார் வேலனுக்கும் பசியாக இருந்தபடியால் ஆம் ஐயா என்று கூறி முதலில் உணவை உண்டான்.

உத்தமரின் மனைவி வேலனுக்குச் சோறு கொடுத்துக்கொண்டிருந்தார். வேலனுக்குப் பசி அதிகமாக இருந்தபடியால் உணவை நிறைய உண்டான். உத்தமர் சருகுக்குள் சில பொற்காசுகளைப் போட்டார். வேலன் உணவை உண்டபின் சருகுகளைக் கூட்டத் தொடங்கினான். அச் சருகுக்குள் சில பொற்காசுகள் இருப்பதைக் கண்டு ஆச்சரியம் அடைந்தான். இதைத் தான் எடுக்க விரும்பாமல் உத்தமரிடம் கொடுத்தான். வேலனின் நல்ல குணத்தைக் கண்டுகொண்டார் எஜமான்.

நான் உன்னைச் சோதிக்கவே பொற்காசுகளைச் சருகினுள் போட்டேன். இதைக் கொண்டு போய் மனைவி மக்களோடு சந்தோஷமாய் வாழ் என்றார், அந்த மனிதர். அடுத்த நாள் உத்தமர் கெட்ட மனம் படைத்தவர்களுக்கு வேலனைப்பற்றிக்கூறினார். இதைக் கேள்வியுற்ற அரசன் வேலனை அழைத்து அரசசபைக் காவலனாக, அமர்த்தினான். அன்று முதல் வேலனை எல்லோரும் மதித்தனர். வேலன் உண்மையால் உயர்வு அடைந்தான்.

செ. செல்வமலர்
8 A

—

வி - 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து

நாம் நமது வாழ்க்கையிலிருந்து பெறும் அறிவு அனுபவ அறிவு எனப்படும். நூலறிவைவிட அனுபவ அறிவே சிறந்தது. நம் முன்னோர்கள் பண்பட்ட வாழ்வு நடாத்தியவர்கள். அவர்களது பழுத்த வாழ்விலிருந்து பிறந்து தொன்று தொட்டு வழங்கிவரும் மொழிகள் பழமொழிகள் ஆகும். அவை அறிவுறுத்தும் அரிய கருத்துக்கள் நாம் நல்வாழ்வு வாழத் துணை செய்வன. நாம் அனைவரும் நல்வாழ்வு வாழவும் இன்பமாக இருக்கவுமே விரும்புகின்றோம். விரும்பி இடையறாது முயல்கின்றோம். ஆனால் நம்மில் மிகச் சிலரே இன்பத்தை அடைகின்றனர். காரணம் என்ன? இன்பத்துக்குரிய காரணம் புறத்திலன்றி நமது அகத்திலே இருப்பது தான். இன் இன்பத்துக்குரிய காரணத்தை அகத்தே பெற்றவர்கள் இன்ப வாழ்வு நடாத்துகின்றார்கள் இதுவே இப் பொன்மொழி தரும் பேருண்மையாகும்.

'பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை' என்று கருதும் பலர் பொருள் தேடுவதிலேயே வாழ்நாள் முழுவதையும் செலவு செய்கின்றார்கள். இரவு பகலாக எண்ணித் திட்டமிடுகிறார்கள். உணவையும், உறக்கத்தையும் சுருக்கிப் பணத்தையே உயிரென மதித்துப் பாடுபடுகின்றார்கள். தாம் தேடிய செல்வத்தைக் கண்ணும் கருத்துமாகக் காக்கின்றார்கள். தக்க வழிகளில் முதலிட்டுப் பெருக்குகின்றார்கள். தாங்கள் கருதிய பெருந் தொகைப் பொருள் சேருமளவும் சோர மாட்டார்கள். தமக்குப் புகழுண்டாக நடக்கமாட்டார்கள். முதுமை வந்ததென்றும் ஓய மாட்டார்கள். அந்தோ அவர்கள் தாம் கருதிய பொருளைப் பெற்றாருமல்லர். பல்லாண்டு வாழ்ந்து பலவாறு உழன்று பயனற்ற வாழ்வு கண்டாரன்றித் தமக்கும் பிறருக்கும் ஒரு பயனேனும் கண்டாரல்லர்.

மன நிறைவற்று ஈயாது பொருள் தேடுபவனின் செல்வத்தைத் தாயத்தார் கவர முயல்வர். கள்வர் கவர்ந்து செல்வர். தேடிய பொருளை அனுபவியாது இழப்பவன் தேனீ போலத் துயர முறுவான். அந்தோ பிறர் கவர்ந்தனுபவிப்பதற்காகப் பொருள் தேடுபவரின் மதி என்னே! மக்களுக்கு மன நிறைவு உண்டாகாமைக்குரிய காரணம் யாது? எல்லா நிறைவுமிருந்தும் மனநிறைவு இல்லாமையாலன்றோ மனிதனின் வாழ்வு பாழாகின்றது ஒருவனின் மனநிறைவைக் குலைப்பதற்குரிய காரணம் அவன் தன் நிலையையும், பிறர் நிலையையும் ஒப்பு நோக்குவதேயாகும். செல்வத்தில் இச்சையுடையவன் பெருஞ் செல்வனையே மதித்து அவன் போலாவதற்கு அல்லும் பகலும் கனவு காண்கிறான். புகழில் விருப்புடையோன் ஒரு பெரும் புகழாளனைத் தன் இலட்சிய புருஷனாகக் கருதுகிறான். கல்வியில் நாட்டமுடையோன் தான் மதிக்கும் கற்றோன் போல் உயரக் கற்பனை செய்கிறான். இவ்வித ஒப்பு நோக்கு ஒருவனை உயர்த்தவல்லதேயாயினும் செல்வர்க்கு உகந்ததன்று. ஏன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வத்திற்கு எல்லையில்லை. செல்வம் முற்றவத்தான் வருவது. முயற்சியால் வருவதன்று என்று அறநூல்கள் கூறுகின்றன. அறிஞர்கள் இவ்வுண்மையை மனத்துட் கொண்டு உள்ள பொருளோடு நிறைவு பெற்றிருப்பர்.

தேடிய செல்வம் போதுமென்ற மனநிறைவு வேண்டும். செல்வம் பெருகுந் தோறும் அதைப் பற்றிய கவலையும் பெருகும். கல்வி நிறையும்போது அதனால் இன்பமும் நிறையும். அதனால் தான் பொருள் நிலையில் போதுமென்ற மனநிறைவு இன்றியமையாததாக இருக்கிறது.

மனிதர்க்கு அறமும் இன்பமும் வாழ்க்கையினடையும் பயன் பொருளன்று. பொருளானது. அறத்தையும் இன்பத்தையும் அடைய ஏதுவானதன்று. இதை அறியாதவர் பொருளை மாத்திரம் தேடி அறத்தையும் இன்பத்தையும் கைவிடுகின்றனர் பொருளாசை பிடித்த ஒருவன் தான் தொட்டதெல்லாம் பொன்னுக வேண்டும் என்று வரம் பெற்றான். அதன் பயனுக அவன் தொட்ட உணவு பொன்னனது. அதனுல் உணவின்றி வருந்தினுன். உடை பொன்னுனது. மான மிழந்தான். அவன் பொன்னுசை தன்னுயிர்க்கே பொல்லாதது எனக் கண்டான். மீண்டும் கடவுளை இரந்து மனநிறைவு ஒன்றையே வேண்டி மகிழ்ந்தான். அவனைப் போல் ஆசைப் பேய் பிடித்தோர் இன்னும் பலருளர்.

போதுமென்ற மன நிறைவுடையவன், பொருளாசையில்லான் என்பது மாத்திரமன்றிப் பொருமையுமிலன். ஆனல் அனுதாபம் உள்ளான் தன்னலம் பாராது மன்னுயிர் அனைத்தையும் ஓம்புவான். மனநிறைவுடையவன் ஒருவனே அறம், பொருள், இன்பம் மூன்றையுமுடையவன். ஆகவே எல்லோரும் மக்களாக வாழ வேண்டுமானுல் மனநிறைவொன்றையே தேடி அதனைப் போற்றி வளர்க்க வேண்டும்.

"செல்வ மென்பது சிந்தையின் நிறைவே".

ச. பரிபூரணம்
8 A

---

## பேராசையின் விளைவு

ஓர் ஊரிலே இரு மீனவ நண்பர்கள் வாழ்ந்து வந்தார்கள். ஒருவன் பெயர் வாசன், மற்றவன் பெயர் சோமன். வாசன் நற்குணம் படைத்தவன் ஆனல் சோமனே பேராசை பிடித்தவன். இரவு வந்த

250130

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுடன் இருவரும் அயலிலுள்ள கடலுக்கு மீன் பிடிக்கச் சென்று விடு வார்கள். பிடித்த மீன்களை இருவரும் பங்கிட்டுக் கொள்வர். வாசன் சிறிதளவு மீனைச் சமையலுக்கு எடுத்து விட்டு மிகுதியை விற்று விடு வான்.

வழக்கம் போல ஒரு நாள் இருவரும் மீன் பிடிக்கச் சென்றார் கள். வாசன் சமையலுக்கு எடுத்து வந்த மீனை வெட்டும்போது ஒன் பது இரத்தினக்கற்கள் பளபளவெனக் காட்சியளித்தன. வாசன் அவற்றை எடுத்துச் சென்று தன் நண்பனுக்கும் மூன்றைக் கொடுத்து விட்டு வீடு திரும்பினான். பேராசை பிடித்த சோமன் மறுநாள் வாச னுக்குச் சிறிதளவு மீனைக் கொடுத்துவிட்டுத் தான் பெருமளவு மீனை எடுத்துக் கொண்டான். நல்லகுணம் படைத்த வாசன் அதை அன்பு டன் ஏற்றுக் கொண்டான். பெருமளவு மீனை எடுத்த சோமன் அவற்றை எல்லாம் வீட்டுக்கு எடுத்துச் சென்று வெட்டிப்பார்த்தான். ஒன்றும் தென்படவில்லை. மறுநாட்காலை வாசன் தனக்கு இரத்தினக் கற்கள் கிடைத்ததாகக் கூறி அவற்றில் இரண்டைச் சோமனுக்கும் கொடுத்தான்.

ஆத்திரமும், பொறாமையும் கொண்ட சோமன் வாசனைப் பார்த்து, “வாசா நான் இனிமேல் தனியே கடலுக்குப் போவேன் நீ வரத் தேவையில்லை” என்று கூறினான். அதற்கு வாசன் “உங்கள் இஷ்டம் போலச் செய்யுங்கள்” என்றான். மறுநாள் இருவரும் தனித்தனியே சென்று மீன் பிடித்தனர். சோமன் பிடித்த மீன்கள் எல்லாவற்றை யும் வெட்டிப்பார்த்தான். ஒன்றும் அகப்படவில்லை. மறுநாளும் அகப் படவில்லை. இப்படியாகச் சில நாட்கள் போய்க் கொண்டிருந்தன. வெட்டிய மீன்களை சந்தையில் யார்தான் வாங்குவார்கள்? இதனால் சோமனுக்கு வருமானம் குன்றி வாழ்க்கைத் தரமும் குன்றியது அவ னுக்கு வாழ்க்கையிலே கஷ்டம் ஏற்பட்டது. தன் பேராசையால் அருமையான நண்பனையே இழந்ததை உணர்ந்தான்.

பின்னர் சோமன் வாசனிடம் சென்று மன்னிப்புக் கேட்பதற் காக ஓடோடிச் சென்றான். அதே நேரம் வழியில் வாசனும் வந்து கொண்டிருந்தான். சோமன் வாசனின் காலடியில் வீழ்ந்து தான் செய்த குற்றங்கள் எல்லாவற்றையும் மன்னிக்குமாறு வேண்டினான். வாசன் அவனை வாரி அணைத்து மன்னிப்புக் கொடுத்தான். அன்று தொடக்கம் இருவரும் ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் வாழ்ந்தார் கள்.

கு. வசந்தினி
9 C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன உலகத்துப் பெண்கள்

"எண்ணறக் கற்று எழுத்தற வாசித்தாலும்
பெண்புத்தி பின்புத்தி"

என்ற ஆன்றோர் வாக்கை நம் மக்கள் எடுகோளாகக் கொண்டு பெண்களாகிய எம்மை மிகவும் ஒதுக்கி வைத்திருக்கின்றனர்.

பண்டைய பெண்கள் தம் முன்னோர்களுக்குப் பயந்து வீட்டைவிட்டு வெளியேறாது கல்விகற்காது, தம் அறிவைப் பெருக்காது தம் முன்னோர்களின் அறியாமையைத் தகர்த்தெறியாது அவர்களின் கட்டுப்பாட்டிற்குள் அடங்கி வாழ்ந்தனர். அத்துடன் பெண்களுக்கு ஆண்களைப் போல் அதிகாரத்துவம் இல்லை என்றும் அதனால் அவர்கள் அரசாங்கத்திலோ, வேறு எந்த அலுவல்களிலும் அங்கம் வகிக்க இயலாது என்றும் தலைமை தாங்க முடியாது என்றும் கருதினர். பெண்கள் வீடுகளினுள் அடைபட்டிருந்து ஆண்களுக்குப் பணிவிடை செய்வதற்காகவே இவ்வுலகில் உதித்தனர் என்று நம் முன்னோர் கருதினர். நம் முன்னோர்களின் அறியாமைக்குச் சில தன்னலமான காரணங்களும் உண்டு.

அதாவது அவர்களுடைய காலத்தில் உலகில் சனத்தொகைப் பெருக்கம் குறைவு. அதனால் அவர்களுக்குப் போதிய உணவுப் பொருட்களும், பணமும் இருந்தன. மனித வாழ்க்கைக்கு இவ்விரண்டு பொருட்களும் இருக்கும்போது அவர்கள் ஏன் பெண்களை வெளியில் அனுப்புவார்கள்? ஆனால் நம் முன்னோர்கள் தங்களது வருங்காலச் சந்ததிகளை நினைத்திருந்தால் இப்படிச் செய்திருப்பார்களா? இல்லை, இவர்கள் முன்னமே பெண்களை வெளியில் அனுப்பியிருந்தால் தற்போதைய நிலைமையிலும் பார்க்க மிகவும் சந்தோஷமாக இருந்திருப்போம் அன்றோ? இவற்றுக்கெல்லாம் காரணம் அவர்களின் அறியாமையே.

நவீன பெண்கள் தம் முன்னோர்களின் அறியாமையைத் தகர்த்தெறிந்துவிட்டுத் தம் அறிவின் வளர்ச்சியால் எல்லாவிதமான துறைகளிலும் பணியாற்றுகின்றனர். ஒரு குடும்பம் நடாத்துவதற்கும் பெண்களின் அறிவு அவசியம் பெண்களுக்கு அறிவு இல்லா விட்டால் ஒரு குடும்பம் நடாத்துவது மிகவும் கஷ்டமாகத் தானிருக்கிறது. தற்காலப் பெண்கள் பொறியியல் துறைகளிலும், மருத்துவத்துறையிலும், வர்த்தகத்துறையிலும் பெரும் பணியாற்றி வருகின்றனர்.

இவர்கள் எல்லா விதமான துறைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இப்படியாகப் பெண்கள் முன்னேறிக் கொண்டு செல்கின்றனர். பெண்கள் பொதுவாக எல்லாவித அலுவல்களிலும் அங்கம் வகிக்கின்றனர். தமது கடமையை மிகவும் பொறுமையுடனும் ஆர்வத்துடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றுகின்றனர். பெண்கள் தங்கள் வேலைகளில் ஆர்வத்தோடும்,
பொறுமையோடும் கண்ணும் கருத்துமாய் செயல்படுகின்றனர். சந்தோஷ
முகத்தோடு நின்று செயலாற்றுகின்றனர். இதனால் எந்த விஷயங்களி
லும் பெண்கள் விரும்பப்படுகின்றனர். இதனால் பெண்களால் நாடும்
பல நன்மையடைந்து வருகிறது. தற்காலப் பெண்கள் அத்துடன் மட்
டும் நின்று விடாமல் பிரதம மந்திரியாகவும், நகர்காவலராகவும் பணி
புரிந்து வருகின்றனர்.

இந்தியா, இஸ்ரேல் ஆகிய நாடுகளில் பெண்களே நாட்டு மக்களை
ஆளுகின்றனர். ஏன் நாம் தூரப்போகவேண்டும்? நம் நாடாகிய
இலங்கையில் கூட திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மக்களை
ஆண்டுவந்தாரல்லவா? இதுபோலவே தற்காலப் பெண்கள் எல்லாத்
துறைகளிலும் அங்கம் வகித்து வருகின்றனர். பெண்கள் இனி சந்திர
னில் காலடி எடுத்துவைக்கும் காலம் மிக விரைவில் வர இருக்கிறது.
எனவே இவர்கள் சந்திரனிலும் காலடி எடுத்து வைத்து விட்டால்
வேறு எதைச் செய்ய வேண்டும். பெண்களின் இத்தகைய முன்னேற்
றத்துக்குக் காரணம் ஆண்களின் புத்தியா? இல்லை. பெண்களினுடைய
புத்திக்கூர்மையும் செயற்றிறனுமே. எனவே, "பெண்புத்தி பின்புத்தி"
என்ற ஆன்றோர் மொழி "பெண்புத்தி முன்புத்தி" என மாறல்
வேண்டும்.

செ. நிமலினி
9 D

---

தகப்பன், தாய், பெரிய தகப்பன், சிறிய தகப்பன், பெரிய தாய்,
சிறிய தாய், பாட்டன், பாட்டி. மாமன், மாமி, தமையன் மனைவி, குரு,
குருபத்தினி, உபாத்தியாயர் முதலிய பெரியோர்கள் வந்தால் இருக்கை
விட்டெழுந்து வந்தனஞ் செய்தல் வேண்டும். வயதினாலும், கல்வியினாலும்.
ஒழுக்கத்தினாலும் முதிர்ந்த பெரியோர்கள் வரும்போது சிறியவன் இருக்கை
விட்டெழும்பாதிருந்தால் அற்பாயுசை உடையான். பெரியோர்களை நாடோ
றும் வந்தனஞ் செய்பவனுக்கு ஆயுள், கல்வி, கீர்த்தி, பலம் எனும் நான்
கும் விருத்தியாகும்.

— ஆறுமுகநாவலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை

## பனை வாழ்த்து

யாழ் நாட்டின் கரையோரம் கால் நாட்டி நிற்கின்ற
தாய் நாட்டின் மணியே, கற்பகமே, நல்முத்தே
சொல்நீட்டி வணங்குகின்றேன் நம்நாட்டுப் பனைமரமே
பனையேதம் உயிர் என்று பண்டையர்கள் வாழ்த்தி வந்தார்
துணையாகத்தம் வாழ்க்கைத் துன்பமெல்லாம் தீர்ந்திடவே
கைமாறு கருதாது காலமெல்லாம் பயன்தருவாய்
உய்யுமாறு வாழ்த்து கின்றோம் நீடூழி வாழியவே.

## பனை என் தாய்

உனை ஈன்ற மண்மீதே நானும் பிறந்து வந்தேன்
உலகாண்ட மன்னனுமே உனைப்பேணி வளர்த்து வந்தான்
உந்தன் பயனை எல்லாம் சொல்லி அடங்காது
எந்தன் உயிர் வரைக்கும் சொல்லி முடியாது
தாயே பனையன்னை தருவாய் பதநீரை
தங்கப் பனைத்தாயே உன்மைந்தன் நான் என்றேன்
அன்பே என்னுயிர் அன்னாய் அறநிழல் தாருமே.

## பனை என் காதலி

காதல் கொள்கின்றேன் கருமரமே கற்பகமே
ஒய்தல் இன்றி என்றும் ஈய்ந்திடுவீர் நற்பயனை
கள்ளாய் பதநீராய் தந்தீர் உளங் கொள்ள
எந்தன் இதழ்ஓரம் இனித்ததே தேனாய்
என்றும் உன்தயவே என்னிடையே தோற்றும்
காணும் இடமெல்லாம் கண்டேன் உன்தோற்றம்
கண்ணே பனை மாதே காதலித்தேன் களிதீர.

க. தேவர்குலசிங்கம்
10 A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்சணப் பிசாசுகள்

ஒரு ஊரில் கணபதி என்பவன் இருந்தான். அவன் அடுத்த ஊரில் உள்ள ஒரு பெண்ணை விவாகம் செய்து இல்லறம் நடாத்தினன். அவனுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு அவர்கள் குட்டப்பன் என்று பெயர் வைத்து வளர்த்து வந்தனர். அவன் சிறுவயதாய் இருக்கும் போதே தந்தை இறந்து விட்டார். அவனுடைய தாயார் அவனுக்குப் பட்சணங்கள் செய்யும் முறையைக் கற்றுக் கொடுத்தாள். அவனும் ஆசையோடு பழகினன். அவன் தான் சீவியம் நடாத்துவதற்காகப் பட்சணக் கடை ஒன்றை அடுத்த ஊரில் திறந்தான்.

அந்த ஊரிலுள்ள மற்றப் பட்சணக் கடைக்காரர்கள் ஏழு மணிக்கே கடைகளைப் பூட்டினார்கள். அவர்களில் ஒருவன் குட்டப்பனிடம் வந்து ஏன் கடையைப் பூட்டாமல் இருக்கிறாய்? என்று கேட்டான். அவனே கடைசி பத்து மணிவரையாவது வியாபாரம் நடக்காதா? என்று கேட்டான். இங்கு இரண்டு பிசாசுகள் உலாவுகின்றன, அவை பட்சணங்களையெல்லாம் எடுத்துச் சென்று விடும் என்றான். அதற்குக் குட்டப்பன் "பேயாவது பிசாசாவது" நான் எதுக்கும் பயப்படமாட்டேன் என்றான். மற்றக் கடைக்காரர்கள் எல்லாம் கடைகளைப் பூட்டி விட்டுச் சென்று விட்டனர். சிறிது நேரத்தின்பின் இரு பெண்கள் வந்தனர். அவன் அப்பெண்களின் கால்களைப் பார்த்தான். கால்கள் அரை அடி உயரத்துக்கு மேல் இருந்தன. குட்டப்பன் இவையே அவன் சொன்ன பிசாசுகள் என ஊகித்துக் கொண்டான்.

அப் பெண்கள் இருவரும் தமக்கு ஐம்பது கூடை லட்டு வேண்டும் என்று குட்டப்பனிடம் கேட்டனர் அவனும் ஆம் என்று கூறி முற்பணம் வேண்டும் என்றான். அதற்கு இருவரும் ஐந்நூறு ரூபாய் காசு கொடுத்தனர். அவன் காசை வாங்கிப் பெட்டியில் போட்டான். அடுத்த நாள் மாலை ஏழு மணியளவில் பெண்கள் இருவரும் வந்தனர். லட்டுகள் எல்லாம் ஆயத்தமா? என்று கேட்டனர். அவனும் உள்ளே வாருங்கள் இருபத்தைந்து கூடை லட்டு செய்து விட்டேன் மிகுதியை இப்போ செய்து தருகிறேன். இங்கு இரண்டு பிசாசுகள் உலாவுகின்றன. அவை அப்பட்சணங்களை யெல்லாம் தின்றுவிடும். ஆகவே இந்த ஊரிலே ஒரு மந்திரவாதி இருக்கிறான் அவன் அப்பிசாசுகளுக்கு மந்திரம் ஓதி வேப்பங்கட்டையில் கட்டி அவற்றை அடுப்புக்குள் போட்டதும் மிகுதியை இப்போது செய்து தருகிறேன் என்றான். சிறிது நேரத்தின் பின் ஒரு மந்திரவாதி வந்து அப்பேய்களுக்கு மந்திரம் ஓதி அவற்றைக்கட்டி அடுப்பில் போடக் கொண்டுபோகும்போது அந்தப் பேயாக வந்த இரண்டு பெண்களும் ஓடினார்கள். இந்த ஊரில் இருந்தால் பெரிய ஆபத்து நேரிடும் என்று நினைத்து அடுத்த ஊருக்குச் சென்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தான் பேயைக் கலைத்த விதத்தை மற்றைய கடைக்காரர்களிடம் கூறிப் பேய்களிடம் வாங்கிய பணத்தையும் காட்டினன். மற்றக் கடைக்காரர்கள் அவனைப் புகழ்ந்து பாராட்டினர்கள். அன்று தொட்டு அந்த ஊரில் பேயுமில்லை பிசாசுமில்லை. அவர்கள் எல்லோரும் பத்து மணிவரை வியாபாரம் நடாத்தினர்கள்.

ப. பத்மரஞ்சன்
10 B

---

## நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்........

ராமு ஆம் அவன் நல்ல பையன். படிப்பில் கொஞ்சம் மட்டு. வயது பதினறு. கேட்டவர்க்கு எந்த உதவியையும் செய்யப் பின்னிற்க மாட்டான். ஊரில் நல்லவன் என்ற பெயர் பெற்றதனலோ என்னவோ அவன் ஏழைப்பட்டவனகவே வாழ்ந்து வந்தான். தந்தையை இழந்த அவன் தனது தாயையும் ஆறு வயது நிரம்பிய தங்கையையும் தானே பராமரிக்க வேண்டிய நிலைக்கு ஆளானன். ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தவன் இங்கிலையில் படிப்பை நிறுத்திக் கொண்டான்.

ஊரில் எங்காவது கூலி வேலை செய்து சம்பாதிக்கத் தொடங்கினன். ஒரு நாளைக்குக் குறைந்தது பத்து ரூபாயாவது சம்பாதித்துத் தாயிடம் கொண்டு வந்து கொடுத்து எதுவிதமும் வீட்டில் உலைவைக்க வழிசெய்வான். அத்தோடு தன் தங்கையையும் அவ்வூரிலுள்ள சிறிய பாடசாலையில் சேர்த்தான். தங்கையும் அவனைப் போலவே நல்ல குணமுடையவள். எல்லோரிடமும் அன்பாகப் பழகுவாள். அத்தோடு படிப்பிலும் வெகுவாக முன்னேறிக் கொண்டு வந்தாள். இப்போ மூன்ரும் வகுப்புப் படிக்கிருள். ராமுவின் வயதோ பத்தொன்பதாகி விட்டது. வீட்டுச் சாப்பாட்டுச் செலவுக்கு மட்டுமல்லாமல் தங்கையையும் இப்பொழுதே ரியூசனுக்கு அனுப்பிப் படிக்க வைக்க வேண்டுமென்ற ஆசையில் மாடாக உழைத்தான்.

இவ்வேளை ஊரில் பலர் வெளிநாடுகளில் வேலைதேடிச் சென்றனர். ராமுவுக்கும் வெளிநாடு சென்று உழைத்தால் என்ன என்ற மோகம் முளைவிட ஆரம்பித்தது. தாயிடம் தன் எண்ணத்தைச் சொன்னன். தாய் என்ன செய்வாள் பாவம் அழுதாள். தன் மகனைப் பார்த்து மகனே நீ உழைக்கும் பணம் எம் சாப்பாட்டுக்குத்தான் போதும். எமக்குள்ள காணியோ ஒன்றரைப் பரப்பு. நகை, நட்டு ஒன்றும் கிடையாது. இங்கிலையில் யார் எமக்கு உதவி செய்ய முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவார்கள்? வெளிநாடு செல்வதென்றால் எவ்வளவு பணம் வேண்டும் என்று கூறி அழுதாள். கடவுளே! என்மகன் எப்படியாவது வெளிநாடு சென்று விட்டால் ஒரு இரண்டு வருடம் பல்லைக் கடித்துக்கொண்டு அங்கே உழைத்தால் என் குடும்பம் என்ன நிலைக்கு வரும். தாய் தன்னை அறியாமல் அழுதாள்.

ஏழைகளின் வேண்டுதல் இறைவனுக்குக் கேட்காமலா போகும். அவ் ஊரிலுள்ள நில அளவையாளரின் வீடொன்றில் ராமு வேலை செய்வது வழக்கம். அவன் தன் உள்ளக்கிடக்கையை அவரிடம் வெளிப்படுத்தினன். அவரும் உதவி செய்ய முன்வந்தார். அவர் ராமுவைப் பார்த்து நான் எல்லாவற்றையும் கவனிக்கிறேன். பின்பு நீ உழைக்கும் பணத்திலிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்கிறேன். நீ இப்போதைக்கு ஒரு பணமும் கொடுக்க வேண்டாம் என்றார். ராமு ஓடோடிச் சென்று விஷயத்தைத் தாயிடம் கூறினன். தாயின் மகிழ்ச்சியைக் கூறவும் வேண்டுமோ?

கடவுச்சீட்டு, அடையாள அட்டை இத்தனையும் எடுக்கக் கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் சென்றன. தாய்க்கு வருத்தம் கண்டது. ராமு என்ன செய்வான் பாவம். அதற்கும் அந்தப் பெரியவரிடமே சென்று பணவுதவி பெற்றான். எல்லாம் ஒழுங்காகி விட்டன. அவர் ராமுவைப் பார்த்துச் சொன்னர். இன்னுமோர் நற்செய்தி ராமு என்ன வென்று ஆவலுடன் வாயைப் பிளந்தான். உன்னேடு கூட நானும் வருகிறேன். வருகிற முப்பதாம் திகதி பிளேன், இருவருக்கும் ரிக்கற் வந்து விட்டது. இதோ இதில் ஆயிரம் ரூபா இருக்கிறது ஒரு கட்டுப் பணத்தை நீட்டிக்கொண்டு, நீ போய் உனக்குத் தேவையான உடைகளையும், மற்றும் பொருட்களையும் வாங்கு என்று சந்தோஷத்துடன் கூறினர். ராமு பணத்துடன் வீட்டுக்கு ஓடோடிச் சென்றான், தாயின் நிலையைப் பார்த்தான். பதைபதைத்தான் உடனே மீண்டும் நில அளவையாளரின் வீட்டுக்கு ஓடோடிச் சென்று தாயை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்பதைத் தெரிவித்தான். அவர் உடனே தன் காரை அனுப்பி ராமுவின் தாயை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல வழி செய்தார்.

டாக்டர்கள் தாயைப் பரிசோதித்த பின்னர், வயிற்றில் ஒரு கட்டி உள்ளது, சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் என்றனர். சத்திர சிகிச்சை இருபத்திநான்காம் திகதி என்று திகதியும் போடப்பட்டது. ராமுவின் தலை சுற்றியது. உலகமே சுற்றுவதைப் போலிருந்தது. முப்பதாந்திகதி பயணம், இருபத்திநான்காம் திகதி சத்திர சிகிச்சை செய்வதறியாது திகைத்தான், அவனுக்கு மண்டை வெடிக்கும் போல இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்திர சிகிச்சை இனிது நிறைவேறியது. தாய் சற்று சுகமாக இருந்தாள். ஆனல் இரண்டு நாட்களின் பின் தாயின் முகத்தில் வேதனைக்குரிய அறிகுறிகள் தோன்றின. ராமுவின் நிலையை உணர்ந்து கொண்ட டாக்டர்கள் தீவிரமாகச் செயற்பட்டனர். சத்திர சிகிச்சை செய்த இடத்தில் சீழ் கண்டதால் புண் புதுப்பித்து விட்டது. இரண்டாம் முறை சத்திர சிகிச்சை அளிக்கப்பட்டது. சிகிச்சையின் முடிவு? ராமுவின் தாயை மரண தேவதை அணைத்துக் கொண்டாள். ராமு கதறிக் கதறி அழுதான். சிந்தனைகள் தலைதூக்கின. முப்பதாந்திகதி பயணம். இங்கே என் அருமைத் தங்கையைத் தனியே யாரிடம் விட்டு விட்டுச் செல்வது என்று சிந்தித்தான். அவனுடைய பிரயாணம் தடைப்பட்டு விட்டது. இன்றும் அவன் தன் ஊரிலே கூலி வேலை செய்பவனுகவே வாழ்ந்து வருகிருன்.

அ. யோகராசா
க. பொ. த. (உயர்தரம்) விஞ்ஞானம்

---

# குறளும் வாழ்வும்

[ வள்ளுவர் விழாக் கட்டுரைப் போட்டியில் முதலிடம் பெற்றது ]

"எப்படியும் வாழ்வதென்பது வாழ்க்கை அல்ல. இப்படித்தான் வாழ்வதென்பதே வாழ்க்கை." என்று அண்மையில் வாழ்ந்து மறைந்து போன பேரறிஞர் அண்ணு அவர்கள் கூறிச் சென்றிருக்கிருர்கள். இப்படித்தான் வாழ்வதென்பது எப்படி? என்ற கேள்விக்கு நிதர்சனமான பதிலாக, வழிகாட்டியாக அமைவது திருக்குறளே அன்றி வேறெந்த நூலுமல்ல. எந்த நாட்டினர்க்கும், எந்த மொழியினர்க்கும், எந்த சமுதாயத்தினர்க்கும், எந்த மனிதர்க்கும், எக்காலத்திலும் வழிகாட்டியாக அமையக்கூடிய நூல் திருக்குறளே என்று கூறின் அது மிகையாகாது.

சமுதாயத்திலே எல்லா மனிதர்களும் ஒரே வகையான வாழ்க்கையை மேற்கொள்வதில்லை. இல்லற வாழ்க்கையை மேற்கொள்ளுவோர், துறவற வாழ்க்கையை மேற்கொள்ளுவோர், என்று மட்டுமன்றி, அரசியல் வாழ்க்கை, அறவாழ்க்கை எனப் பல வகையான வாழ்க்கையை நாம் மேற்கொண்டு வருகின்றோம். கற்றவர், கல்லாதவர், பண்புடையோர், பண்பில்லாதவர், பெரியோர், சிறியோர் என ஒவ்வொருவருக்கும் அறிவையும், வாழ்க்கை நெறியையும் நன்கு எடுத்துக் காட்ட திருவள்ளுவர் அருளிச் செய்த குறள் வழிகாட்டியாய் உள்ளது.

இல்லற வாழ்க்கையை மேற்கொள்ளுபவனுடைய வாழ்க்கை செம்மையானதாய், உண்மையானதாய் இருப்பதற்கு மனைவி, புதல்வரைப் பெறுதல், அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்நன்றி அறிதல், நடுவுநிலைமை, அடக்கம் உடைமை, ஒழுக்கம், அழுக்காறாமை, புறங்கூறாமை, ஒப்புரவு அறிதல், ஈகை, புகழ் போன்ற இல்லற வாழ்விற்குத் தேவையான சகல விபரங்களையும் குறளிலே காட்டியுள்ளார்.

இல்லற வாழ்வினை மேற்கொள்ளுபவன் மேற்கொள்ள வேண்டி யன, அறிந்து கொள்ள வேண்டியன என்பனவற்றை மட்டும் குறளி லிருந்து அறிந்து கொள்வதோடு அன்றி இல்லற வாழ்க்கை வாழ்பவ னுக்கு ஏற்படக்கூடிய ஒவ்வொரு சந்தேகத்திற்கும், ஒவ்வொரு கேள் விக்கும் குறள் விடையளித்து வருகின்றது.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

என்று ஒரு குறள் கூறுகின்றது. இல்வாழ்க்கையை நாம் எவ்வாறு அமைக்க வேண்டும் அவ்வாறு அமைவதால் ஏற்படும் பயன் எது? என்பதை இந்த இரண்டு அடிகளிலிருந்து அறிய முடிகின்றது. இதில் பொதிந்துள்ள கருத்து எவ்வளவு உண்மையானது; எவ்வளவு நிதர்சன மானது என்பதை நாம் நிச்சயமாக உணர்ந்து கொள்ள முடியும்.

இல்லற வாழ்வுக்கு வழிகாட்டியாய் அமைந்த திருக்குறள், துற வற வாழ்க்கைக்கும் வழிகாட்டச் சற்றேனும் தவறவில்லை. துறவறத் தில் விரதம், தவம், புலால் மறுத்தல், ஒழுக்கம், கள்ளாமை, வாய்மை, என்பன போன்ற ஒவ்வொரு அம்சமும் எவ்வாறு பேணப்பட, காக கப்பட வேண்டும் என்பதற்கு குறள் விடையளித்து வழிகாட்டுகின்றது.

"காமம், வெகுளி, மயக்கம் இவை மூன்றன்
நாமம் கெடுக்கும் நோய்"

துறவற வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஒரு குறள் எவ்வாறு இரண்டே இரண்டு அடிகளில் பெரிய கருத்துண்மைகளை உணர்த்தி நிற்கின்றது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகின்றது.

அரசியல் வாழ்வை ஒருவன் சிறப்பாக, மேலானதாய் மேற் கொள்ள இறைமாட்சி, கல்வி, கல்லாமை, குற்றம் காணல், பெரியாரைத் துணைகோடல், வலி அறிதல், காலம் அறிதல், தெரிந்து தெளிதல், செங் கோன்மை, கொடுங்கோன்மை, நட்பு என்ற ஒவ்வொரு அம்சத்தின் கீழும் குறள் வழிகாட்டி நிற்கின்றது. எங்கு என்ன செய்யவேண்டும்? எதை எவ்வாறு அணுக வேண்டும்? என்பதற்குக் குறள் காட்டும் வழியைவிட சிறப்பானதொருவழி வேறெங்கு கிடைக்கும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வாழ்க்கையிலே நல்ல மனைவியாக, நல்ல கணவனாக, நல்ல நண்பனாக, நல்ல தந்தையாக, நல்ல புதல்வனாக வாழவிரும்பும் ஒவ்வொருவனுக்கும் குறள் வழிகாட்டுகின்றது.

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

வாழ்க்கை துணைநலத்தில் நல்ல மனைவியாக வாழவிரும்பும் பெண்ணுக்கு குறள் இவ்வாறு வழிகாட்டுகின்றது.

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என் னோற்றான் கொல் எனும் சொல்"

என்று நல்ல மகனாக வாழவிரும்பும் ஒருவனுக்குக் குறள் வழிகாட்டு கின்றது. நல்ல மகனாக வாழ மட்டுமன்றி நல்ல தந்தையாக வாழ்வதற்குக் கூட குறள் வழிகாட்டத் தயங்கவில்லை நல்ல தந்தை எவ்வாறு அமைய வேண்டும், எந்தெந்தக் கடமைகளை செய்ய வேண்டும் என்பதற்கு குறள் விரிவான விளக்கம் அளிக்கின்றது. மனித வாழ்க்கைக்கு ஒழுக்கமே தலைசிறந்தது என்பதை உணர்த்த

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்று கூறி ஒழுக்கத்தின் சிறப்பை, அவசியத்தை எடுத்தியம்புகின்றது.

இவ்வாறு எமது வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திற்கும் குறள் விளக்கமும், தெளிவும் அளிக்கின்றது குறளில் இல்லாத சந்தேகத்துக்குரிய விளக்கம் வேறு எங்கும் கிடையாது என்று துணிந்து கூறலாம். திருக்குறள் ஒன்று மட்டும் எம்மிடம் இருந்து விட்டால் நாம் வாழும் வாழ்க்கை எத்தகையதாய் இருப்பினும் அதில் வெற்றி பெற்று நல்லவனாய் நாடு போற்ற வாழ்வோம் என்பதில் ஐயமில்லை.

சு. சிவகுமாரன்
க. பொ. த. (உயர்தரம்) விஞ்ஞானம்
வள்ளுவர் விழா கட்டுரைப் போட்டியில்
முதலிடம் பெற்றது

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரும்பராயில் இருந்து சிகிரியாவரை சுற்றுலா

[சுற்றுலா கட்டுரைப் போட்டியில் கீழ்ப்பிரிவில் முதலிடம் பெற்றது]

அனுபவ அறிவே நல்லறிவென்பர் பெரியோர். இளமையிற் கல்வியும் முதுமையில் அனுபவமும் சுற்றுலாவினாற் கிடைக்கின்றன. என காப்பியறிஞர் பேக்மன் கூறியுள்ளார். ஒரு மாணவன் கல்லூரிக் கட்டடங்களுக்குள்ளே அடங்கிக்கிடந்து பூரண அறிவைப் பெறமுடியாது. புத்தகப் பூச்சியாய் கிணற்றுத் தவளையாய் நாட்டு வளப்பமறியாது இருந்தால் அறிவு வளராது. தொலைக்காட்சியில் பார்த்தால் எல்லாம் உண்மைதான். ஆனால் அவற்றை நேரில் பார்ப்பதினால் உண்டாகும் அறிவுக்கு அவை ஈடாகமாட்டாது.



கல்லூரியினால் ஒழுங்கு செய்யப்பட்ட சுற்றுலாவை ஆண்டவனின் அருளை வேண்டி நாம் ஆரம்பித்தோம். பேருந்து வண்டியின் வேகத்தைவிட எமது மனோ வேகம் பன்மடங்காகப் பாய்ந்து போகும் இடங்களைப் பற்றிய கற்பனையில் மூழ்கியபடியே சென்று கொண்டிருந்தது. தோழியரின் பாட்டும், கைதட்டலும், நடனமும் என்னை மிகவும் கவர்ந்தது. பேருந்து வண்டியின் நடத்துனரும், செலுத்துனரும் எம்மைப் பார்த்து தாமும் மகிழ்ந்தனர்.

சரியாகப் பதினொரு மணியளவில் ஆனையிறவு உப்பளத்தைச் சென்றடைந்தோம். உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்பார்கள். அதுபோல விலைகுறைந்த பொருளாயினும் விளையும் விதத்தை ஆசிரியர்கள் நன்கு எமக்கு விளக்க, வெள்ளிமலை போலக் குவிந்திருந்த உப்பு மேடுகளையும் பாத்திகளையும் உன்னிப்பாகக் கவனித்தோம். வெயிலரசன் தன் கொடுங்கோற் கிரணங்களை எம்மீது வீசினாலும் விழுந்தடித்துப் பார்த்துக் கொண்டு விளக்கங்களையும் ஆசிரியர்களிடம் கேட்டறிந்தோம்.

அங்கிருந்து பதினொன்றரை மணிக்குப் புறப்பட்டுச் சரியாகப் பன்னிரண்டு மணிக்குப் பரந்தன் இராசாயனக் கூட்டுத் தாபனத்தை அடைந்தோம். அங்கு அப்போது உணவு வேளையாதலால் உடனே பார்வையிட முடியாது போயிற்று. நாமும் எமது உணவுப் பொட்டலங்களை அவிழ்த்து உண்டு களைப்பாறினோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மணிக்கு கூட்டுத்தாபனத்தினுள் நுழைந்து அங்குள்ள ஒருவரின் உதவியுடன் யாவற்றையும் பார்வையிட்டோம். எமது கல்லூரி ஆய்வு கூடம் போல அங்கு ஓர் அறை காட்சியளித்தது. அங்கு ஓர் உத்தியோகத்தர் இரசாயனப் பொருட்களை எடுத்துக் காட்டி அவற்றினால் நடைபெறும் இரசாயனத் தாக்கங்களை நன்கு விளங்க வைத்தார். அங்கு சென்றது விஞ்ஞான மாணவர்களுக்கு மிக பிரயோசனமுடையது என்று கூறினால் மிகையாகாது.

பேருந்து வண்டி கிளிநொச்சி விவசாய மாதிரிப் பண்ணையை அடைந்தது. வெயிலின் கொடுமையாலும், தண்ணீர்த் தாகத்தாலும் அம் மாதிரிப் பண்ணைக்குள் நீண்ட நேரம் எம்மால் பார்வையிட முடியவில்லை. பல தடவைகள் திருநெல்வேலிப் பண்ணையைப் பார்வையிட்ட எமக்கு இதில் புதிதாகப் படிக்கக்கூடிய விஷயங்கள் தென்படவில்லை. ஆதலால் உடனேயே அங்கிருந்து வெளியேறிவிட்டோம்.

முறிகண்டியானின் முன்றலிற் சற்றுத் தங்கி தேங்காய் உடைத்து, கற்பூரம் கொழுத்தி இறைவழிபாடு செய்து கொண்டு அநுராதபுரத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தோம். புதன் காலையும் மலர்ந்தது. காலைத் தேநீரை அருந்திவிட்டு பேருந்தில் அமர்ந்து கொண்டோம். போசன் பண்டிகையின் வரலாறு கூறும் மிகிந்தலையைச் சென்றடைந்தோம் மகிந்தனும் தீசனும் சந்தித்த புனித மலையல்லவா? மலைப்படிகளில் ஏறும் களைப்பு மாற சமூகக் கல்வி ஆசிரியர்கள் இருவரும் இதன் வரலாற்றைக் கூறிக் கொண்டே வந்தனர். எமது மூதாதையர் என "டால்ஸ்டாய்'' கூறும் மந்திகள் எங்கும் குந்தியிருந்து எமது வரவுக்குக் கட்டியங் கூறின.

காலையுணவை அருந்தி விட்டு மின்னேரியா, கிரித்தலைக் குளக் கரைகளின் எழிலைப் பார்த்த வண்ணம் பராக்கிரமக் கடலின் அருகேயுள்ள பொலநறுவையை வந்தடைந்தோம். வரண்ட பிரதேசமாக இருந்தாலும் மரங்கள் அதிகம் காணப்பட்டன. பராக்கிரமசமுத்திரத்தின் அருகிலுள்ள மரங்களின் கீழிருந்து உணவை உண்டு களைப்பாறினோம். எமக்கு உணவளித்த உத்தியோகத்தர் ஒருவரே அங்குள்ள இடங்களைக் காட்டவும் வரலாறு கூறவும் முன்வந்தார். புராதன நகரங்கள் இருந்த புனித இடங்களை நாடினோம். நின்றும், இருந்தும், கிடந்தும் காணப்படும் புத்தரின் புனிதச் சிலைகள் மூன்று காண்போர் மனதிற்கு இதமூட்டின. "எல்லையில்லா இன்பமல்லவோடி" எனத் தோழியர் கீதமிசைக்க சோழவேந்தன் இராசேந்திரனால் கட்டப்பட்ட இரண்டாம் சிவன்கோயிலை அடைந்தோம். யாவரும் கவலையுடன் ஸ்தம்பித்து நின்றோம். ஆ! எமதருமை "வானவன் மாதேவி ஈசுவரமுடையான்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அழைக்கப்பட்டு எமது சமய பாடத்திற் கற்ற அந்தக் கோவிலா இது என்று எண்ணவும் முடியாது ஆசிரியர்களை வினவினோம். ஆம் என்று கூறி இதுதான் கோவிலின் கதி என்று கூறிக் கவலைப்பட்டார்கள். போனதை ஆனைகட்டி இழுத்தும் பயனில்லை என்பார்கள். அது போலக் கோயிலின் நிலையை எண்ணி ஒரு பிரயோசனமும் இல்லை. சரியாக மாலை மூன்று மணியளவில் இயற்கை வளம் நிறைந்த கண்டி மாநகரை நோக்கிச் சென்று கொண்டிருந்தோம். இரவு பத்து மணியளவில் கண்டியிலுள்ள ஒரு சிரேஷ்ட பாடசாலையைச் சென்றடைந்தோம்.

அன்றைய இரவும் அரைகுறை நித்திரையுடன் காலை காணும் காட்சிகளை நினைத்து காலையிலேயே எழுந்து தேநீரை பருகிவிட்டு பேருந்து வண்டிகளில் அமர்ந்து கொண்டோம். இலங்கை இயற்கை வளம் நிறைந்த நாடு. இதன் எடுத்துக்காட்டாகக் கண்டி நகரம் பச்சைப் பசேலெனக் காட்சியளித்தது. சர்வகலாசாலையில் காலை ஒன்பது மணியளவில் எமது பழைய மாணவர்களைச் சந்தித்துவிட்டு பேராதனை தாவரவியல் பூங்காவை அடைந்தோம்.

தாவரவியல், புவியியல் ஆகிய பாடங்களுக்கு எவ்வளவு தான் வரைந்து படித்தாலும், நேரில் பார்ப்பதால் உண்டாகும் அறிவுக்கு அவை ஈடாக மாட்டாது. முன்பொருமுறை எனது தந்தையுடன் சென்றிருந்தும்கூட இம்முறை தோழியருடன் சென்று அதைப் பார்வையிட்டபோது மேலும் அறிவு வளர்ந்தது. தாவரவியல் ஆசிரியர்கள் ஒவ்வொன்றையும் நன்றாக விளக்கி எமது அறிவை மேன்மேலும் வளர்த்தனர்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற தம்புள்ளை என்ற இடத்தை நாடிப் புறப்பட்டு வழியில் ஓரிடத்தில் மதிய உணவையும் அருந்திவிட்டு தம்புள்ளையை அடைந்தோம். வலகம்பாகு மன்னன் செதுக்குவித்த ஓவியங்களின் அழகுதான் என்னே! மலைக்குகையில் இருக்கும் புத்தரின் புனிதச் சிலைகளின் அழகுதான் என்னே! இவையெல்லாம் நாம் மலையேறிய களைப்பையும் மாற்றின.

மாலையாகிக் கொண்டதையும் கவனிக்காமல் சிகிரியாவை நோக்கிச் சென்று கொண்டிருந்தோம். சிகிரியாக் குன்றின் வரலாற்றை ஆசிரியர்கள் நன்கு விளங்க வைத்தனர். சிரமத்துடன் சிகிரியாக் குன்றின் மீதேறி அங்கே செதுக்கிய சித்திரங்களை பார்வையிட்டு மலையின் அடிவாரத்தை வந்தடைந்தோம். நாம் திட்டமிட்டபடி அநுராதபுரத்துக்கு செல்ல முடியாதபடி யாவரும் களைப்படைந்தமையால் ஊருக்குத் திரும்பும் முயற்சிகளில் ஈடுபட்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை ஏழு மணியளவில் கெக்கிராவையை அடைந்து இரவு உணவை அங்கு உண்டு விட்டு வியாழன் பின்னிரவு மூன்று மணிக்கு கல்லூரி வாசலை வந்தடைந்தோம். "பெற்ற தாயும் பிறந்த பொன்னு டும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே" என்பது போல எமது ஊரைக் கண்டதும் பிரயாணக் களைபெல்லாம் மாறி உற்சாகமே பிறந் தது. இப்பிரயாணம் எமக்குப் பல உண்மைகளை விளங்க வைத்தது இப்பொழுதும் எனது நெஞ்சில் அது திரைப்படமாக ஓடிக்கொண்டிருக் கிறது, என் நெஞ்சிருக்கும் வரை இந்நிகழ்ச்சிகள் நினைவிருக்கும்.

ஆ. சியாமளா
10 C

---

# நான் சென்று மீண்ட சுற்றுலாவில் பெற்றுக் கொண்ட சுவையான அனுபவங்கள்

[சுற்றுலா கட்டுரைப் போட்டியில் மேற்பிரிவில் முதலிடம் பெற்றது]

எமது வகுப்பைப் பொறுத்த வரையில் கல்லூரி வாழ்வின் கடைசியாண்டில் காலடி எடுத்து வைத்திருக்கின்றோம். காலச் சக்கரத் தின் சுழற்சியில் கண்ணை மூடித் திறப்பதற் குள் அடுத்த ஆவணி கம்பீரமாக வந்து நிற்கும். நானும் எனது சிநேகிதிகளும் கல் லூரி வாழ்வை விட்டுப் பிரியும் சமயம் அது அதற்கிடையில் தோழிகளுடன் ஆடிப்பாடி அகமகிழ இச்சுற்றுலா வரப்பிரசாதமாக அமைந்து விட்டதில் ஆச்சரியம் ஏதும் இல்லை.



2-10-79 விடிந்தது. அதிகாலை எழுந்து தாயாருக்கு உதவி விட்டு நீராடி என்னை அலங்கரித்துக் கொண்டு இருவேளை உணவை யும் எடுத்துக் கொண்டு பாடசாலையை அடைந் தேன். ஒருவாறு பேருந்து ஆனையிறவை அடைந்தது. அங்கு உப்பளத்தைப் பார்வை யிட்டோம். உப்பு விளைவிக்கப்படும் முறை, சுத்திகரிக்கும் முறை, அரைக்கும் முறை என்பவற்றை ஒருவர் விளக்கி னர். அதில் விசேடமெதுவும் இல்லை.

அடுத்து நாம் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை அடைய
வும், பகலுணவுக்காக மணியடிக்கவும் சரியாக இருந்தது. முதலில்
அவர்களது ஆய்வு கூடத்தைப் பார்வையிட்டோம். ஒருவர் எமக்கு
தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் அவற்றுக்கான மூலதனங்
களைப் பெறும் முறை என்பன பற்றி ஒரு பிரசங்கத்தையே நடாத்தி
விட்டார். விஞ்ஞான மாணவர்களுக்கு அது பெரிதும் உதவியாக இருந்
தது. ஆணிகளுக்கு வளையமிடும் முறை என்பவற்றையும் காண்பித்தார்.
அவருக்கு நன்றி கூறியதும் நாம் அங்கிருந்து புறப்பட்டோம்.

முறிகண்டியை அடைந்து விநாயகரைக் கற்பூரம் ஏற்றி தேங்காய் உடைத்து வலம் வந்து வணங்கினோம். அவருக்கு மரியாதை செலுத்தாவிடின் ஆபத்து நேருமென நானும் அறிந்திருந்தேன். எனவே நன்றாக உருகி வழிபட்டு எம்பெருமானின் அருளைப் பெற்றோம். நாம் சென்ற பேருந்தில் சில திருத்தங்கள் செய்வதற்காக வவுனியாவில் நான்கு மணித்தியாலங்கள் தங்கினோம்.

சிவ சிவ என்று கூறியபடி மாணவிகள் அனைவரும் அங்குள்ள புல்வெளிகளில் சாரி சாரியாக அமர்ந்தனர். சிலர் பாடினார்கள். அதையும் கேட்டு மகிழ்ந்தோம். சற்று நேரம் செல்லக் குளிரும் அதிகரித்தது. நித்திரையும் வரத் தொடங்கியது. மாணவர்கள் இருதலைக் கொள்ளி எறும்புபோலத் துடித்தனர். இதுதானோ முறிகண்டி விநாயகர் எமக்களித்த வரம் என்று கடவுளையே நொந்தோம். வேதனை மனதை வாட்டும்போது பழியைக் கடவுளின் தலையில் போடும் மனித மனம் அதற்கேற்ற ஒரு பரிகாரத்தைத் தேட மறுப்பதில்லைத் தானே.

நாம் நள்ளிரவு நேரம் அநுராதபுரத்தை அடைந்தோம். அடுத்த நாட்காலை எழுந்து காலைக் கடன்களை முடித்துவிட்டு அலங்கரித்துக் கொண்டு தேநீரை அருந்தினோம், நாம் தங்கிய பாடசாலையான விவேகானந்த மகாவித்தியாலயத்தின் அருகே ஒரு பெரிய முருகன் கோயில் இருந்தது. அங்கு வழிபடச் சென்றோம். என்ன அநியாயம்! ஆலயத்தில் தெய்வத்தின் சிலைகள் கிளப்பிக் காணப்பட்டன. இங்கே எவ்வாறு கும்பிடுவது என்று சிந்தித்தேன். ஆம் எமது ஆண்டவன் எங்கும் வியாபித்திருக்கிறான் என்று அவன் அமர்ந்த இடத்தை வழிபட்டேன்.

சுமார் ஏழு மணியளவில் அநுராதபுரத்திலிருந்து புறப்பட்டோம். பௌத்த மதத்தைப் பொறுத்த மட்டில் மிகவும் முக்கியமான மலை மிகுந்தலைதானே. கற்களினால் அமைக்கப்பட்ட படிகள் வழியாக தோழிகளுடன் கைகோர்த்துக் கொண்டு மலையேறத் தொடங்கினோம். மலையுச்சியில் வெள்ளை நிறத்தாலான பெரிய விகாரை இருந்தது. ஒருவாறு ஏறி மலையின் உச்சியை அடைந்தோம். விகாரை மூடப்பட்டிருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. அவ்விடத்தில் நின்று கீழே பார்க்கும்போது நாம் வந்த தார் போட்ட தெரு ஒரு பாம்பு போலச் சிறியதாகக் காணப்பட்டது. தொலைவில் திசவாவி தெரிந்தது. சிறுசிறு வீடுகள் பாடசாலைகள் தெரிந்தன.

மேலே பார்த்தால் முகில் செல்லும்போது விகாரை உருளுவது போன்ற ஒரு பிரேமையை ஏற்படுத்தும். அது பயங்கரமாக இருக்கும். தலை சுற்றவும் தொடங்கும். எனவே நாம் அதிக நேரம் அதைப் பார்க்கவில்லை. குளிர் காற்று "ஜில்" லென்று உடலைத் தழுவிச் சென்றது. சற்று மேலே நின்று இயற்கையை இரசித்து விட்டு இறங்கினோம். அங்கேயே காலை உணவை முடித்துக் கொண்டு பொலநறுவையை நோக்கிப் புறப்பட்டோம். நீண்ட தூரமாகையால் பிரயாணத்துக்கு நெடுநேரமெடுத்தது. பகல் ஒரு மணியளவில் பொலநறுவையை அடைந்தோம்.

முன்பு அறிவித்தமையால் உடனே பகலுணவு எடுத்து வந்து மர நிழலில் உண்டு பசியாறினோம். பராக்கிரம சமுத்திரத்தில் இறங்கி சிறிது தூரம் நீரில் நடந்தோம். பின்னர் புறப்பட்டு புராதன இடங்களைப் பார்வையிட்டோம். எம்மோடு ஒரு தெரிந்த பொலிஸ் தம்பதிகளும வந்தனர். அவர்கள் எமக்கு எல்லாவற்றையும் விளக்கினார்கள்.

பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் கற்களில் செதுக்கப்பட்ட புத்தபகவானின் பல வடிவங்களில் அமைந்த சிலைகள் சயனநிலை, சமாதிநிலை, எழுந்து நின்று அபயமளிக்கும் நிலை. இவை மூன்றும் ஒரே இடத்தில் காணப்பட்டன. சயனநிலை புத்தரின் சிலை சுமார் நாற்பது அடி நீளம் இருக்கும். மற்றும் பாழடைந்து போன இரண்டு மூன்று மாடிக் கட்டடங்கள். அதிலே புத்தரின் தலையிழந்த நிலையில் சிலைகள் காணப்பட்டன. அதிலே வரையப்பட்ட ஓவியங்கள் சில இன்னும் அழியாமல் காணப்பட்டது ஆச்சரியத்துக்குரியது.

இராஜகுமாரிகள் நீராடிய தாமரைக் குளம், பராக்கிரமபாகுவின் அரண்மனை, விகாரை என்பனவற்றைப் பார்வையிட்டோம். இறுதியாக இராஜராஜ சோழனின் மகன் இராஜேந்திரன் கட்டுவித்த சிற்ப வேலைப்பாடமைந்த சிறிய சிவன் கோயில் பழுதாகாத நிலையில் காணப்பட்டது. உள்ளே சிறிய ஒரு சிவலிங்கமும் இருந்தது இது தமிழ் மன்னர்களும் பொலநறுவையை ஆண்டிருக்கிறார்கள் என்பதற்கு ஒரு சிறந்த சான்றாக அமைகிறது. ஆசிரியரிடம் கேட்டபோது புலத்திய நகரம் என்ற பெயரில் முப்பது வருட காலம் ஆண்டனர் என்றார்.

பொலநறுவையிலிருந்து புறப்பட்டுக் கண்டியை அடைய இரவு பத்து மணியாகி விட்டது பேராதனைப் பல்கலைக் கழகத்தைப் பார்த்து விட்டு நேரே பூங்காவிற்குச் சென்றோம். இயற்கை தனது அழகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெல்லாம் ஒன்று திரட்டிப் பூங்காவில் கொட்டியுளது என்றே கூற வேண்டும். இயற்கையின் விநோதத்தை அங்குதான் எல்லோரும் உணர்கிறார்கள் போலும். உள்ளே நுழைந்ததும் எமது ஈழவளநாட்டின் மாங்கனி வடிவத்தை பிரதிபலித்துக் கொண்டிருக்கும் அழகான நீர் நிலை தெரிந்தது. யாழ்ப்பாணம் உள்ள இடத்தில் அழகான சிறிய வடலிப்பனை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அந்த அழகை எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் இருந்து இரசிக்கலாம் போலிருந்தது. அழகாக படரவிடப்பட்டிருந்த புற்றரைகள் இடையிடையே தார் போடப்பட்டிருந்த நடைபாதைகள்.

வாழை என்று கூறினால் சகல நாட்டு வாழைகளும் ஒரே இடத்தில் இருக்கும். பனை என்றால் சகல இனப் பனைகளும் ஒரு கூட்டமாக இருக்கும். சிலவற்றில் எந்நாடு என்பது கூடக் குறிப்பிடப்பட்டிருக்கும். அருகே அழகாக அபிநயம் காட்டி நளினமாகத் தவழ்ந்து செல்லும் மகாவலி கங்கை. அது கூட ஒரு தனி அழகுதான். பூக்கள் எல்லாம் ஒரே கூட்டங் கூட்டமாகக் காட்சியளித்தன. அவை பூத்துக் குலுங்கிப் புதுப்பொலிவு பெற்றிருந்தன. இடையில் தவழ்ந்து வந்த தென்றலில் அசைந்து எம்மை வா வாவென்று அழைப்பது போல இருந்தது.

நடந்து சிறிது தூரம் சென்றோம் பாதையையும் பூங்காவையும் இணைக்கும் தொங்கு பாலத்தைப் பார்த்தோம். அதன்மேல் ஏறுவதற்கு அநுமதி வழங்கப்படவில்லை. அதனைத் தாண்டி அப்பாற் சென்றோம். ஒழுங்காக வெட்டப்பட்டிருந்த குரோட்டன் வகைகள், எழுத்து வடிவில் நடப்பட்ட சிறு செடிவகைகள், இடையிடையே நீர் நிலைகள் அவற்றில் நீர் வாழ் பூமரங்கள். இன்னும் சிறிது தூரம் நடந்தால் ஒர்க்கிட் இல்லங்கள். அவை தனிக் கண்ணாடியினால் அமைக்கப்பட்டவை. கூரை கூடக் கண்ணாடியாகத் தான் இருந்தது. அதனுள்ளே சாடிகளில் வளர்க்கப்பட்டு ஒக்கிட் வகைகள் எழிலாக ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது அதிலும் பலவித ஒக்கிட் அன்தூரியம் மலர்கள் பலப்பல நிறங்களில் காட்சி தந்தன.

பூங்காவைப் பார்த்து விட்டு கண்டிப் பட்டணத்தை அடைந்தோம். அங்கு கண்டி வாவி குளிர்மையாக இருந்தது அதனருகில் இறங்கி சிறிது நேரம் நின்றோம். பின் காலையுணவை முடித்துவிட்டு தலதா மாளிகையைப் பார்வையிட்டோம். இதுவும் பௌத்த மதத்தவரைப் பொறுத்த வரையில் ஒரு முக்கியமான ஆலயம்தான். புத்தபகவானின் புனித தந்தமல்லவா வைக்கப்பட்டுள்ளது. ஆனால் தந்தம் மூடி வைக்கப்பட்டிருந்தது. எண் கோண மண்டபத்தின வெளிப்பார்வையைப் பார்த்தோம். அதுவும் மூடப்பட்டிருந்தது. வெளியில் ஒரு யானை நின்றது. பல புத்தமத குருமாரும் நின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டியிலிருந்து புறப்பட்டு பொல்கொல்லையை அடைந்தோம். இங்குதான் மகாவலி கங்கை திசைதிருப்பப்பட்டு வடக்கு நோக்கி வந்து கொண்டிருக்கின்றது. அணைக்கட்டிலிருந்து பேரிரைச்சலுடன் மேவி விழும் நீர் மேலே இயந்திரங்களுடன் இருக்கும் நிலை எல்லாவற்றையும் பார்வையிட்டோம்.

பொல்கொல்லையிலிருந்து புறப்பட்டுத் தம்புள்ளையை நோக்கிப் பயணமானோம். வழியில் ஓரிடத்தில் பகலுணவை உண்டோம். தம்புள்ளைத்தான் நாம் இதுவரை பார்த்த அதிசய இடமாகச் சொல்லலாம். எனக்குப் பிடித்ததும் அதுவே, ஒரு மலை. அதில் ஏறி மேலே சென்றால் ஒரு பெரிய பாறை அந்தப் பாறையைக் குடைந்து பெரிய ஒரு மண்டபம். பெரியது என்று கூறுவதைவிடப் பிரமாண்டமானது என்று சொல்லுவதே சாலப் பொருந்தும், வலகம்பாகு குடைவித்த குகைக் கோவில் அது. எண்ணிப் பார்த்தால் குறைந்தது நூறு புத்தர் சிலை. சயனநிலை, சமாதிநிலை இரண்டும்தான். கூரையும் கல்லாலேயே காணப்பட்டது. அதிலே ஓவியங்கள் வரையப்பட்டிருந்தது. ஓவியக்கலையும், சிற்பக் கலையும் ஒருங்கே அமைந்திருந்தன. கலைஞனின் உடலுழைப்பால் பெறப்பட்டதே தம்புள்ளை குகைக்கோயில்.

அங்கிருந்து புறப்பட்டு சிகிரியாவை அடைந்தோம். அதுவும் ஒரு பெரிய கற்பாறை. இரும்பினால் படிவைத்துப் பிணைக்கப்பட்டிருந்தது. ஏறுவது மிகப் பயங்கரம். காசியப்பன் தனது சகோதரன் படையெடுக்கப்போகிறான் என்பதற்காக இங்கேயே ஒழிந்திருந்தான் என்கிறது சரித்திரம்.

பகல் முழுவதும் சுற்றுலாவில் திரிந்த நாம் களைப்புடன் பேருந்தில் ஏறினோம். பேருந்து கல்லூரியை நோக்கி விரைந்தது. இச்சுற்றுலா என் வாழ்வின் மறக்க முடியாத சம்பவங்களில் ஒன்றாக அமைகிறது.

M. தேவிகா
12 RA

250130

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைக்குயில் திரு. ஐ. தருமலிங்கம் அவர்கள்

தோற்றம் ;

05-01-1927



மறைவு :

06-09-1979

எமது கல்லூரியின் சேவைக்காலம் : 01-06-1966 .... 06-09-1979

இசைக்கு இறைவனும் மயங்குவான் என்று வேதம் சொல்லுகிறது. கடந்த பதினைன்கு ஆண்டுகளாக எமது கல்லூரியில் இசை மழை பொழிந்த இசைக்குயிலின் குரல் அமைதி பெற்றுவிட்டது. கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருடைய உள்ளத்திலும் வீற்றிருந்த அன்புத் தெய்வம், சாந்த சொரூபி, பண்பின் உருவம், பணியின் சிகரம், கடமை வீரன் தருமலிங்கத்தின் மறைவு எங்களையெல்லாம் செயலிழக்கச் செய்திருக்கிறது. கல்லூரியில் நடைபெறும் அனைத்திலும் அவரால் உருவாக்கப்பெற்ற மாணவ மாணவிகளின் இசை நிகழ்ச்சிகள் இடம்பெறத் தவறுவதேயில்லை. தேவாரப் பண்முதல் சங்கீத இராகங்கள் வரை அவரின் ஆற்றலை எமது மாணவர்கள் பதினைன்கு ஆண்டுகளாக அனுபவித்து வந்தார்கள். இடைவேளை நேரத்தில் ஆசிரியர் கூடத்தில் அவரின் இனிய குரல் தேவாரத்தில், திருவாசகத்தில் கலந்து வெளிவருவதை நாம் பல நாட்கள் கேட்டிருக்கிறோம்.

புதுமனை கட்டிப் புகுமுக விழாவைச் சுற்றஞ் சூழ நடாத்தி இரண்டு வாரங்கள் மறையு முன்னரே நமது அன்புக்குரிய ஆசிரியரைக் காலன் கவர்ந்துவிட்டான்.

நல்ல மனிதர்கள் மீது காலனுக்கு ஒரு தீராக் காதல் போலும் எங்கள் அன்பு ஆசிரியர் சங்கீத மேதை எங்களைவிட்டுப் பிரிந்து விட்டார். காலன் நல்லதொரு ஆன்மாவைக் கவர்ந்த பூரிப்பில் திளைக்கிறன். நாமோ நல்லதொரு ஆசிரியரை இழந்த வேதனையில் வாடுகின்றோம்.

விதி யாரைத்தான் விட்டது ?

“எப்பவோ முடிந்த காரியம்
ஒரு பொல்லாப்பு மில்லை
நாம் யாதும் அறியோம்”

என்ற தவமுனிவன் யோகரின் வாக்குத்தான் அவரை இழந்து தவிக்கும் சகோதர ஆசிரியர்கள், கல்லூரி மாணவர்கள், குடும்பத்தவர்கள், உற்றூர், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் ஆறுதல் அளிக்கும் வாக்காக அமைகிறது.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Free Textbooks

It was a happy day for us. It was the 18th of January, 1980. On that day we went to school early in the Morning. We assembled in the main hall. There were many new books kept on a big table.

There were many parents. There was our grama sevaka. We were silent. Our Principal walked up to the stage. We stood and welcomed him. He made a valuable talk about the free books. He distributed only a few books.

Then we went to our classrooms. Our class teacher gave us the new books. I was very happy. I looked at my books one by one. They were beautiful with different colours. I took them home. I showed them to my parents. They too were very happy.

**M. Kalajini**
6 A

---

## My Pet

I am a small boy. I have a pet at home. It is my beautiful puppy. I got My puppy from a friend of mine.

I named him 'Tomy'. It is two years old. The colour of it is black and white. He likes fish and meat. I give him a good meal.

Tomy likes playing ball. In the evening my friends come to play with me. Tomy runs after the ball and plays with us.

Tomy barks aloud when it hears a noise at night. It does not need an alarm clock. Every mornig at 5 o'clock it wakes me up. My mother scolds me because Tomy sleeps with me.

When I return from school it waits for me at our gate. When it sees me it jumps at me and wags its tail. I like my Tomy very much.

**S. Sutharshan**
6 A

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Myself

I was born on the 24th of May, 1967. I am four feet ten inches tall. My weight is sixty pounds.

I have six brothers and one sister. They are all elder to me. They pet me as I am the youngest in the family. Sometimes I am naughty, and get beatings also.

All my brothers and sisters studied at Urumpirai Hindu College. My parents also are old-students of this college.

My parents and brothers help me in my studies. I do not go to tuition classes.

I play football and badminton. I also collect stamps and old coins. I have a good collection of stamps. I can sing English songs. I take part in the school concert.

I help my mother in her work at home. I also help my father in the garden. In the evening I collect food for our goats. I have a black kid. I will get fifty rupees when it is sold.

**N. Nirthanan**
7 A

---

## My Visit to the Zoo

Last holidays. I went to Colombo with my aunt. She took me to many intresting places.

One day, we visited the zoo. We bought the tickets at the entrance and went in. There were numbers and arrows to direct the people. We followed the arrows.

First we saw the aquarium. The fish in it were very beautiful. They were in all colours. The glass tanks were clean and clear.

Then we saw many beautiful birds with coloured feathers. We saw the dangerous snakes. They were huge and ugly. They were in glass cage?.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Next there were animals the lions, tigers, and other wild animals were looking fierce. The monkeys were very interesting. It was fun to watch them. We fed them with groundnuts.

Lastly we watched the elephant circus. They sat on stools and ate ice-cream.

It was an enjoyable day. In the evening we returned home.

**D. D. Jebanesan**
7 A

---

## My best friend

I have a number of friends both in and out of schoool. Among them all, Anuradha is my best friend. She does not study with me in this college, studies at Vembadi Girls' College. She too is in Grade 7.

We meet in the evenings, as we live close to each other. We play together. We study together. She is good in Mathematics and she helps me in my homework.I am good in English and I help her.

She is very kind and good-natured girl. Everybody likes her. She often comes first in class but she is never proud.

Her hobby is stamp-collecting. My hobby too is stamp-collecting. So we share the stamps that we collect. We also share the toffees and chocolates that we get. We have the same likes and dislikes. So we very seldom disagree.

As the old proverb, She is a real friend 'in need'. For on many occasions she has helped me out of difficulties both big and small. She is indeed my best friend. We are very much devoted to each other.

**Sharmini Thirugnanam**
7 B

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## My birthday Party

My date of birth is on the 26 th of February, 1966. I anxiously wait for my birthday party every year. My birthday is the most engjoyable occasion for me in the year.

I am unable to sleep on the previous night of my birthday. So I get up early in the morning. After bath I wear new dress. Then I go to the temple and have a special pooja.

I like my birthday party in the evening. Two weeks prior to my birthday I begin to encourage my mother to prepare sweetmeats. My mother always prepares ice - cream. I have a chance to prepare short - eats myself which I learn in my Home Science class, such as milk toffee, marshmallows and cheese - straws.

My parents invite a few relations and my friends My house is decorated in a simple manner. By 5 p. m. all the visitors come. I wear my second new dress which my sister always presents me. I cut my birthday cake My friends clap and cheer me. They sing.

"Happy birthday to you
Happy birthday to you."

Then my sister and I serve cake and other eatables. I get many birthday presents from my relations and friends. I always get a present from my aunty in Malaysia. We take group photographs with my friends and relations.

I thank my friends and relations. I wish them 'good night.' This is the happiest day in my life.

**Jasotha Singaratnam**
8 A

---

## Our school Library

I attend this College. It has all the provisions and facilities for an allround education. It has a first class library. It is well kept. It has the services of a full time librarian.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Our library is housed in a big room. This room has many windows. It receives plenty of light. The books are kept in a number of cupboards and almirahs. These are lined all along the wall, There are long tables with chairs all around them. We spend all our free time and leisure hours in the library reading books, newspapers and periodicals.

All pupils are members of the school library. We can borrow books. The librarian helps us in choosing the books. He has a good knowledge of all the books. Our school librarian is a very nice man. He is always cool as a cucumber.

Our school library has three golden rules. We must observe them care fully. Sometimes we are punished for not observing them. We must use the library books with care. They must not be soiled or torn. We must not damage any property belonging to the library. We must be prompt in returning the books.

Every year hundreds of new books are added to our library. There are books on almost all the subjects. Our teachers also use the school library. The very sight of our library inspires us to read books. So we all love reading books. I can never forget our school library.

**R. Suganthy**
8 C

---

## Our Educational Tour

Our teacher said that we were going on an educational tour of the peninsula. As soon as we heard the news we were very happy, and we were waiting eagerly for the great day. And the day came! It was the 19 th of September. We took our meals for the day - bottles of water and short eats. We boarded the bus very happily that was booked for this purpos. It was a very fine morning.

Our first stop was at Neervely, to See the Glass Factory. There we saw how glasses, chimneys and small bottles were made. Then We went to see the deep well at Nilavarai. It never dries.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

From there we went to see the Industrial Estate at Atchuvely. There we saw them making boxes of matches, paint, jam, fruit juices, soap and remoulding tyres. We visited the Hydro-Biological Research Centre at Thondamanar There we had cool drinks. We heard a talk on the purpose of this Research Centre.

It was noon and we went to the Cement Factory at Kankesanthurai. We saw the process of making cement. It is made from clay, gypsum, salt and limeston. We were hungry. We had a hurried meal in the bus.

Then we went ꞁo Maviddapuram to see the Aluminium Factory, There we saw them making pots, pans, plates, spoons and trays. From there we went to Pandatheruppu to see the weaving mill. There we saw them weaving sarees and other materials. Dyeing was also done there.

It was getting late. We went to Karainagar to see the Cey - Nor Fishing Development Project. There they were making glass - fibre boats and roofings, and also fish and prawns were cleaned, dried and packed for export.

Lastly we went to Cashureena Beach. We enjoyed a few minutes on the beach. Then we started our homeward journey. We were sad, for the day was ending. We reached homeby about 8 P. M.

It was an enjoyable day and it was a real educational tour.

**Gauri Sivapathasegaram**
9 C

---

## A picnic at Peradeniya Gardens

I have an aunt in Kandy. She invited me along with my cousins to spend a holiday at her place.

We were a jolly set. One day we decided to go a picnic to the Peradeniya gardens. It is only a few miles from my aunt's place.

We started early in the morning. Each of us had a bicycle. We were straw hats to protect us from the heat of the sun. We took our meals in a basket. We reached the garden a 9 A. M.

We were very tired. We went on the cool meadow and stretched out ourselves. The birds sang from the trees. It Was a lovely morning. Ranjan poured the tea for us. We had sandwiches for break fast.

Then we went round the garden. It was a beautiful sight. First we went to the orchid house. It was wonderful. Some orchids looked like spiders and others insects, They were in soft colours.

We were surprised to see the enormous anthuriums and rosesin different colours. We walked down the winding paths. There were beautiful Flowers on either side, There were shoe flowers in numerous colours. There were palms on eithe side of the road. There was a river flowing at one end, and there was a beautiful bridge over it.

We took our camera with us. We took many photographs. We derived great pleasure in feeding the fish in the pond. The pond is in the shape of Sri Lanka. There were lotus ponds too. We drank lime juice as we went round. We talked among our scelves of the glory of God. He has created such a beautiful nature so that man might enjoy himself.

It was 1'O clock. We went to a cool spot, and had a delicious lunch. It was delicious because we were very hungry and also the surrounding was very beautiful.

After lunch some of us listened to the transistor while the others read books.

In the evening when the Sun had gone down we were on our bicycle once again. We went home happily. It was an unforgetable day.

**K. Harischandran**
10 A

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## My country

Ceylon is my Country. It is a beautiful island situated at the southern tip of India. It has an area of 25,000 sq. miles and a population of twelve million. I am proud of my country. Every one must have patriotic feelings.

Once Ceylon was 'the granary of the east' It had enough grain and was self-sufficient. Our spices were world-famous. The traders took our spices, pearls, sandal wood, ceda, ebony and ivory in exchange for their gold and silver. Our monkeys and peacocks found their way in to Imperial Rome. The royal princess and ladies of noble birth considered it a fashion to rear them as pets in their palaces. Our spices and condiments added taste and flavour to their dishes. It was greatly searched after by the European merchants like the Portugese, Dutoh, French and the English people.

Ceylon has natural beauty and scenic splendour. It had attracted many tourists from abroad. Ceylon! was called 'the pearl of the Indion ocean! Even today Ceylon is a tourists' paradise. Thousands of tourists visit our shores daily to spend their vacation, They are never disappoinded. They always get pleasure worth their money.

There are many interesting places. There are modern hotels along the coast. Bentota, Negombo and Colombo are famous places. The sunny beaches are an attraction to the tourists.

The ruins of Anuradhapura and Polonnaruwa, the frescoes of Sigiriya are other fascinating places. The hill capital of Kandy with its surrounding hills and the beautiful lake in the middle is an enchanting sight. Nuwareliya is a little bit of England, where the Englishman feels at home. There are Wilpattu and Yala sanctuaries teeming with wild life. The natural pond at Keerimalai, the famous Hindu temple at Nallur and the hot springs at Kanniya are some of the many marvels. They win the admiration of the foreigners.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The capital of Colombo too has its beauty. Our zoo in one of the best in the East. There are tall and stupendous buildings. Galle Face Green is a beautiful place for relaxation.

The up-country gives a special beauty with its meandering rivers and tea-covered hills. The tea bushes are an enchanting sight.

This is my country. I love my country. I am reminded of a hymn-" I vow to thee, my country - all earthly things above - Entire and whole and perfect, the service of my love."

**S. Jeyaranjan**
11 B

## An Excursion

An excursion was organized by our Vice-Principal and teachers to take the senior students of this college. It was a tour of the interesting places of Sri Lanka.

The day dawned very early on the 2nd of October, 1979. All of us were at the school gate by 5 O' clock. The teachers arrived early. There wers two buses - one for the girls and one for the boys. We boarded the bus with great enthusiasm and started off on our journey.

On the way we stopped at Murugandy. We had our break fast. We worshipped at the Murugandy Pillaiyar temple and took holy ashes.

We passed through beautiful fields and lovely scenes. We were terribly excited when going through the forest. We saw mankeys. They were jumping from tree to tree. We reached Vavuniya by noon. We had a hearty lunch.

Then we went to Anuradhapura. It is the ancient capital of Ceylon. Many Sinhalese kings hod built huge dagobas and Viharas. Abayagiri Vihara is as big as the pyramids of Eqypt. The Ruvanvelisaya,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Thuparama, Isurumini and Brazen Palace are also ancient famous buildings which are in ruins today.

The Bo-tree at Anuradhapura is the oldest historical tree in Ceylon. It is sacred to the Buddhists and they had built a temple with a big Buddha statue. Buddhists from all over the island go and worship there. We also went to Polonnaruwa. It is another ancient city. We spent sometimes in going round the ruins of royal palaces and Viharas. There were beautiful lakes and moon-stones. After a hurried lunch we left Polonnaruwa.

We went to the hill capital of Kandy. It is famous for its natural beauty. There is a beautiful lake in the middle. Its climate is suitable for tea. There are many tea estates and factories in Kandy. Thousands of people go to Kandy in August to see the Perahera festival.

We proceeded to Peradeniya where we saw the Botanical Gardens. It is regarded as the best in the east. There are some plants planted to commemorate the visitors. No visitor to the Botanical Gardens can ever forget its beauty. We also went to the University of Peradeniya. We met our old students there.

We went to see the Mahaweli Project at Pollgola. From there we went to Dambulla. We saw the cave-paintings there. It is one of the marvels of Ceylon.

Then we went to sigiriya. We climbed the rock of Sigiriya which was the fortress of Kasiyapa. There we saw the fresces of Sigiriya. All these tell us the glory of the past.

We had a pleasant time by singing and playing our musical instruments. At dusk we packed our things and returned home after an enjoyable trip.

**P. Vasukianparasi**
11 Commerce

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A Contented Life of Farmer

The farmer is no stranger to us. We see him almost daily in our villages. There are many farmers in our village. They are active all the time. They are hard-working. They work the whole day. They work at night too. They are rich and poor farmers, but all the farmers are happy, healthy and contented.

There is a proverb in Tamil. 'A farmer lives a contented life while others crave after him.' He has everything at home-grain, vegetables and fruits. He has also milk and eggs. He lives a simple and humble life.

A farmer often starts his day long before the sunrise. He gets up very early and goes to his field or garden. Very often his grown-up sons go with him to help him in his work. A farmer has different work in his farm. It may be ploughing, digging, making beds, manuring, weeding or watering the plants. By 7 o'clock his sons get back home to go to school. The farmer stays on and goes about his work. He finds satisfaction in his work. He is the master of his work. There is no hurrying nor tarrying.

His wife brings his breakfast. He sits under a shade of a shade of a tree and enjoys his breakfast. He admires nature. He breathes fresh air. Hence he has everything which a town-dweller cannot enjoy. His wife collects fresh vegetables and prepares a hearty meal.

At home the family enjoy the lunch. In the evenings he attends to his cattle and goats. Sometimes he meets his friends in the neighbourhood and talks to them on matters of mutual interest. At night he sleeps soundly. The next morning he goes about his usual routine. In short a farmer's life is one of satisfaction and contentment. He is not jealous and envious of others. He is pious. He takes his first harvest to the temple and makes pooja So that he might get a rich harvest year after year.

His life is an ideal one. He is the back-bone of a country. He feeds a nation — a tremendous task which no other worker



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

fulfils.. Let us ask ourselves whether they are duly rewarded for their great service to the nation. It is in the negative. In his old age he is helpless. He gets no pebsion nor any remuneration from the government. It is a big loop-hole in the administration. We do not know when this will be rectified and redress given to thousands of old farmers whose families are in sorry siate.

Dear friends, we must respect our farmers and give them due place in our society. We too must not crave after government jobs, though we are educated. We must welcome dignity of labour. Today many are unemployed and farming is a sure way out of this.

**A. Subhaschandrabose**
**12 A**

---

'Read not to contradict and confute ; nor to believe and take for granted ; nor to find take and discourse ; but to weigh and consider. Some books are to be tasted, others to be swallowed, and some few to be chewed and digested : that is, some books are to be read only in part ; others to be read but not curiously : and some few to be read wholy, and with diligence and attention.

— *Francis Bacon.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# From the Editor's Pen

Once again our Magazine, Vidhya sees the light of day. The voice of Urumpirai Hindu College is heard for and wide, for it had sent men abroad to England, Canada, Malasia, W. Germany and many more countries. Vidhya sends them homeward thoughts and greetings for it had nurtured and had made them citizens of the world. Their ample contribution stands as a monument in our college, the Malayan building.

We are living in the glory of the past, but the present is bleak and baffling. Which way to turn? Where to find the solution? What is the remedy? — no answer. The ills and wails linger on. It has greatly perplexed the parents, the principals and the teachers.

This state of debasement and deterioration does not refer to our college alone, but to all colleges. There is unrest among the student population. They are at the cross roads. whether to study hard or not and study to what end? There is no sure future for them. Year after year they are dumped on the road.

This frustration makes them to neglect their studies in the upper classes. They begin to ask the teacher, "Is Senior Certificate necessary to become a farmer?" There begins the problem of the teacher too. The students stagnate in the classes. There is indiscipline in schools. Cultured behaviour and decent upbringing are lost to the wind. The present schools are congested and it makes the problem more acute.

However the battle of the Principal and the teachers go on to educate them and to mould their chracter. The parents of today are very reluctanty to approach the school to inquire about their children. Most of our parents are farmers, and they are in the opinion that their children are doing well in school. They do not fully particiapate in the School Development Soeiety, which is an appropriate body to meet and air their views. So the link between the school and the parent is very narrow. Both fight the battles in different fields — at school and at home. The problem of the student cannot be solved until both unite.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

On the other hand, when our children study hard the doors of the universities are closed. Yet the poor student is driven from school to tutory and from tutory to school. The clock of the student circulates in this manner. The poor parent spends all his wealth on his son or daughter to reap the harvest, but only to find them a burden again on him.

There is a big talk of 'brain-drain' from Sri Lanka, but here there is 'brain-drain' from the rural areas. Most of the good students go to town schools and the name of the rural schools have been let down in intellectual fields and play fields. The rural schools may have drawbaeks but it is the duty of the people to make these schools also leading schools. It will also ease bus-travelling and avoid extra expense on the part of the parents.

Time to time the succeeding governments have changed the policies of the Education, but to no avail. opportunities of employment are less to the pace of rising population. The people too are crazy after white-collar jobs, and the country too has not industrialised enough to absorb the educated youth. So the problem goes on.

A student's life is to be guided earnestly, sympathetically and trustfully. The trust is placed on the parent, the school and the government. It should be discharged dutifully. A student's life is a period of innocence and ignorance. They are not to be blamed for their present plight. They are the budding citizens of Sri Lanka, and let us give them a fit foundation for a fruitful future.

**Mrs. B. Kandaiah**

---

'Lives of great men all remind us
We can make our lives sublime,
And, departing, leave behind us
Footprints on the sands of time.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1979 ஏப்பிரல் மாதம் நடைபெற்ற க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் சித்திபெற்ற பின்வரும் மாணவ மாணவிகளுக்கு எமது வாழ்த்துக்கள்

| | | |
|---|---|---|
| 1. | K. சுதர்சனி | இரசாயனவியல் B, தாவரவியல் B, விலங்கியல் C, பௌதிகவியல் C. |
| 2. | S. திருஞானேஸ்வரி | தூயகணிதம் A, இரசாயனவியல் C, பௌதிகவியல் C, பிரயோக கணிதம் S. |
| 3. | A. ஜெயசுதன் | இரசாயனவியல் B, தூயகணிதம் C, பிரயோக கணிதம் S, பௌதிகவியல் S. |
| 4. | S. A. நிர்மலகுமார் | தாவரவியல் C, இரசாயனவியல் S, விலங்கியல் S, பௌதிகவியல் S |
| 5. | S. கிருபாவினி | தூயகணிதம் B, பிரயோக கணிதம் S, இரசாயனவியல் S, பௌதிகவியல் S. |
| 6. | R. பத்மினிதேவி | இரசாயனவியல் C, பௌதிகவியல் S, தாவரவியல் S, விலங்கியல் S. |
| 7. | V. ஜெயநாதன் | இரசாயனவியல் C, பௌதிகவியல் S, விலங்கியல் S. |
| 8. | S. உதயன் | இரசாயனவியல் B, பௌதிகவியல் S, விலங்கியல் S. |
| 9. | N. ஜெயக்குமார் | இரசாயனவியல் C, பௌதிகவியல் C, தூய கணிதம் S. |
| 10. | P. புவனேந்திரன் | தூயகணிதம் S, பிரயோக கணிதம் S, பௌதிகவியல் S. |
| 11. | N. இராமதேவன் | இரசாயனவியல் C, பௌதிகவியல் S, தூய கணிதம் S. |
| 12. | R. பார்வதிதேவி | பௌதிகவியல் C, தூயகணிதம் B, இரசாயனவியல் S. |
| 13. | K. குமுதினி | இரசாயனவியல் S, தாவரவியல் S, விலங்கியல் S |
| 14. | R. நவநீதநாயகி | இரசாயனவியல் S, தாவரவியல் S, விலங்கியல் S. |
| 15. | T. ரூபா | தாவரவியல் C, விலங்கியல் S, இரசாயனவியல் S. |
| 16. | M. இரகுநாதன் | இரசாயனவியல் S, விலங்கியல் S. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1979 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற
## க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் சித்திபெற்ற
## பின்வரும் மாணவ மாணவிகளுக்கு
## எமது வாழ்த்துக்கள்

| | | |
|---|---|---|
| 1. | S. சிவராஜினி | இரசாயனவியல் A, விலங்கியல் A, தாவரவியல் A, பௌதிகவியல் B. |
| 2. | Y. யோகராணி | தூயகணிதம் A, பிரயோக கணிதம் A, பௌதிகவியல் B, இரசாயனவியல் B. |
| 3. | P. நந்தன் | தாவரவியல் B, இரசாயனவியல் C, விலங்கியல் C, பௌதிகவியல் S. |
| 4. | N. சிதாம்பிகை | தூயகணிதம் A, பிரயோக கணிதம் S, பௌதிகவியல் S, இரசாயனவியல் S. |
| 5. | M. மேரி றீசா | இரசாயனவியல் S, பௌதிகவியல் S, தாவரவியல் S, விலங்கியல் S. |
| 6. | K. காமேசன் | பௌதிகவியல் S, இரசாயனவியல் S, விலங்கியல் S, தாவரவியல் S. |
| 7. | R. இரஜனி | பௌதிகவியல் S, தாவரவியல் S, விலங்கியல் S. |
| 8. | N. அல்லமதேவன் | இரசாயனவியல் S, தாவரவியல் S, விலங்கியல் S. |
| 9. | T. பத்மநாதன் | இரசாயனவியல் C, விலங்கியல் S, தாவரவியல் S. |
| 10. | P. இரகுபாலன் | விலங்கியல் C, இரசாயனவியல் S, தாவரவியல் C. |
| 11. | S. சிவன்ரூபன் | விலங்கியல் C, தாவரவியல் C, இரசாயனவியல் S. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்ட பாடசாலைகளின் உதைபந்தாட்டக் குழு நடாத்திய போட்டியில் 1979-ம் ஆண்டிற்கான சாம்பியன் வெற்றிக் கிண்ணத்தை உரும்பராய் இந்துக் கல்லூரி சுவீகரித்துக் கொண்டது.

உரும்பராய் இந்துக் கல்லூரி இரண்டாம் பிரிவு
உதைபந்தாட்டக் கோஷ்டி வீரர்கள்



**இருப்பவர்கள் :** திரு வ. சின்னத்தம்பி **(பொறுப்பாசிரியர்)**, செல்வன் ம. லிங்கமோகன், செல்வன் க. நந்தன், திரு. இ. சிவானந்தன் (அதிபர்). செல்வன் பா. சிவகுமார் **(தலைவர்)** செல்வன் ப. வரதன். திரு. செ, சிவபாலன் (உப அதிபர்)

**நிற்பவர்கள் :** செல்வன் தே. யக்கோணியஸ், செல்வன் சு. இரவீந்திரன், செல்வன் த. அரவிந்தன், செல்வன் அ. கமலேஸ்வரன், செல்வன் ந, வசவதேவன், செல்வன் த. இரவீந்திரன், செல்வன் ஜெ. கிரிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரும்பராய் இந்துக் கல்லூரி
## மூன்றும் பிரிவு உதைபந்தாட்ட வீரர்கள்



**இருப்பவர்கள் :** திரு. வ. சின்னத்தம்பி (பொறுப்பாசிரியர்) செல்வன் க. சசிகுமார், செல்வன் இ. ஜெயன் (தலைவர்) திரு இ. சிவானந்தன் (அதிபர்), செல்வன் வே. சிவதாசன், செல்வன் அ. கருணாகரன் திரு. செ. சிவபாலன் (உப அதிபர்)

**நிற்பவர்கள் :** செல்வன் மகேந்திரன், செல்வன் பா. இரவீந்திரன், செல்வன் அ. கதிர்காமநாதன், செல்வன் அ. ஹரிச்சந்திரா, செல்வன் தே. ஆதவன், செல்வன் சோ. சிவகரன், செல்வன் அ. சுரேஸ்குமார்



## உயர்தர மாணவர் மன்றச் செயற்குழு

காப்பாளர் — திரு. அ. பூரணச்சந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டறிக்கை

1979-ம் ஆண்டுக்கான விளையாட்டறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

வருடா வருடம் கல்வி இலாகாவினால் நடாத்தப்படும் உடற்பயிற்சிப் போட்டிக்கு வட்டார மட்டத்தில் கனிஷ்ட பிரிவு ஆண் பெண் பிரிவினர் பங்கு பற்றினர். ஆண் பிரிவினர் மாவட்டப் போட்டியில் பங்குபற்றத் தெரிவாகி கனிஷ்ட பிரிவில் இரண்டாம் இடத்தையும் அணிநடைக்கான முதலாவது பரிசு வெற்றிக் கிண்ணத்தையும் பெற்றுக் கொண்டனர். அவர்களுக்கு எமது நல்வாழ்த்துக்கள்.

இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி 23-6-79-ல் நடைபெற்றது. பழைய மாணவரும் யாழ்ப்பாண இலங்கை வங்கி முகாமையாளருமான தி. இ. சிவலிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்கள். திருமதி சிவலிங்கம் அவர்கள் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்கள். போட்டிகள் முடிந்து பரிசில்கள் வழங்கும் தறுவாயில் மழை பெய்ததாயினும் மாணவர்கள் மிக அமைதியான முறையில் இருந்து பரிசில்களைப் பெற்றுச் சென்றனர். நகுல, அருச்சுன, வீம இல்லங்கள் முறையே முதலாம், இரண்டாம், மூன்றும் இடங்களைப் பெற்றுக்கொண்டன.

எங்கள் பாடசாலையில் இரண்டு பிரிவுகளாக இல்லங்களுக்கிடையில் ஓர் உதைபந்தாட்டப் போட்டியை நடாத்தினோம். 19 வயதுக்குட்பட்டோர் பிரிவில் அருச்சுன இல்லம் சாம்பியனாக வந்து பழைய மாணவர்களால் உவந்தளிக்கப்பட்ட அமரர் இரத்தினம் அவர்களின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தைச் சுவிகரித்துக் கொண்டது. 15 வயதுக்குட்பட்டோர் பிரிவில் தர்ம இல்லம் சாம்பியனாக வந்தது. இப் போட்டியை வருடாவருடம் நடாத்த எண்ணியுள்ளோம்.

இவ்வருடம் செல்வி வாமினி திலகரின் முயற்சியினால் அனேக பெண் பிள்ளைகள் விளையாட்டுத்துறையில் ஈடுபட்டனர். வலைப்பந்து விளையாட்டில் அனேக பெண்பிள்ளைகள் ஊக்கங் காட்டினர். 1980-ம் ஆண்டில் இல்லங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி ஒன்றை நடாத்த எண்ணியுள்ளோம்.

யாழ். கல்வி இலாகா நடாத்திய 13 வயதுக்குட்பட்டோர் உதைபந்தாட்டப் போட்டியில் செல்வன் சோ. சிவகரனைத் தலைவனாகவும் செல்வன் ப. ஜெயக்குமாரனை உபதலைவனாகவும் கொண்ட கோஷ்டி வட்டாரத்தில் சாம்பியன்களாக வந்தது.

யாழ். மாவட்டப் பாடசாலைகள் சங்கம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றும் பிரிவுக் கோஷ்டியினர் பங்குபற்றினர்.

| | தலைவன் | உபதலைவன் |
|---|---|---|
| 3-ம் பிரிவு | செல்வன் இ. ஜெயன் | செல்வன் வே சிவதாசன் |
| 2-ம் பிரிவு | ,, பா. சிவகுமாரன் | ,, க. நந்தன் |
| 1-ம் பிரிவு | ,, ச. கந்தசாமி | ,, சு. செல்வக்குமார் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று பிரிவினரும் ஆரம்ப கட்டப் போட்டிகளில் வெற்றியீட்டி கால் இறுதித் தேர்வுக்குத் தெரிவானபோதும் முதலாம் பிரிவினர் அரை இறுதித் தேர்வுக்குத் தெரிவாகத் தவறிவிட்டனர்.

மூன்றும் பிரிவினர் அரை இறுதித் தேர்வில் பங்குகொண்டு தோல்வியுற்று மூன்றும் இடத்துக்குரிய போட்டியில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியுடன் விளையாடி தோல்வியுற்றனர். இருந்தும் இக்கோஷ்டி உதைபந்தாட்ட இரசிகர் எல்லோராலும் புகழப்பட்டதை யாவரும் நன்கறிவர்.

இரண்டாம் பிரிவினர் நடேஸ்வராக் கல்லூரியுடன் இணைச் சாம்பியன்களாக வந்ததன் மூலம் உரும்பராய் இந்துக் கல்லூரியின் உதைபந்தாட்டச் சரித்திரத்தில் ஒரு புதிய சகாப்தத்தையே உருவாக்கி விட்டார்கள். 30 ஆண்டுகளின் பின் எங்கள் எல்லோரதும் கனவுகளை நனவாக்கிய பெருமை ஒழுக்கத்துடனும், மனத்தைரியத்துடனும் திடசங்கற்பத்துடனும் விளையாடிய இரண்டாம் பிரிவு வீரர்கள் அனைவரையும் சாரும். இவ்வெற்றிக்கு கடந்த 22 வருடங்களாக தன்னையே இப்பாடசாலையின் உதைபந்தாட்டத்துக்கென அர்ப்பணித்த திரு ச. இரத்தினம் அவர்களின் அத்திவாரமே உறுதுணைபுரிந்ததென்றால் அது மிகையாகாது. இரண்டாம் பிரிவு வீரர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

உரும்பராய் பொதுமக்கள் வருடாவருடம் உதைபந்தாட்டத்துக்கு வழங்கும் ஊக்கமும் ஆக்கமும் யாவரும் அறிந்ததே. ஆனால் இவ்வருடம் அவர்கள் வழங்கிய பேருதவிகளை அளவிடவே முடியாது. அவர்களுக்கு எங்கள் உளங்கனிந்த நன்றி.

எங்கள் பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுத்துறை நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் என் சக ஆசிரியர்கள் கந்தோர் உத்தியோகத்தர்கள் என்போரின் ஆக்கமும், ஊக்கமும், உதவியும் இன்றேல் இவ்வளவு திறம்பட அவைகள் அமைந்திரா. குறிப்பாக உதைபந்தாட்டப் போட்டிக் காலங்களில் அவர்கள் நல்கிய பொருளுதவி, சரீர உதவி, என்பவற்றிற்கு நான் என்றென்றும் கடமைப்பாடுடையேன். அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். இறுதியாக எங்கள் அதிபர், என்ன விடயத்துக்கென நான் அவரிடம் அணுகிய போதும் மலர்ந்த முகத்துடன் நான் கேட்ட உதவிகள் அனைத்தையும் சிறிதும் மனங்கோணாமல் செய்தமை என்றும் என் இதயத்திலிருக்கும். அவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

வ. சின்னத்தம்பி
விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவ முதல்வர்கள் மன்ற அறிக்கை — 1979

காப்பாளர் — ஆசிரியர் திரு. அ. பூரணச்சந்திரன்

சிரேட்ட மாணவ முதல்வர்கள் — செல்வன் த. வரதராசன்
செல்வி யோ. யோகராணி

உதவிச் சிரேட்ட மாணவ முதல்வர்கள்— செல்வன் பொ. நந்தன்
செல்வி த. பவானி

மேற்படி மன்ற அறிக்கையை பெருமையுடன் சமர்ப்பிக்கிறோம். எமது கல்லூரியின் நடைமுறைகளின்படி இவ்வருடமும் கல்லூரியின் ஒழுங்காற்றுச் சபையின் சிபாரிசினால் 24 மாணவ முதல்வர்களை அதிபர் நியமித்தார். இவர்களில் 14 பேர் ஆண்கள் 10 பேர் பெண்கள்.

ஒழுங்காற்றுச் சபையின் சிபாரிசினால் அதிபர் நியமித்த மேற்படி மாணவமுதல்வர்கள் இருபத்துநான்கு பேரும் கல்லூரி நடைமுறைப்படி மாணவர்கள் ஆசிரியர்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியை ஏற்று நல்முறையிற் தமது கடமையையாற்றினர்.

இவர்கள் அனைவரும் தமது கடமைகளை அவ்வண்ணம் நிறை வேற்றுதற்கு அதிபர், உதவி அதிபர், ஒழுங்காற்றுச் சபையிலுள்ள ஆசிரியர்கள் ஆகியோர் ஒத்துழைப்பும் உதவியும், அறிவுரைகளையும் வழங்கினர் என்று கூறின் அது மிகையாகாது. இவ்வகையான உதவி களை நல்கியமைக்காக அவர்களுக்கு எமது நன்றியை அன்புடன் தெரி வித்துக்கொள்கிறோம்.

தம்மைப் பார்த்துத்தான் தமது சகமாணவரும் நன்மாணாக்கராக வாழவேண்டும் என்ற பெருநோக்கோடு இம்மாணவ முதல்வர்கள திகழ்ந் தனர்; திகழ்கின்றனர். கல்லூரி நேரங்களில் தமது கடமைகளில் ஈடு பட்டு ஒழுங்கை நிலைநாட்டுவதுடன் கல்லூரியில் நடைபெறும் கூட்டங்கள், ஆராதனைகள், பரிசளிப்பு விழா, இல்ல விளையாட்டுப் போட்டி, கலை நிகழ்ச்சிகள் போன்றவைகளிலும் கடுமையாக ஈடுபட்டு ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு உதவியாக இருந்தனர்.

இப்படியாக மாணவ முதல்வர்கள் தமது கடமைகளைத் திறமை யுடனும், பொறுப்புணர்ச்சியுடனும் செய்து கல்லூரிக்கும் தமக்கும் நற் பெயரீட்டி வருகிறார்கள். அவர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான பாராட்டுதல்களும் நன்றிகளும் உரித்தாகட்டும்.

இங்ஙனம்

த. வரதராசன்
சிரேட்ட மாணவ முதல்வன்
1979

அ. பூரணச்சந்திரன்
காப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான மன்றம் — 79 - 80

| | |
|---|---|
| காப்பாளர் — | திரு. சி. திருச்செல்வம் |
| தலைவர் — | செல்வன் சு. வைகுந்தநாதன் |
| செயலாளர் — | செல்வன் இ. ராஜ்குமார் |
| பொருளாளர் — | செல்வன் சு. செல்வகுமார் |
| பத்திராதிபர் — | செல்வன் தி. ஸ்ரீ தரன் |
| உபதலைவர் — | செல்வன் T. சிறிஸ்கந்தராசா |
| உபசெயலாளர் — | செல்வி செ. பிரேமாவதி |
| உபபொருளாளர் — | செல்வன் கு. உதயபானு |
| உபபத்திராதிபர் — | செல்வி ச. அனுசூயா |

1979-ம் ஆண்டு வைகாசி மாதம் மேற்படி உத்தியோகத்தர்கள் போட்டி இன்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

(14-11-79) மன்றத்தின் சார்பில் கல்லூரியில் மரநாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. கல்லூரி அதிபர் இவ்விழாவை ஆரம்பித்து வைத்தார். ஆசிரியர்களும், மன்ற அங்கத்தவர்களும் பங்கு கொண்டனர்.

(7-3-80) மன்றக் கூட்டத்தில் மன்ற அங்கத்தவர்களுக்கு எமது கல்லூரி ஆசிரியை திருமதி மீ. தவரத்தினம் அவர்கள் உரையாற்றினார்கள்.

(7-3-80) எமது மன்றத்தின் சார்பில் கல்லூரி மாணவர்களை யாழ். வட்டுக்கோட்டை கல்லூரி பொருட் காட்சிக்கு அழைத்துச் சென்றோம்.

வேறு பல நிகழ்ச்சிகள் விரைவில் நிறைவேற்றப்படவுள்ளன. விரிவுரையாளர் ஒருவர் மன்றத்தில் உரையாற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| சு. வைகுந்தநாதன் | இ. ராஜ்குமார் | சி. திருச்செல்வம் |
| தலைவர் | செயலாளர் | காப்பாளர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரும்பராய் இந்துக் கல்லூரி உடற்பயிற்சிக் குழு



**இருப்பவர்கள் :** திரு. வ. சின்னத்தம்பி (பொறுப்பாசிரியர்), செல்வன் ச. பகீரதன், செல்வன் ச. ஜெயரஞ்சன், செல்வன் ஜே. கிரிதரன், திரு. இ. சிவானந்தன் (அதிபர்), செல்வன் ம. இளங்குமரன் (தலைவர்). செல்வன் ந. வசவதேவன். செல்வன் பா. சிவகுமார், திரு. செ. சிவபாலன் (உப அதிபர்)

**நிற்பவர்கள் :** செல்வன் வே. சிவதாசன், செல்வன் கு. ஹரிச்சந்திரா, செல்வன் அ. கதிர்காமநாதன், செல்வன் அ. கமலேஸ்வரன், செல்வன் க. நந்தன், செல்வன் ந. நிற்சுதன், செல்வன் பு. பரமேஸ்வரன், செல்வன் வ. விஜயகுமார், செல்வன் த. அரவிந்தன், செல்வன் அ. கருணாகரன், செல்வன் சி. சிவன்சுதன், செல்வன் செ. செல்வக்கமலன்.



## சைவ மாணவர் மன்றம்

காப்பாளர் — திரு. வி. ஆறுமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரும்பராய் இந்துக் கல்லூரி முதலாம் பிரிவு
## உதைபந்தாட்ட வீரர்கள்



**இருப்பவர்கள் :** திரு வ. சின்னத்தம்பி பொறுப்பாசிரியர்), செல்வன் ந. ஜெயக்கிருஷ்ணன் செல்வன் ச. கந்தசாமி (தலைவர்) திரு. இ. சிவானந்தன் (அதிபர்), செல்வன் சு. செல்வக்குமார், செல்வன் ந. இராசேந்திரன். திரு. செ. சிவபாலன் (உப அதிபர்)

**நிற்பவர்கள் :** செல்வன் மு. சிவசத்தியநாதன், செல்வன் சு. குணசீலன், செல்வன் பொ. நந்தன், செல்வன் ந. கிற்சுதன், செல்வன் இ. இராஜமோகன், செல்வன் ப. சிறீகுமார், செல்வன் சு. வைகுந்தநாதன், செல்வன் அ. சுபாஸ்சந்திர போஸ்



விஞ்ஞான மன்றம்

காப்பாளர் — திரு. சி. திருச்செல்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிகாட்டிகளின் அறிக்கை — 1979

| | |
|---|---|
| தலைவி — | திருமதி த. இராஜானந்தன் |
| உபதலைவி — | திருமதி இ. சிவலிங்கம் |
| குழுத்தலைவர்கள் — | செல்வி S. சிவராஜினி |
| | ,, Y. யோகராணி |
| | ,, K. மஞ்சுளா |
| | ,, V. உமாசிறி |
| | ,, T. பவானி |
| | ,, M. ஜெயரூபி |

எமது பாடசாலை வழிகாட்டிகள் வடமாகாண வழிகாட்டிகள் இயக்கம் நடாத்திய சகல வைபவங்களிலும் கலந்து கொண்டனர்.

எமது பாடசாலையில் இவ்வியக்கம் ஆரம்பிப்பதற்கு காரணகர்த்தாவாக விளங்கிய திருமதி சா. பேராயிரவர் அவர்கள் ஓய்வு பெற்று வெளிநாடு சென்றுள்ளார். எமது இயக்க உபதலைவியாக இருந்த செல்வி ந. நல்லையா அவர்களும் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்கு சென்றுள்ளார். இவர்கள் இருவரினதும் வருங்காலம், மகிழ்ச்சிகரமானதாகவும் சிறப்பாகவும் அமைய வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

செல்வி S. சிவராஜினி
செல்வி Y. யோகராணி

---

இந்நாட்டிலுள்ள குழந்தைகள் அனைவரும் நல்ல முறையில் வளர்க்கப்படுகிறார்களா என்று கவனித்துக் கொள்வதில் நம் அனைவருக்குமே பொறுப்பு உண்டு. ஏனெனில் குழந்தைகள் இந்நாட்டின் செல்வம். இச்செல்வத்தை நாம் எவ்வாறு பயன்படுத்திக் கொள்கிறோம் என்பதைப் பொறுத்துத் தான் நாட்டின் எதிர்காலம் அமைந்திருக்கிறது.

— நேரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவமாமன்ற அறிக்கை — 1979

| | | |
|---|---|---|
| மன்றக் காப்பாளர் — | ஆசிரியர் திரு. வி. ஆறுமுகம் | |
| மன்ற ஆசிரியர்கள் — | திரு. சி. தமோதரம்பிள்ளை | திரு. ஏ. தெய்வேந்திரா |
| | திருமதி ச. விமலேந்திரன் | திருமதி த. சுப்பிரமணியம் |
| | திருமதி கு. அமிர்தலிங்கம் | திருமதி ப. நவரத்தினசிங்கம் |
| மன்றத் தலைவர் — | செல்வி க. விமலாதேவி 11 C | |
| உதவித் தலைவர் — | செல்வி க. சாந்தி 12 A | |
| செயலாளர் — | செல்வன் அ. யோகராசா 12 B | |
| உதவிச் செயலாளர் — | செல்வி கு. மஞ்சுளா 12 A | |
| பொருளாளர் — | செல்வன் த. சந்தர் 12 A | |
| பத்திராதிபர் — | செல்வி சோ. தர்சினி 12 A | |

ஒவ்வொரு வகுப்பிலும் 2 பிரதிநிதிகள் வீதம் வகுப்பாசிரியர்களால் மாணவர் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்டனர். மாணவப் பிரதிநிதிகள் இவ்வருடம் 56 பேர், காப்பாளர், அதிபர், உதவி அதிபர், ஆறு ஆசிரியர்கள் உட்பட 65 பேர் மன்றத்தின் செயற்குழுவில் உளர்.

கடந்த ஆண்டுகளைவிட இவ்வாண்டில் சைவமாமன்றம் ஆற்றிய சேவைகள், நடாத்திய பூசைகள் அதிகம் என்பதைப் பூரிப்புடன் கூறிக்கொண்டு இவ்வறிக்கையைப் பெருமையுடன் சமர்ப்பிக்கிறோம்.

நமது மாணவர் சைவபரிபாலன சபை, விவேகானந்த சபை, சிவநெறிக் கழகம் ஆகியவை நடாத்திய சமயப் பரீட்சைகளிலும், போட்டிகளிலும் பங்குபற்றி நல்ல பெறுபேறுகளைப் பெற்றனர். கடந்த வருடத்திலும் பார்க்க இவ்வருடம் சிறந்த சமயச் சொற்பொழிவாளர்களைக் கூடுதலாக அழைத்துச் சொற்பெருக்காற்றும்படி வேண்டி நற்பணி செய்தோம்

**பூசைகள்:-** வழக்கம் போல வெள்ளிக்கிழமை தோறும் காலை 8-30 — 8-45 பூசையும் பின்னர் 9-30 வரை பஜனையும் சிறப்புச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. பூசைகளை இவ்வருடம் ஒவ்வொரு வகுப்பினரும் போட்டி போட்டுத் திறமையாக நடாத்தினர். பண்டிதர் இ. நவரத்தினக் குருக்கள் ஆகமவிதிப்படி பூசையை நிறைவேற்றிய பின்னர் சிறிது நேரம் சொற்பெருக்காற்றினர்.

**விசேட பூசைகள்:** நாலடியார்களின் நற்குருபூசையும், சக்தியின் நவராத்திரி பூசையும் வழக்கத்தைவிட மிகச் சிறப்பாக நடைபெற்றன. விசேட பூசைகள் அனைத்தையும் தர்ம, வீம, அர்ச்சுன, நகுல இல்லங்கள் திறமையாக நடாத்தின. இவ்விசேட பூசைகளைச் சிறப்பித்தற்கு சிறந்த சொற்பொழிவுகளையும், இசையரங்குகளையும் இல்லத் தலைவர்கள் ஒழுங்கு செய்து நன்முறையில் நடாத்தினர். அதற்காக இல்லத்தலைவர்கட்கு மன்றத்தின் சார்பில் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

**சொற்பொழிவுகள்:** முன்னைய ஆண்டுகளைவிட இவ்வாண்டில் மிகக் கூடுதலான சொற்பொழிவுகள் இடம் பெற்றன. வெள்ளிதோறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறும் பூசையை ஒவ்வொருவகுப்பினர் நடாத்த வேண்டும் என மன்றம் தீர்மானித்தது. இதனுல் வகுப்புகள் போட்டியிட்டு யாழ். மாவட்டத்திலேயே சிறந்த சொற்பொழிவாளர்களையெல்லாம் அழைத்து வந்து பயனடைந்தனர்.

**பரீட்சைகள்:** சைவபரிபாலன சபையார் நடாத்திய பரீட்சைக்கு கல்லூரியிலுள்ள சைவமாணவர் 95% மாஞேர் தோற்றினர். மன்றத்தின் ஊக்குவிப்பால் பலர் திறமைச் சித்தியெய்தினர். இப்பரீட்சைக்காக மேலதிகவகுப்புக்களை மன்ற ஆசிரியர்கள் நடாத்தி மாணவர்களை ஊக்குவித்தனர்.

**போட்டிகள்:** வழக்கம்போல மன்றம் இவ்வருடமும் சமய அறிவு திருமுறை ஓதுதல், பேச்சு, திருமுறை எழுதுதற் போட்டிகளை இல்ல, ரீதியாக நடாத்திப் புத்தகப் பரிசில்களையும், சான்றிதழ்களையும் அதிபர் மூலம் வழங்கியது. இவற்றில் நகுல, அர்ச்சுன, தர்ம இல்லங்கள் முறையே முதலாம், இரண்டாம், மூன்ரும் இடங்களைப் பெற்றன. கீரிமலைச் சிவநெறிக் கழகம் நடாத்திய மேற்பிரிவுப் பேச்சுப் போட்டியில் செல்வன் த. சந்தர் 5வது பரிசாகப் புத்தகமும் சான்றிதழும் பெற்ருர். அவருக்கு எமது பாராட்டுக்கள்.

**எமது திருவிழா:** வருடந்தோறும் நாம் நடாத்தும் திருக்கேதீச்சரத்தானின் பூங்காவன பகற்றிருவிழாவை முன்னிட்டு, பெற்ருரும் மாணவரும் பெருந்திற் சென்று, பங்குபற்றி பாவம் விளையறுத்தோம். ஆசிரியர்கள் திரு. சி. தாமோதரம்பிள்ளை, திரு வீ. ஆறுமுகம், திரு. சி. மகாலிங்கம் ஆகியோர் சொற்பெருக்காற்றியதுடன், பஜனையும் செய்து விழாவைச் சிறப்பித்தனர். மற்றும் ஆசிரியர் திரு. அ. பூரணச்சந்திரன், திரு. ம. சண்முகரத்தினம், திருமதி ஏ. என். நேரு மாணவரின் தலயாத்திரைக்கு பெருதவி புரிந்தனர். அவர்கட்கு எமது நன்றி.

**சமய சஞ்சிகை:** சைவ சமய விடயங்களைக் கையெழுத்துப் பிரதியாக ஒரு சஞ்சிகைபோல அமைத்து, அவற்றினை மாணவர் வாசித்துப் பயனடைந்தனர். இது இவ்வருடம், மன்றத்தின் புதிய சாதனையாகும்.

**ஆதரவு:** யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. ச. விநாயகமூர்த்தி, துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, சைவப்புலவர் க. சி. குலரத்தினம் போன்ருேர் எமது மன்றத்தின் அழைப்பை ஏற்றுப் பலமுறை சொற்பெருக்காற்றித் தமது ஆதரவை மன்றத்திற்கு அளித்தனர். அவர்களுக்கு எமது உளம்கனிந்த நன்றி. மீண்டும் மீண்டும் அவர்களின் உதவி கிடைக்க இறையருளை வேண்டி விழைகிருேம்,

“ வையகமெல்லாம் அரன்நாமமே சூழ்க ”

அ. யோகராசா
செயலாளர்

வீ. ஆறுமுகம்
மன்றக் காப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர மாணவர் மன்ற அறிக்கை

காப்பாளர் — ஆசிரியர் திரு அ. பூரணச்சந்திரன்

தலைவர் — செல்வன் சி. வரதன்

செயலாளர் — செல்வன் பொ. நந்தன்

பொருளாளர் — செல்வன் செ. இராசேந்திரன்

இம்மன்றம் கல்லூரி வளர்ச்சியிலும், மாணவர் நலனிலும் குறிப்பாக உயர்தர மாணவர்களின் நலனிலும் அக்கறை கொண்டு செயற்பட்டு வருகிறது.

இம்மன்றத்தின் பொதுக் கூட்டங்கள் மாதத்தின் முதலாம், மூன்றாம் வாரங்களில் கூட்டப்படுகின்றன. இவைதவிர அவசியம் ஏற்படும் போது செயற்குழுக் கூட்டங்கள் காப்பாளரின் அனுமதியுடன் கூட்டப்படுகின்றன.

எமது மன்றத்தின் நோக்கம் மாணவர்களுடைய பேச்சுத்திறன், எழுத்துத்திறன், கல்வித்திறன், விவாதத்திறன் போன்ற திறமைகளை வளர்ப்பதுடன் மாணவர்களிடையே நல்லுறவையும், நற்பண்புகளையும், செயல்திறன்களையும் கட்டுக்கோப்பையும் வளர்த்தெடுப்பதேயாகும்.

இம்முறை நடைபெற்ற மன்ற நிகழ்ச்சிகளுள் "இன்றைய சமுதாயத்தில் இளைஞர் பங்கு" என்ற தலைப்பில் ஆசிரியர் திரு. சிவ. மகாலிங்கம் அவர்கள் சொற்பொழிவாற்றியதையும் "பெண்கள் கையில் அதிகாரம்" என்னும் கருத்துப் பற்றி மாணவர்களிடையே நடைபெற்ற கலந்துரையாடலையும் உதாரணங்களாக குறிப்பிடலாம்.

இவ்வாண்டு இராப் போசன விருந்து வெகு சிறப்பாகக் கொண்டாப்பட்டது. இவ்விருந்துக்கு எமது கல்லூரியின் பழைய மாணவர் வைத்திய கலாநிதி செ. இந்திரராஜா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். அத்தோடு கலைவிழா ஒன்றும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சிறப்புப் பேச்சாளர்களாக திரு. வ. பொன்னம்பலம் M. A. அவர்களும் சொல்லின் செல்வர் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. வை. சொக்கலிங்கம் அவர்களும் கலந்து கொண்டார்கள். பட்டிமன்றம், கவியரங்கம் ஆகிய நிகழ்ச்சிகள் பகலில் நடைபெற்றன. இரவு நடனம், நாடகம், இன்னிசைக் கச்சேரி ஆகிய கலைநிகழ்ச்சிகள் நடந்தேறின. இரவு நிகழ்ச்சிகளுக்கு பிரதம விருந்தினராக எமது பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேற்பிள்ளையவர்கள் கலந்து கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மன்றம் ஆசிரியர், மாணவர் நல்லுறவை வளர்ப்பதிலும் முன் நிற்கிறது. உதாரணங்களாக அமரராகிய சங்கீத ஆசிரியர் திரு. ஜ. தருமலிங்கம் அவர்களின் மரணச் சடங்கின்போது அனுதாபச் செய்தி வெளியிட்டதையும், ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியை திருமதி. த. இரத்தினசிங்கம் அவர்களின் சேவை நலன் பாராட்டு விழாவைச் சிறப்பாக நடாத்தியதையும் குறிப்பிடலாம்.

இவ்வாண்டு மன்றத்துக்கு உடைமைகள் சேகரிக்கும் நற்பணி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதற்காக மன்றம் நடாத்திய படக்காட்சியில் சேகரித்த பணமும் இராப் போசன விருந்து மிகுதிப் பணமும் பயன்படுத்தப்பட்டுப் பல பொருட்கள் வாங்கப்பட்டுள்ளன.

மன்ற அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் மன்றத்தினுல் மேற்கொள்ளப்படுகின்ற சகல நடவடிக்கைகளிலும் தங்கள் பங்கைப் பூரணமாக அர்ப்பணித்தால் மன்றப்பணிகள் குன்றிலிடப்பட்ட தீபம் போல் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் இவ்வினிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இவ்வாண்டின் நடுப்பகுதியில் இருந்து மன்றம் நல்ல பல செயற்பாடுகளையும் பல சிறப்பு நிகழ்ச்சிகளையும் திட்டமிட்டுச் செயலாற்றவுள்ளது ஓர் நல்ல அறிகுறியாகும்.

இறுதியாக எமக்கு ஒத்துழைப்பும், ஆதரவும், ஆலோசனைகளும் நல்கிவரும் அதிபர், ஆசிரியர்கள், நூலகப் பொறுப்பாளர், எழுதுவினைஞர் மற்றும் சகல ஊழியர்களுக்கும், மன்ற அங்கத்தவர்கள் அனைவருக்கும் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு இவ்வறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

பொ. நந்தன்
செயலாளர்

அ. பூரணச்சந்திரன்
காப்பாளர்

---

ஒரு குடும்பத்தில் தப்பு செய்யும் குழந்தையைத் தந்தை அடிக்கும்போது பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்று நினைப்பதில்லை மகன் தகப்பனுக்குக் கீழ்ப்படியவே செய்கிறுன். ஏன்? அடிபட்டதினுல் அன்று அடியின் பின்னணியிலுள்ள அன்பின் காரணமாகத்தான் சமூகம் அப்படி ஆளப்பட வேண்டுமென்பதே என் அபிப்பிராயம் ஆகும். குடும்பத்துக்கு எது உண்மையோ அதுவே சமூகத்துக்கும் உண்மையாகி இருக்க வேண்டும். சமூகம் என்பது பெரிய குடும்பமே ஒழிய வேறில்லை.

— மகாத்மா காந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரும்பராய் இந்துக் கல்லூரி
# வள்ளுவர் மன்றம்
# இரண்டாவது ஆண்டறிக்கை

கல்லூரியின் வித்தியா சஞ்சிகைக்கு, வள்ளுவர் மன்றம் தனது இரண்டாவது ஆண்டறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வு அடைகிறது. கல்லூரி மாணவர்களிடையே திருவள்ளுவரது கருத்துக்களை அறியவைப்பதும், அவற்றை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த உதவுவதுமே மன்றத்தின் பெருநோக்காகும்.

வருடாவருடம் வள்ளுவர் மன்றம் எடுக்கும் விழா இந்த வருடம் 15-06-79 வெள்ளிக்கிழமை நடைபெற்றது. பேச்சுப்போட்டி, திருக்குறள் மனனப் போட்டி, குறள் எழுதுதற்போட்டி என்பனவற்றில் திறமைகாட்டியவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

விழாவுக்கு வருகைதந்து சொற்பெருக்காற்றிய, யாழ். வளாக விரிவுரையாளர்கள் திருவாளர்கள் எஸ். மௌனகுரு, நா. சுப்பிரமணிய ஐயா இருவரும் அவையோரைப் பெரிதும் ஈர்த்து விட்டனர்.

"மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"

"அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பில்லாதவர்"

என்ற இரு குறள்களும் நன்கு தெளிவுற அலசிப் பல உதாரணங்களுடன் விளக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---

வள்ளுவர் மன்றக்குழு

---

கணவனின் அடிமையல்ல மனைவி. கணவனுக்குத் தோழியாகவும், துணைவியாகவும் இருக்கிறாள். அவனது இன்பங்களிலும், துன்பங்களிலும் பங்காளியாகவும் அவனைப்போலவே சுதந்திரமும் உடையவளாகவும் இருக்கிறாள்.

— மகாத்மாகாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரணர் அறிக்கை

பொறுப்பாசிரியர்கள் — திரு. க. சிறிதரன்
திரு. ம. சண்முகரத்தினம்

தலைவர் — செல்வன் ப. சாந்தலிங்கம்

குழுத்தலைவர்கள் — செல்வன் ந. அல்லமதேவன்
செல்வன் கு. ஹரிச்சந்திரா
செல்வன் சி. சிவன்சுதன்

எமது கல்லூரிச் சாரணர் இயக்கத்தின் அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். எமது சாரணர்கள் பல துறைகளிலும் சிறந்த சேவைகளை ஆற்றிக்கொண்டு வருகின்றனர். கல்லூரியில் நிகழும் பரிசளிப்பு விழா, விளையாட்டுப் போட்டிகள், கலை விழாக்கள் போன்றவற்றில் சாரணர்களின் பணி போற்றத்தக்கதாகும். எமது பகுதிகளிலுள்ள கோயில்களிலும், பொது இடங்களிலும், எமது சாரணர்கள் சிறப்பான தொண்டாற்றி வருகின்றார்கள்.

எமது சாரணர் ஆண்டுதோறும் வெளிப்பாசறை நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்கின்றார்கள். இதனால் இவர்கள் சாரணியத்தின் சிறந்த அனுபவங்களைப் பெற்றுக் கொளகின்றனர்.

எமது கல்லூரிச் சாரணர் படையின் வளர்ச்சிக்கு அதிபர் ஆசிரியர்கள் தம்மாலான உதவிகளை செய்துவருகின்றார்கள்.

" சாரணர் இயக்கம் ஓங்குக சமூகம் சிறப்புறுவதாக "

தலைவர், குழுத்தலைவர்கள்

---

எல்லாக் கல்விகள், பயிற்சிகள் அனைத்தினதும் முடிவு ஒரு முழு மனிதனை உருவாக்குவதே ஆகும்.

— சுவாமி விவேகானந்தர்

நல்ல குணங்களை மனிதனிடத்தில் வளர்ப்பதே கல்வியின் நோக்கமாகும்,

— மகாத்மாகாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிமின்! எழுமின்!! இயன்றதைச் செய்ய முனைமின்!

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல் ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் ஆயிரம் கோடி ஆங்கோர் ஏழைக்கெழுத்தறிவித்தல்"

இந்த வரிகளைப் பாடிய புலவர் யார்? அவர் வேறு யாருமில்லை வரகவி சுப்பிரமணிய பாரதியேதான். இத்தனைக்கும் அவர் நிரீச்சுர வாதியா? இல்லை; அவர் ஒரு பெரிய இறை பக்தர். அன்னை பராசக்தியை பக்திப் பரவசநிலை நின்று பாடித்துதித்த பழுத்த பக்தர். ஆனால், இவரது கருத்து என்ன புதுமையாயிருக்கிறதே? புரட்சிகரமானதாயிருக்கிறதே? என்றல்லவா எண்ணத் தோன்றுகின்றது. ஆயிரம் அன்னசத்திரம் அமைத்து அன்னதானம் செய்வதிலும் பார்க்க, பதினாயிரம் கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்வதிலும் பார்க்க ஒரு ஏழைச் சிறுவனுக்கு எழுத்தறிவிப்பது ஆயிரம் கோடி புண்ணியம் என்றல்லவா சொல்லுகிறார். ஆம், அது உண்மை; அது முற்றிலும் உண்மை. அவர்வரகவி, உள்ளத்தில் உண்மை ஒளி உள்ளவர் அவர் வாக்கினிலே எவ்வாறு ஒளி இல்லாமற்போகும். தேவாலயங்களின் மூலம் நாம் அருள் ஒளியைப்பெற முனைகின்றோம். வித்தியாலயங்கள் மூலம் நாம் அறிவொளியைப் பெற முயல்கின்றோம். அருள் ஒளியைப் பெறுவதற்கு அறிவொளிதான் மூலகாரணம் அல்லவா? எனவே அவ்வறிவொளியை நல்குதல் மகாபுண்ணியமாகும். இதைத்தான் வீர சன்னியாசி விவேகானந்தரும் சொன்னார். ஒருவனுக்கு அறிவைத்தருவதிலும் மேலான புண்ணியம் வேறெதுவுமில்லை. ஒரு ஏழைக்கு எழுத்தறிவித்தல் ஆயிரம் கோடி புண்ணியத்தைத் தருமென்றால் நூற்றுக்கணக்கான ஏழைமாணவர் பயில்கின்ற ஒரு வித்தியாலப் பணி எத்தனை கோடானுகோடி புண்ணியம் தரும் என்பது சொல்லாமலே அமையுமல்லவா? எனினும், அன்னதானப் பணிபுரிவோர் ஆயிரக்கணக்கானோர் உண்டு தேவாலயப்பணிபுரிவோர் எண்ணிலடங்காத் தொகையினர் உண்டு. ஆனால், வித்தியாலயப் பணிபுரிவோர் விரல்விட்டு எண்ணக்கூடிய தொகையினர் தானும் இல்லையே. இந்நிலை மாறவேண்டும். இதை மாற்றவும்தான் வேண்டும். எனவே, பணம் படைத்தவர்கள், நல்ல மனம படைத்தவர்கள், புண்ணிய கைங்கரியங்களில் பெருவிருப்புடையவர்கள் அன்னதானப் பணி தேவாலயப் பணி ஆகியவற்றோடு மாத்திரம் நின்று விடாது கோடானு கோடி புண்ணியத்தைத் தரும் வித்தியாலயப் பணியிலும் இனியாவது ஈடுபடுவார்களா? தெய்வ ஆலயங்களைப் பலரும் அடிக்கடி தரிசிக்கின்றார்கள். இது விரும்பத்தக்கதே. ஆனால், வித்தியாலய வளவிற்குள் காலடி எடுத்து வைக்கவும் கூசுகின்றார்களே. இது ஏன்? தெய்வ ஆலய விழாக்கள் காண மக்கள் கூட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டம் தேங்கிக்கிடக்கின்றது. ஆனல், வித்தியாலய விழாக்கள் காண மக்களை விலைக்கு வாங்க வேண்டியல்லவா இருக்கிறது. இந்நிலை என்றுமாறக்கூடாது.

நாம் வாழும் ஊரிலே குறையிருந்தால் அதற்காக நாம் ஊரைவிட்டு ஓடிவிடுகின்றோமா? இல்லையே. அக்குறைகளை ஓரளவுக்குச் சரிசெய்து கொண்டு இங்கேதானே வாழ்கின்றோம். ஆனல் நமது ஊர்ப் பெற்றோர்களிற் பெரும்பாலோர் தம் பிள்ளைகளை ஊரைவிட்டுத் துரத்திவிடுகின்றார்களே. ஊர் வித்தியாலயங்களில் குறையிருந்தால் அவற்றை நீக்க முன்வந்து, நிவர்த்தித்து, வளர்த்துத் தாமும் தம் சந்ததியும் வளர வழிசெய்வதோடு வீண் விரயமாகும் பணத்தை ஊர் வித்தியாலயங்களின் பணிக்கு உதவமுடியுமல்லவா? பட்டணப் பள்ளிக் கூடங்கள் நமது பிள்ளைகளுக்கு புகலிடமளிக்க முடியாத இக்கட்டான நிலைமை ஏற்பட இன்னும் அதிக காலம் எடுக்காது. அந்நிலை ஏற்படுமுன் நாம் நமது ஊர்ப் பள்ளிக்கூடங்களை வளர்த்து நன்னிலைப்படுத்தினல் மாத்திரமே எதிர் காலத்தில் எழப்போகும் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும்.

ஒரு கையிலுள்ள விரல்கள் ஐந்தும் ஒன்றிணைந்து செயற்பட்டாலே கை தனது வேலைகளைச் செவ்வனே செய்ய முடியும். அன்றி ஒரு விரல் தானும் ஊனப்பட்டால் அது தனது வேலையைச் சரிவரச் செய்ய முடியாது போய்விடுமல்லவா? அதே போல ஒரு வித்தியாலயம் நன்கு தொழிற்பட ஐந்து சாராரது ஒத்துழைப்பு அவசியத்தின்மேல் அவசியமாகின்றது. அவ்வைந்து சாராரும் யாவர்? மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் ஆகியோரே அந்த ஐந்திறத்தினருமாவர். இவர்களுள் மாணவரின் பள்ளிப் படிப்புச் சம்பந்தப்பட்ட அளவில் மிகுந்த ஆர்வத்துடனும் அக்கறையுடனும் உழைக்க வேண்டியவர்கள் மாணவர்களும் ஆசிரியர்களும் பெற்றோர்களுமேயாவர். ஒரு குதிரையைத் தண்ணீருக்குள் இழுத்துச் செல்லலாமேயன்றிக் குடிக்கச் செய்ய முடியாது. குடிப்பதும் விடுவதும் அதன் மனத்தைப் பொறுத்ததே. அது குடிக்கும் மனம் வைக்காவிட்டால் யாராலும் எதுவுஞ் செய்யமுடியாது. அதேபோல மாணவர்கள் கல்வியில் ஊக்கமும், ஆர்வமும் அக்கறையும் கொண்டு கற்காவிட்டால் பிறர் யாரும் எது செய்யினும் அது பயனற்றதாகவே முடியும், அடுத்ததாக வருகிறது ஆசிரியரின் பங்கு இவர்கள் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவரில் அனுதாபம்மிக்குடையராய்த் தம்பணியைத் தெய்வப்பணி என மதித்து கடமையிற் கண்ணும் கருத்துமாயிருந்து கண்ணியமான சேவை செய்ய வேண்டியவர்கள் மூன்றுவதாகப் பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் கல்வி விடயத்தில் எடுக்க வேண்டிய அக்கறை மிக மிக இன்றியமையாததாகும் இன்று அநேகமான பெற்றோர்கள் தம்பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிவிட்டால் தம் கடமை முடிந்து விடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது என்று எண்ணுகிறார்கள். இது மிகமிகத் தவறான ஒரு மனநிலையாகும். இதற்கு முற்றுப்புள்ளிவைத்துவிடல் வேண்டும். தம் பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காகச் செல்கின்றார்களா அங்கு ஊட்டப்படும் கல்வியைத் தினந்தினம் வீட்டில் மீட்டுக்கொள்ளுகின்றார்களா அவர்களது ஒழுக்கநிலை எவ்வாறிருக்கிறது. கல்வியில் அவர்களது தேர்ச்சி எந்நிலையில் இருக்கின்றது என்ற இன்னோரன்ன விடயங்களில் அவர்கள் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டும். உண்மை நிலை அறிந்து தம் பிள்ளைகளுக்கு தக்கபடி உதவ அவர்கள் அடிக்கடி பள்ளிக்கூடம் சென்று ஆசிரியர்களோடும் அதிபரோடும் தொடர்பு கொண்டு தம் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியையும் ஒழுக்க வளர்ச்சியையும் உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும் இனி மாணவரின் கல்வி நலம் பெறத் தேவையான வாய்ப்புக்களையும் வசதிகளையும் தேடிக்கொடுக்கும் பணி பெற்றோர்கள் பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் என்போரைச் சார்ந்ததாகும். மாணவர் சுமுகமாகவிருந்து கல்வி கற்றற்குரிய கட்டடவசதி தளபாடவசதி ஆய்வுகூட வசதி நூல்நிலைய வசதி ஆகியவற்றை செவ்வனே செய்து கொடுக்க வேண்டிய பொறுப்பு இம்முத்திறத்தாரையும் சார்ந்ததாகும். இதை இவர்கள் பாரதியின் கண்கொண்டு நோக்குவார்களா? அறிவொளி பரப்புகின்ற வித்தியாலயங்களுக்கு பெரும் பணிபுரிந்து புண்ணியவான்களாகும் பெரும்பேற்றைப் பெறுவார்களா?

நமது ஊரில் உயர்கல்வி அளிப்பதற்குரிய ஒரு தனிக்கல்லூரி உரும்பராய் இந்துக் கல்லூரியே இது இவ்வூருக்கு மட்டுமன்றி அயலூர்கட்கும் ஒப்புயர்வற்ற சேவை புரிகின்றது. இக்கல்லூரியின் கல்வி வளர்ச்சி கணிசமான அளவிற்கு வளர்ந்திருப்பதை பரீட்சைப் பெறுபேறுகள் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கின்றன. இவ்வளர்ச்சியை மேலோங்கச் செய்கின்ற புறவளர்ச்சியாகிய கட்டிட, தளபாட, நூல்நிலைய வளர்ச்சிகளில், இதன் தரத்தையுடைய பிற கல்லூரிகளுடன் ஒப்பு நோக்கும்பொழுது இதன்நிலை மிகவும் தாழ்வானதே. இதைப் போக்க, இக்கல்லூரியைச் சகல துறைகளிலும் உயர்நிலையில் ஆக்க முற்கூறிய ஐந்து சாராரதும் ஆர்வமும் அக்கறையும் ஏகோபித்த ஒத்துழைப்பும் இன்றியமையாததாகும் வித்தியாலயங்கள் வளரக் கல்வி வளரும் கல்வி வளர ஊரின் முன்னேற்றம் ஈடு இணையற்று உயரும் என்பதில் எட்டுணையும் சந்தேகமில்லை. எனவே சம்பந்தப்பட்ட சகலரும் விழிமின் எழுமின் இயன்றதைச் செய்மின் என இக்கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தின் பேரால் சகலரையும் பணிவுடன் வேண்டுகின்றேன்.

250130

செ. ஐயாத்துரை
செயலாளர்
உ. இ. க. அபிவிருத்திச் சங்கம்

University of Jaffna
250130
Library
ARCHIVES
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Tribute to a Teacher

By A Colleague

It was in January 1972 that I met this Teacher for the first time. I was so impressed with her sense of duty that I began to observe her closely in the school. Handling of classes was marvellous, irrespective of age, sex or attainment. Besides teaching she shared wide range of responsibilities. She was patron of A. L. students union; teacher in charge of girl guides, discipline, and Examinations. Though overburdened with work, she discharged them with ease and to



UNIVERSITY OF JAFFNA LIBRARY

the satisfaction of all with a smiling face. All these attributes I thought could make her a good principal. But the post eluded her and she never felt sorry as she was not ambitious. But her services to the Girl guide movement was recognised and hence she was appointed the District Commissioner. The teacher I refer to is no other than **Mrs. Saratha Perairavar** a distinguished old student who has retired from Urumpirai Hindu College after a period of 25 years of dedicated service in the teaching profession.

What is the secret of her success? Besides her charming personality she had the will power She was determinate and resolute. She would not be disheartened by failures. She had the spirit of Florence Nightingale of Nursing fame. She would

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

not say "No" to anyone, if it was in the interest and the welfare of the school. All those who knew her would not dare to contradict her. Her ways were pleasing that she commanded respect from one and all.

All college functions found her at the helm of affairs. What had been considered cumbersome and dangerous or risky was tackled by her with great ease, firmness and strength of character. In other words what was impossible for others was possible for Mrs. Perairavar. It is not exaggeration if I say that her spirit wandered from the gate to the dais (stage) in all college functions. She was always prepared to face criticism with absolute calmness.

Her transfer, rather her retirement has created a big void that is difficult to fill for a long time. Of course even here she has chosen the wise step that is becomming of an ideal wife. she has joined her husband in Nigeria. Her dedicated service in Sri Lanka has earned her a place in the teaching service in Katsina. What Urumpirai Hindu College and the village in general has lost Katsina has gained. I believe that those who knew Mrs. Perairavar will agree with the sentiments expressed herein.

---

'Education is the manifestation of the perfection already in man'

— *Swami Vivekananda*

'That knowledge which purifies the mind and heart is alone true knowledge, all else is only negation of knowledge'

— *Sri Ramakrishna*

'Silence is the element in which great things fashion themselves'

— *Alexander of Macedon*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARCHIVES

உள்ளூர் உற்பத்தி விளைபொருட்களின்
ஏஜன்சி விற்பனையாளர்

ராஜா ஸ்ரோர்ஸ்
54, 4-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

உரும்பராய் இந்துக் கல்லூரியின் வளர்ச்சியைக் காண்பிக்கும்
"வித்தியா"
மாணவ சமுதாயத்திற்கு மேன்மேலும் நற்பணியாற்ற
எமது நல்வாழ்த்துக்கள்

★

ஸ்ரீ சண்முகநாத அச்சகம்
சண்முகநாதன் புத்தகசாலை

கே. கே. எஸ். வீதி, — யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 285 ஆரம்பம்: 1906

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் கல்லூரிச் சஞ்சிகைக்கு எமது ஸ்தாபனத்தின்
ஆசிகள் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**வீடு கட்டும் சொந்தக்காரருக்கோர் அரிய வாய்ப்பு**

பெருந்தொகைப் பணச் செலவில் வீடுகளையோ கட்டிடங்களையோ நிர்மாணிக்கும் நீங்கள் உங்கள் விருப்பத்துக்கேற்ற அழகு, அமைப்பு, கவர்ச்சி ஒருங்கே அமைவதற்கு மரவேலை அமைப்புகளும் தளபாடங்களும் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன.

உங்கள் தேவைகளை எங்களுடன் கலந்து ஆலோசியுங்கள். எந்தவிதமான மரப் பொருட்களையும் நல்ல இன மரங்களால் நவீன டிசைன்களில் பயிற்சியுள்ள தொழிலாளர்களினால் குறுகிய காலத்தில் நிர்மாணித்து குறிப்பிட்ட இடத்துக்கு கொண்டு வந்து தருவதற்கு நாடுங்கள்.

**யூனிவேர்சல் றேட்ஸ் அன் இன்டஸ்றீஸ்**

(நவீன மர யந்திர சாதன தொழிற்சாலை)

பலாலி வீதி

(உரும்பராய்ச் சந்திக்கு அருகாமையில்)

உரும்பராய்

---

**தரமான அச்சடிப்புக்கு**

# திருமகள் அழுத்தகம்

37, பிரதான வீதி

சுன்னாகம்

தொலைபேசி: 315

Printed at Sri Sanmuganatha Press, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org